# நளோபாக்கியானம்.

இது,

கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

திருவல்லிக்கேணி

வைத்தமாநிதி-முடும்பை-

## சடகோபராமாநுஜாசாரியரால்

பல கையெழுத்துப்பிரதிகளைக்கொண்டு

பரிசோதிக்கப்பட்டு,

நல்லூர்

## கல்யாணசுந்தரசாஸ்திரியால்

கும்பகோணம்

சாரதாவிலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

பிலவங்க௵ பங்குனி௴

1908.

விலை ரூ. க.

COPYRIGHT REGISTERED.

# சருக்கங்களின் பெயரும், திருவிருத்தத் தொகையும்.


| | | பக்கம் | செய்யுள். |
|---|---|---|---|
| | காப்பு. ... ... | | |
| | கடவுள் வாழ்த்து. ... ... | ,, | கஉ |
| | வாழ்த்து. ... ... | ங | க |
| | நூல்வரலாறு. ... ... | ,, | |
| | அவையடக்கம். ... ... | ,, | [illegible] |
| க. | நைமிசாரணியச் சருக்கம். ... | ச | கருங |
| உ. | கைலாசச் சருக்கம். ... ... | உங | கூ0 |
| ங. | சுகந்தராசலச் சருக்கம். ... ... | ஙக | சஉ |
| ச. | பிரமதேவரருச்சனைபுரிந்த சருக்கம். ... | ஙசு | சஉ |
| ரு. | பிரமதீர்த்தச் சருக்கம். ... ... | சஉ | உசு |
| சு. | பஞ்சாக்கரச் சருக்கம். ... ... | சசு | எஅ |
| எ. | அக்கினிதீர்த்தச் சருக்கம். ... | ருசு | அஉ |
| அ. | அகத்தியர்க்கு மணக்கோலங்காட்டிய சருக்கம். | சுசு | உங |
| கூ. | சந்தசாகரம்வரவழைத்த சருக்கம். | எ0 | சரு |
| க0. | சமுத்திரராசன் தேர்ப்பேசராய்ப்பணிந்து மீண்ட சருக்கம். ... | எசு | உசு |
| கக. | பிரமதேவர் வரம்பெற்ற சருக்கம். | எகூ | ஙங |
| கஉ. | ஐராவதம் வரம்பெற்ற சருக்கம். ... | அச | ஙசு |
| கங. | சுமதி காந்தனையடைந்த சருக்கம். | அகூ | ச0 |
| கச. | சங்குகன்னச் சருக்கம். ... | கூச | உங |
| கரு. | கிராதமோட்சச் சருக்கம். ... | கூஎ | ஙங |
| கசு. | தருமசேனச் சருக்கம். ... | க0உ | சகூ |
| கஎ. | தீர்க்கதுண்டச் சருக்கம். ... | க0அ | உரு |
| | எக்கியகுத்தச் சருக்கம். ... | ககக | கஉ |
| | கோவிந்தராத்துவசச் சருக்கம். ... | ககங | உ |
| உ0. | பிரமதேவர் நாரதற்குத் தலவிசிட்ட முரைத்த சருக்கம் | ககரு | உ0 |
| உக. | மாயவனருச்சனைச் சருக்கம். ... | ககசு | உ0 |
| உஉ. | தேவர்களருச்சனைச் சருக்கம். ... | கஉஉ | கக |
| உங. | பிரமதேவர் நாரதற்குத் தீர்த்தமான்மியமுரைத்த சருக்கம். ... | கஉங | உஅ |
| உச. | கழுகுமோசனச் சருக்கம் ... | கஉஎ | க0 |
| உரு. | வீதிவிடங்கச் சருக்கம். ... | கஉஅ | உஅ |
| உசு. | அமர்நீதிநாயனார் சருக்கம். ... | கஙஉ | உசு |
| | ஆக திருவிருத்தம் | | க0கங |

சிவமயம்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஆண்டார் துணை

# நல்லூர்ப்புராணம்.

## காப்பு.

காசிவிநாயகர்.

இருவினைவெண்டிரைமாய்க்கருங்கடலைந்தணித்தேறற்றியெண்ணிறைந்தற்
பொருவருமாணவச்சேறு* கருணைநீராற்கழுவிப்போக்கிப்போகா
நிரதிசயானந்தநெடுநிலவெறிப்ப†வுயிர்முத்தநெடியதாய
மருவுநனதணியாகமகிழ்காசிவாரணத்தைவணங்கிவாழ்வாம்

## கடவுள் வாழ்த்து.

கலியாணசுந்தரேசர்.

உலகெலாம்படைத்தருளிநிலைபெறுத்தியிளைப்பொழியவொடுக்கிமீடடுந்
தொலைவிலாவினைப்பயன்கடய்ப்பவவை‡ திரோபவித்துந்தொடர்ந்துநீங்க
வலகிலாணவச்சந்தி§யாவரணம்விடநீக்கியருளாநிற்குங் [கா
தலைவர்மேதகுநல்லூர்ச்சவுந்தரநாயகரவர்தாடலைமேற்கொள்வாம் (க)

சிரீசுந்தரியம்மை.

பரையாதியைவகையாயருளாகியானந்தப்பரவையாகி
யுரைசாலும்விந்துமோகினிமகாளிமற்றுமெல்லாமுதிப்பச்சார்ந்து
புணரிச்சத்தியும்வடிவுங்கொணுதியனைத்துமுக்கட்புனிதர்க்காகி
யுருமாறைநல்லூர்வாழ்திருமலைச்சொக்கியைநாளும்வழுத்தல்செய்வாம்.()

விநாயகர்.

கங்கைநெடும்புனலினைத்துங்காளிந்தியெனக்கட்டக்கலுழிசாய்ந்துந்
திங்களிளம்பிறைமுரிந்தமருப்பாமென்றயிர்த்தெடுத்துச்சேர்த்துமிவ்வா
றங்கணர்செஞ்சடிலநெடுங்கானில்விளையாடியுமையம்மைநோக்கிப்
பங்கயக்கண்முகமலரவருமொருவாரணத்திருதாள்பணிந்துவாழ்வாம். (ங)

---

* 'பொழிகருணைக்குளிர்நீராற்கழுவிப்போக்கி' என்று. பிரதிபேதம்

† 'வுயர்' என்று பிரதிபேதம்.

‡ 'பயன்கடய்ப்பவே' என்று பிரதிபேதம்.

§ 'யாவரணவிடநீக்கி' என்று பிரதிபேதம்.

### சுப்பிரமணியர்.

தோட்டிளம்பூந் துணர்கொழுதித் துதைந் தாடியஞ்சிறையசுரும்பினொடு
பாட்டிளவண்டினமுரலுமலர்க்கூந்தலொருகுறத்தி மணத்தண்ணறுந்
கோட்டிளமென்முலையுழக்கமுகையுடைந்துநறவூற்றுங்குழங்கன்மாலை [ம்.
மோட்டிளம்பன்னிருத்தடந்தோண் முருகனிருபதமுளரிமுடிமேற்கொள்வா

### திருநந்திதேவர்.

மந்தாரநறுந்தெரியற்செழுமணமும்பங்கயப்பூமணமு ... கொந்
தாரும்பசுந்துழாய்ந்தொடைமணமுமணந்துகுடிகொண்டுசோரப், பைந்
தாமங்கொண்டதொருபொற்பிரம்புதனதுசெங்கைப்பதுமங்கொண்டு, சந்
நாருவ்குயிலைமலைக்காவல்கொண்டோன்பதமுளரிநலைமேற்கொள்வாம். ()

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

முள்ளரையமுளரிமலர்த்தவிசிருக்குநான்முகனுமுகுந்தனுமறு
முள்ளரியசோதிமயமாகியநம்பெருமானையொருபொய்கைக்கே
கள்ளனிவனெனத்தனதுகண்மலர்கள்பிசைந்தழுதுகாட்டாநிற்கும்
பிள்ளைமலர்த்தாள்பிறவிப்பெருங்கடற்குப்புணையாகப்பிடித்துவாழ்வாம்

### திருநாவுக்கரசுநாயனார்.

கொற்பயிலும்வெள்ளிலைவேற்கருந்தடங்கட்பசுங்கிளியோர்கூற்றின்வை
சிற்பரமனைநெஞ்சந்தேநாத்தழும்புந்திறமேத்திச்சிக்யாந்த [குஞ்
கற்புணையாற்கருங்கடலைக்கடந்துபோந்தவன்கருணைக்கடலின்மூழ்கு
சொற்பயினுவலன்கமலத்துணைப்பதங்கள்சென்னிமிசைச்சூடிவாழ்வாம்.

### சுந்தரமூர்த்திநாயனார்.

பொருவேலைக்கடற்படுத்தநாகணைப்பள்ளியினுவப்போதின்மீது
வருவானுமின்றளவுங்காணுநபதயுகளவனசஞ்சேப்பத்
தரைமீதிலுரையாமற்றொருபரவைப்பரவைமனைதனக்குச்செல்கென்
றிருகாலுநடத்துதிருநாவலூர்நாயலன்றளிறைஞ்சிவாழ்வாம். (அ)

### மாணிக்கவாசகசுவாமிகள்.

எக்கதியிற்புக்குழன்று திரிந்தாலுமெமைமேற்கொண்டிருப்போர்நம்மை
யக்கதியிற்பேர்ந்துமேலருங்கதியிலுய்ப்போமென்றறிவிப்பார்போற்
றொக்கநரிக்குலமனைத்துந்துரங்ககதிசெலநடத்ததொடர்ந்துபோற்றி
முக்கணனைப்பரசுமொருகவியரசினிருசரணமுடிமேற்கொள்வாம். (கூ)

### அமர்நீதிநாயனார்.

தன்னையேகோவணமாச்சாத்தினன்காணென்பதுநோற்றுணமந்தப்
பொன்னைநேர்கோவணத்திற்கிணையாகச்சிந்தாந்தப்பொருளீதென்ன
முன்னைவானவனிறுத்துமுத்திநலங்கொடுத்தருளுமுறைமைபெற்ற
மன்னராமமர்நீதிநாயனாரடிக்கமலம்வணங்கிவாழ்வாம். (௧0)

அறுபத்துமூவர்.

எவராலுஞ்செயற்கரியதிதுவிதுவென் றதிசயித்தேயெவரும்போற்றக்
கவரிதவன்பதனாற்பலவேறுபத்திமையின்கடமைபூண்டே
யுவராழிநஞ்சமுதுண்டெம்பிரைக்காத்தருள்புரிந்தவொருவற்காளாந
தவராசரொன்பதிற்றேழ்தலைவர்பதப்புண்டரிகந்தலைமேற்கொள்வாம்

மற்றைச் சிவநேசர்கள்.

எக்கால[illegible]ிருப்பான்பரவைகடைந்தமுதருந்தவிமையோரோடெ
தொக்காலத்தினுநாகப்பள்ளியினுந்துயிலுமவன்சூழ்ந்தநாளிற்
புக்காலத்துநுமமுதமாக்கியகோனடித்தொழும்பூண்டபோர்மேன்
முக்காலத்தினுமுளராமடியர்சேவடிக்கமலமுடிமேற்கொள்வாம். (௧௨)

## வாழ்த்து.

அந்தணாளர்கள்வாழ்கவானினங்கள்பெருகுகவானமரர்மல்க
வந்துமாமழைபொழிகவேந்தனுங்கோனுருகுகவுலகமலிகநாளு
மெந்தையாரைந்தெழுத்தும்வெண்ணீறும்விளங்குகபாரெவையுமாகி
முந்தைநான்மறைநெறியுஞ்சைவநெறியுந்தழைகமுறையாலன்றே.

## நூல்வரலாறு.

சூதமுனிவரன்றெரியவடமொழிமாக்கடலினிடைத்தொகுத்துத்தூக்கி
வேதவியாதன்பகர்ந்தநல்லூர்மான்மியமதனைவிருப்பினாலே
யாதிமறையவர்சைவர் *தலந்தானமாகியுள்ளோரன்பூண்டோ
ரோதுகெனப்பசுந்தமிழால்யானுமவர்பணிமேற்கொண்டுரைக்கலுற்றேன்.

## அவையடக்கம்.

வேறு.

ஆசில்வண்டமிழாரியமுற்றுணர்
மாசனம்பலவாழுநல்லூரிற்பான்
பேசவந்துறுபெற்றிகொற்சேரியி
னூசிவிற்பதற்கொற்றதொப்பாமரோ. (௧)

நல்லசொற்பொருணன்புலவோர்க்கெதிர்
சொல்லலுற்றதுணிவையென்சொல்லுகேன்
மெல்லிதாமினிவெய்யவர்க்கெதி
ரல்லைநீக்கற்கமைந்ததொப்பாமரோ.

திருவிருத்தம்-௧௭

* 'தவந்தானமாகி' என்று பிரதிபேதம்

# நல்லூர்ப்புராணம்.

## முதலாவது

## நைமிசாரணியச்சருக்கம்.

---

செற்றநீக்கியசிந்தையர்செய்கையி
னற்றமில்லவரைம்புலன்வென்றவர்
பெற்றமூர்திதன்பேரருள்பெற்றுளார்
முற்றுமோதியுணர்ந்தமுனிவரார். (௧)

வெய்யவேனில்வெதுப்புமந்நாளிடை
யைவகைநெருப்பின்னடுவத்தினும் *
பெய்யுமாரிவயிற்பெருக்கத்தினுஞ்
செய்யுமாதவமுற்றியசெய்கையார். (௨)

பாரும்விண்ணும்பழிச்சும்படிமையா
ராருமொப்பவருள்புரிமேலவர்
மேருவெற்புவிழுதுவிட்டாலென
வாருஞ்செய்யசடைமுடிவாய்ந்துளார் (௩)

பேறுபூத்தபிராட்டிபிரிவிலாக்
கூறுபூத்தகுழகனுக்கன்பினார்
வீறுபூத்தவெண்பூதிமிளிர்தலா
னீறுபூத்தநெருப்பன்னமேனியார். (௪)

பஞ்சழுத்தினும்வாடும்பதயுக
வஞ்சிபங்குடைவள்ளல்வடிவமாய்
விஞ்சுவெம்பவவேலைவடவையா
மஞ்செழுத்துமழுத்தியசிந்தையார். (௫)

நக்கனாருணைக்கநயந்திலா
விக்குவேளையிருந்தமைகாட்டல்போற்
றக்கனார்மகஞ்சாய்த்தவர்தண்ணளி
யக்கமாமணியாரம்புனைந்துளார். (௬)

திங்கண்மாசுதிரைத்திடல்போலவுங்
கங்கைகாளிந்திபாய்தல்கடுப்பவுந்
துங்கமாணினுரிவைதுயல்வரப்
பொங்குநீறணிமார்பிடைப்பூண்டுளார். (௭)

---

* 'நெருப்பின்னழுவத்தினும்' என்று பிரதிபேதம்.

உண்டிகாய்கிழங்கூழிலையாதிய
கொண்டுநீள்பகல்போக்கியகொள்கையார்
மண்டுதண்ணளியோடுசன்மீரர்க்கம்போற்
றண்டுருண்டிகைதன்னொடுந்தாங்கினர். (௮)

புருவநாபபணிற்கண்கள்புகச்செய்து
[illegible]நாசிநுனிவயின்வைத்துகந்
தருவமானவான்மாவையான்மாமடுத்
துருவவோவியமொப்பவுறைகுவார். (௯)

பருகுவாரிற்பரன்கழல்சிந்தைவைந்
துருகியுண்ணெக்குரோமஞ்சிலிர்ப்புறக்
கருணைவாரிதிளைத்திருகண்கணீ
ரருவிபாயவகமகிழ்வெய்துவார். (௧0)

அழிவிலாதவவித்தைதவன்சேதகம்
வழுவின்ஞானவரநதிவாரியாற்
கழுவிச்சச்சிதானந்தக்கடலிடை
முழுகுவாரடுமுப்பகைவென்றுளார். (௧௧)

இன்னதன்மைமுனிவரர்யாவரு
மன்னவூர்தியமர்ந்துறைநாட்டகந்
தன்னையுற்றிருதாமரைத்தாண்மலர்
முன்னிறைஞ்சிமுறைமையிற்போற்றினர். (௧௨)

போற்றிநிற்றலும்புண்டரிகத்தவ
னேற்றமிக்குளிரெய்தியதியாதென
நோற்பதற்கிடநோக்கிவந்தாமெனச்
சாற்றினரெதிர்நான்முகன்சாற்றுவான். (௧௩)

நன்றுநன்றுநீர்நாடிவந்துற்றமை
யென்றுநேமியிருங்குசையுழலவ
னென்றுவிண்டினிதூரவிட்டதுபோய்ச்
சென்றுவீழ்தலமேதவஞ்செய்தலம். (௧௪)

ஆமிநேமியடுத்துமெய்யந்தணிர் *
போமினென்றுபுராதனன்கூறலுங்
காமமாதி†கடிந்தவரத்தகை
நேமியோடும்விடைகொண்டுநீங்கினர். (௧௫)

* 'மெய்யந்தணர்' என்று பிரதிபேதம்.
'கடந்தவர்' என்று பிரதிபேதம்.

நீங்கியந் தணர்நெறிபோய்வீழ்தல
மாங்குவைகிய நற்கபி தானந்தா
னோங்குநைமிசமென்றினிதோதியே
பாங்கின்மெய்த்தவம்பற்பலவாற்றினார். (கசு)

(வேறு)

அனைய தன்மைய நைமிசத் தணிநலமதனை
யினைய தன்மையதெனவுரைப்பவரெவரெனினுங்
கனைகருங்கடனிலையினைக்காண்பவர்கடுப்ப
நுனிவிலாதவாற்சிலசொல்லுதுமன்றே (கஎ)

செற்றமில்லதுசிறுமையிற்றீர்ந்ததுதெறுமுங்
குற்றநீக்குவதருணலங்கொழிப்பதுநாளு
மற்றமில்லதுபற்பலவணிநலந்தழைத்து
நற்றவப்பயிர்விளைப்பதுநைமிசாரணியம். (கஅ)

சீதமாமதிசென்னியின்மிலைச்சியதிறத்தார்
போதுலாங்கணைக்காமனைப்புறங்கண்டபொலிவால்
வேதபாரகர்வியந்தடிநிழன்மிடைதலினா
னாதனாரெனச்செழித்ததுநைமிசாரணியம். (ககூ)

சங்கமேந்தியதன்மையாற்றிகிரிதாங்குதலாற்
பொங்குபாசொளிதழைத்தலாற்புவிபுரந்திடலாற்
றுங்கமாமணிவயங்கலாற்றிருக்கடற்பிறந்த
நங்கைகாந்தனையொத்ததுநைமிசாரணியம். (உ0)

தேன்முகத்தலருறுதலாற்செவ்வியநிலையால்
வான்முகந்தொடுதிசைமுகமணந்தருண்மாண்பா
னான்முகத்தலர்மறையொடும்விளங்குநோன்மையினா
னான்முகத்தயனொத்ததுநைமிசாரணியம். (உக)

மறுவில்வெண்டிங்களாமெனப்பளிக்கறைவயங்க
வுறுபுனற்புளினங்கள்வெண்ணிலாவொளியொழுகக்
கறுவொடுந்துரந்தமிருட்படலங்கள்கடுப்ப
நறுமலர்ப்பொழில்செழித்ததுநைமிசாரணியம். (உஉ)

கதிர்கொண்மாமணிகையரிக்கொண்டுபொன்கொழித்து
முதியகாரகின்முறித்திருமருங்கினுந்திரைத்துப்
புதியநாண்மலர்க்குங்குமஞ்சாந்தொடும்பொருது
நதிகளீறிலபொலிந்ததுநைமிசாரணியம். (உங)

அண்ணலன்புறுமாதவர்சிந்தையினாழ்ந்து
வண்ணவாரிசமவர்முகமாமெனமலர்ந்து
திண்ணிதாமவர்செயலெனலாகியேநெளிந்து
நண்ணுமோடைகண்மலிந்ததுநைமிசாரணியம். (௨௪)

அளிபயின்றதிசீதளமாகியேகண்ணீர்த்
துளிபயின்றக*மலர்க்கஞ்சநறொடுநெகுவன்றித்
தெளிபயின்றுறுதவரெனநிறைந்துநீர்ச்சிறந்த
தளிபயின்றபூந்தடத்ததுநைமிசாரணியம். (௨௫)

வாகைமாயனுமவன்முன்னையவனும்போன்மகிழ்ந்து
வேகயானையுமுடங்குளைமடங்கலுமேவத்
தோகையாடலுந்துந்தியம்பணம்விரிந்தடுத்து
நாகமாடுதல்புரிவதுநைமிசாரணியம். (௨௬)

பருவமாறுந்தம்பண்பினைவழாநிலைபயப்ப
வருதல்கூடினும்வசந்தகாலத்தியன்மான
வுருவநீண்முடியும்பாதுலகமேயொக்குந்
திருவநீள்பொழில்செறிந்துயர்நைமிசாரணியம். (௨௭)

ஒளிக்கவின்பெறுமதியிடைப்படிந்தழலொப்பப்
பளிக்கறைந்தலமடுத்துமான்கன்றுகண்படுக்கு
முளக்கணோக்குடையுறுதவர்சாலைகடோறும்
விளக்கமாமெனமாமணிவயின்வயின்மிளிரும். (௨௮)

பூத்தகோங்கமும்பூந்துணர்ப்பூவையுஞ்சிவந்து
மாத்தளிர்த்தவுமாதவர்வழிபடல்புரிய
மூத்தவேதனுமுகுந்தனும்புராரியுமாகு
மாத்தர்மூவருமென்னவேயணிநலங்கவினும். (௨௯)

அரத்தமூட்டியதெனத்தளிர்குழைத்துயரசோகம்
புரந்தல்செய்தருள்புராந்தகற்பொருவவன்னவற்கு
விருந்தவேதியரெடுத்திடுந்தீபம்போல்விளங்குந்
திருத்தமீக்கொளநிரைநிரைபூத்தசெண்பகங்கள் (௩0)

அடுத்தசெந்தளிர்ச்சூதமேயுதயவெற்பதனிற்
றொடுத்ததேனிழல்பரிதிமண்டிலமதிற்சோர
விடுத்ததாரைகளிருளினைப்பருகியவெய்யோன்
மடுத்ததன்னுடைக்கிரணங்களுமிழ்வதைமானும். (௩௧)

---

‘மலர்ந்தஞ்சமநறொடுநெகுவன்றி’ என்று பிரதிபேதம்.

பறந்தல்செய்கலாக்குளவியும்பூவையும்பாயாத்
திறத்தவேங்கையும்வாணியுமுமையுமத்திருமா
னிறத்துவாழ்தருசெல்வியும்போன்மெனநின்றதேம்
புறத்துவண்டினங்கூட்டுணமலர்வனபொதும்பர். (௩௨)

காடுகொள்வனசமிதையுங்காழகிற்குறடு
மாடுகொள்வனதருப்பையும்பரப்பும்வாலுகமுங்
கோடுகொள்வனவலரியுங்கனிகளுங்குழியி
னூடுகொள்வனகிழங்குநீடொளிமணிவிளக்கும் (௩௩)

மடல்விரிந்தலர்பூந்துணர்மலிவனவெங்குங்
கடல்விளைந்தவின்னமுதநேர்கனிவகையெங்கு
முடைதிரைக்கடலெனநறவொழுகுவதெங்குங்
குடைநறும்புனனிறைவனகுளம்பலவெங்கும். (௩௪)

இன்னநல்வளந்துவன்றியநைமிசமெனும்பே
ரன்னநல்வனத்தருந்தவர்முனிவரரன்பான்
முன்னைநூன்முறைச்சத்திரமகவினைமுற்றிக்
கன்னிபாகனைப்போற்றினருறைகின்றகாலை. (௩௫)

மானினங்களுமரைகளும்வழிவந்துகாட்ட
வீனமற்றுயர்மாதவிபூம்பந்தரெடுப்பத்
தேனிறைத்தலர்பாதவஞ்சேவடிசிந்தக்
கானிடைப்படர்கருணைகூர்காலமேகடுப்ப (௩௬)

வெள்ளைநீற்றொளிகுலவியமேனியான்மிளிரும்
வள்ளலக்கமாமணிவடந்துயல்வருமார்பன்
கொள்ளைவெம்பவக்குறும்பெறிதவரொடுங்குழுமித்
தள்ளருந்தவச்சூதன்வந்தவருழைச்சார்ந்தான். (௩௭)

சார்ந்தசூதனையெதிர்கொண்டுதவத்துறைபுரப்போ
ரார்ந்தவாதரவுவட்டெடுத்தொழுகவாங்கவற்கு
நேர்ந்தபாத்தியமுதலியநெறிமையினீந்து
வார்ந்தநீடொளியாதனமளித்தனர்வாங்கி. (௩௮)

வந்தசூதமாமுனிவரன்வதனபுண்டரிகத்
தந்தணாளர்கள்விழியளியினங்கள்வீழ்ந்தளவச்
சிந்தையின்புறநன்னயமொழிபலசெப்பித்
தந்தமன்பினுளளவளாயாதரந்தழைத்தார். (௩௯)

ங்கவாரிதிமாமதிகாண்டலுந்தழங்கிப்
பொங்குமாறுபோன்மாதவருடலகம்பூரித்
திங்குநீவரவெந்தவம்பலித்தனமென்று
மங்கைபங்கினன்மான்மியம்வினவுவான்வலித்தார். (௪0)

பாசவல்லியேரியுங்கூன்புள்ளமாய்ப்பார்மீ
தாசகன்றுழல்பிறந்தைமாக்கடலுக்குத்தரமா
யாசைபோகியவவிச்சைவல்லிருளிற்காதபமாய்
மாசிலாதனமறைப்பொருள்விரிப்பனவாகி. (௪௧)

காயும்வெங்கலிக்கலுழிக்குக்கதகமாயின்ப
மேயும்வீட்டுலகேறுதற்கேணியாயிசைந்த
வாயுமூவறுபுராணமும்வியாதனுமருள்கூர்
நீயுமன்றிமற்றியாவரேநெறிதெரிந்துணர்வார் (௪௨)

ஆதலாலுனதானனமலரினனைத்துங்
காதல்கூர்தரக்கேட்குமாறுவந்தனங்கனிவால்
வாதராயணன்மலரடிவணங்கியசூத
வோதுவாயெனவோதியேபின்னரொன்றுரைப்பார். (௪௩)

நிலஞ்செய்மாதவமெனவருநெடுந்தவச்சூத
வலஞ்சுழித்தலமான்மியமுன்னர்நீவகுத்தாய்
புலங்கொளுஞ்செவிபடைத்ததற்குப்பயன்பூப்பக்
கலங்கலின்றியாங்கேட்டுளங்களித்தனமிப்பால். (௪௪)

பள்ளநோக்கியபுனலெனப்பரம்பரனல்லூ
ரெள்ளரும்புகழ்ப்புராணம்யாமின்றுகேட்பதனுக்
குள்ளமாதரவுற்றதான்மற்றதனுண்மை
வள்ளனீமொழிவாயெனவகுத்தவன்மொழிவான். (௪௫)

துனிவின்மெய்த்தவத்தந்தணீர்தூநெறிப்படர்வான்
வினவுமித்திறநன்றுநன்றெனவிளம்பி
யினையதித்துணைத்தென்னயாணியம்புமத்தகைத்தோ
வினையதாயினுமறிந்தவாறியம்புவனன்றே. (௪௬)

என்னமாதவச்சூதனுமியம்பயன்பதனுன்
முன்னமேவியசௌனகன்முதலினோர்முகம்பார்த்
தன்னவூர்திநேரந்தணீர்கேண்மினென்றுய்ந்து
கன்னன்மென்றெனக்கட்டுரைபுரிதன்மேயினனால். (௪௭)

நற்றவத்தினீர்கலங்கெழுசுந்தரநகரி
னுற்றநல்வளமுரைத்தபின்மான்மியமுரைப்பன்
பெற்றமூர்தருபிஞ்ஞகனருளினுமென்னு
மற்றமின்றியவதன்வளமுரைப்பதற்கமைந்தான் (௪௮)

ஓதுமந்நகர்சுந்தரநகரெனவுலக
மாதவத்தினிருரைக்குமான்மற்றதன்மாண்பு
பேதையேனறிந்துரைப்பதோவாயினும்பெரிதுங்
காதலாற்சிறிதியம்புவனென்றுகட்டுரைப்பான். (௪௯)

## யாற்றுச்சிறப்பு.

வேறு

சையமால்வரையிடத்தினிற்றோன்றித்தராதலந்தனக்கொருதாயாய்ப்
*பெய்யுமாமழைதான்†மறுப்பினுங்கோள்கள்பிறழ்ந்துதந்நிலைபெயர்ந்தி
ழைப்புமாதவத்தோருரையெனப்பொய்யாதறுசுவையமுதெனவொகி [டினை
வையமீதுறவிக்கடலகநிறைப்பவருவதுகாவிரிநதியே. (௫0)

சந்தனக்குறடுமேலமும்வரன்றிக்கடஞ்சினைக்குங்குமஞ்சாய்த்துச்
சிந்தூரமருப்புங்கவரியும்வீசித்தேக்கெறிந்திலவங்கஞ்சிந்தி
யிந்திரதிருவிலெனக்குலமணிகளிருகரைமருங்கினுங்கொழித்து
மைகதுடைக்களிநல்யானைபோற்கலித்துவருவதுகாவிரிநதியே. (௫௧)

குஞ்சராரணியந்திரிசிரப்பொருப்புக்குலவுமையாறுவண்குடந்தை
மஞ்சுசூழ்சோலையிடைமருதோங்கும்வளங்கொண்மாயூரம்வெண்காடோ
டெஞ்சலில்வினையபற்பலதானமிருகரைமருங்கினுந்தழைப்பச்
செஞ்சடைப்பெருமானருளெனப்பெருகிச்செழித்ததுகாவிரிநதியே. (௫௨)

சங்கமேவுதலாற்பற்பலதுறைகள்சார்தலாற்சந்தமார்தலினாற்
பொங்கொலியம்போதரங்கநண்ணுதலாற்பொன்மலிபூமலிந்திடலால்
வங்கநீள்வெள்ளக்கடன்மடுத்தலினல்வடித்தசெந்தமிழெனலாகி
யெங்கணுநிலவியணிநலங்கனியவியல்வதுகாவிரிநதியே. (௫௩)

தெள்ளுபூந்தரங்கம்பொலிதலாற்குழைபாய்செங்கயல்குமிழ்மிறிதலினாற்
கள்ளுலாங்கமலமலர்தலாற்பவளக்கடிகைமாநித்திலநிரையா
லள்ளல்பாய்ந்திலங்கும்வலம்புரியதனாலாழியுழ்ப்புட்குலமவற்று
லொள்ளியவராலால்யாமையான்மாதரொத்ததுகாவிரிநதியே. (௫௪)

---

* ‘பெய்ய’ என்று பிரதிபேதம்.
† ‘மறப்பினும்’ என்றும் ‘வறப்பினும்’ என்றும் பிரதிபேதம்.

கங்கைகாளிந்திவாணிபற்குனிவான்கவுதமைவைகைதண்பொருனை
யிங்கிவைமுதலாநதிகளுந்தடங்களெத்துணைக்கோடியும்வந்து
தங்குதண்டுறைசகலப்படியுமாலென நூல்சாற்று*மாற்காவிரிமேன்மை
யங்கண்மாநிலத்தில்யாவர்கட்டுரைப்பாரனந்தனுமனந்தநாவினனே. (ருரு)

## நாட்டுச்சிறப்பு.

அளவிலாப்பெருமைத்தாயவிப்பொன்னியணிநதிபாய்தலினுளம்
வளமெலாம்†கனிந்துதிருநிலமடந்தைமங்கல‡வணியெனமல்கித்
தளவவாணகையாள்பங்கினனமருந்தானமும்பர்பலதளமூழ்த்துந்
துளவமாலுதாங்கிகர்த்ததுவானுந்தொழுவதுசோழநன்னாடு. (ருசு)

பாளைவாய்க்கமுகுந்தாக்குறிக்குடக்காய்ப்பருமுடத்தாழையும்பராரைக்
கோளுலாய்பசுமுட்புறக்குடக்கனிகள்கொம்பிறப்பழுத்தவண்பலவு
நீளிருஞ்சினையகொழுங்கனிமாவுநெட்டிலைக்கரும்புவாழைகளு
மாள்வழக்கறுக்குஞ்சாலியுமல்லாவடவியொன்றில்லதந்நாடு. (ருஎ)

கொழுங்கதிர்ச்சாலிவேலிசாய்ந்தரம்பைக்கூன்புறப்பழக்குலைகுலுக்
கிச்,செழுஞ்சுவைக்கரும்பின்காடலைத்துந்தித்தேன்பொதிமாங்கனிசிதறி,
யெழுந்துமேல்§வெளிபோய்முப்புடைக்குடக்காயெற்றிநீள்வருக்கைமேற்
றூவிப், பழம்படுஞ்சடைத்தாற்றிளம்பெருங்கமுகின்பாளைவாய்வாளைபாய்
ந்துழக்கும். (ருஅ)

போற்றுநற்றருமாதிகள்கவையடியாப்போகமும்வீடுநீண்மருப்பாப
பாற்கடல்வயிறுசூழ்கொளுஞ்செருத்தல்பழனமும்பழம்பதிகளுமா
நாற்றிசைமுகமுமுலையொருநாள்காநாடொறும்வரைமுதலவற்றிற்
றேற்றுநால்வகையவமிர்தமுஞ்சுரக்குஞ்சுரபிவண்சோழநன்னாடு. (ருகூ)

தணவுதலரியவறங்களெண்ணான்குந்தளித்திடுதலாற்பசும்பொற்
கணமலையரசன்பாவையும்போலுங்காட்சியிற்றிருவையுமானு
நணுகுதல்புரிந்திட்டுழுதொறும்வளங்கணவநவமாகநல்குதலா
லுணர்தொறுமுணர்வுதருமருமறையுமொக்குமாற்சோழநன்னாடு. (சூ0)

வேண்டுநல்லுணவுபயந்திடும்விளையுள்விளைக்குநாந்தணர்துறந்தோர்
காண்டகுசிறப்பிற்றொலைவிலாப்பொருள்கள்கலத்திலுங்காலிலுந்தருவோ
ரீண்டுவதளப்பில்வளங்களால்விரும்பிமேலைநாட்டவருமெய்துவது
தூண்டுவாம்பரியிற்றிரையெறிபொன்னிசூழ்வருசோழநன்னாடு. (சூக)

* 'மாக்காவிரி' என்று பிரதிபேதம்.
† 'கனிந்த' என்று பிரதிபேதம்.
‡ 'வணியினமல்கி' என்று பிரதிபேதம்.
§ 'வெடிபோய்' என்று பிரதிபேதம்.

நனிபெயல்பெயன்மற்றின்மைமூடிகந்தீநவைபெறுபதங்கம்பைங்கிள்ளை
முனிவுசெயரசென்றினையவீதிகடீர்முறைமையாலரற்றவும்விளைவ
தினிதலாப்பகைவந்திறுத்தலானீதியிலாமையாதுண்டியின்மையினற்
றுனிவுகூர்ந்தேனைநாடொருங்குறினுஞ்சுமப்பதுசோழநன்னாடு (௬

உறுபசியோவாப்பிணியுடனெருவியொருபுடையதன்கலின்றிறுத்துச்
செறுபகைசோராராறலைப்போர்கடித்தொழிற்குறளைகூறுநர்கண்
மறமிகுகேழல்குடாவடிவெங்கைவஞ்சனைக்குறும்புமில்லதீர்ந்
துறைதொறும்பொன்னிபொன்கொழித்தென்றுஞ்சூழ்வருசோழநன்னு

அடுபகையநனாற்கெடுவதையறியாரரிதினிற்கெடுவகையுறினுங்
கடிமலர்ப்பழனந்தண்டலைகளினாகரங்களின்விளைவனபடுவ
வுடையதுதுரவுகேணியாறுறுவதொருபுடையாய்வளம்பயக்குந்
தடவரையழியாககரிபற்பலவுந்தழைப்பதுசோழநன்னாடு. (௬

வெம்பிணியிலாமைசெல்வமிக்குடைமைவிளைவின்பமேமமென்றின்ன
வைம்பெருங்கவினுங்கெழீஇயதுவாழ்வோரலமந்துவருந்துறுவகையா
றம்பமாகியநல்வளங்கடாந்தாமேசார்வதித்தகையனபிறவுஞ்
செம்பியர்புரப்பச்சுரப்பதுநாளுஞ்செழிப்பதுசோழநன்னாடு (௬

வேறு

வானளப்பனமாதிரமளப்பனவாசக்
கானளப்பனகரிவரமளப்பனகளிக்குந்
தேனளப்பனதிகிரிமாவெனவுலகெல்லாந்
தானளப்பனவளப்பிலதண்டலைநிலையே. (௬௬

சந்தநீடுவசண்பகவகுளங்கடழைப்ப
கொந்துலாமலர்ப்பாடலஞ்சரளங்கள்குழைப்ப
கந்திகுதநீள்வருக்கைகாகோளிபுன்னாக
மந்திபாய்ந்துகடாழைதேமாவிவைமலிவ. (௬௭

கொந்துலாமலர்துதைதவனகுரையளிகுமுறச்
சந்தநீடிசைமாங்குயின்மிழற்றுவதவழ்ந்து
மந்தமாருதங்குலவுவமஞ்ஞைகணடிப்ப
விந்திராதியருறைவதற்கேக்கறுந்தகைய. (௬௮

மாங்குயிற்குலமேழிசையெழுப்பலுமுயில்கள்
பாங்கினட்ல்செய்பணிமலர்த்தண்டலைதவழ்வ
தேங்கொள்கூந்தலுக்கிடும்புகையல்லதுசெறிந்த
பூங்கரும்படுநறும்புகையல்லதுபுயல்கள். (௬௯)

கயலுற்றோடரிக்கண்ணியர்கண்ணியிலகப்பட
டயலுற்றோடுதலறிகலாவாடவர்கடுப்பப்
புயலுற்றோடும்பொழும்பரிற்புனேமலர்மடலின்
மயலுற்றோடுவாவிமிடற்றளியினமாதோ. (எ0)

தென்றலஞ்சிறுகுழவிக்குமுன்றிலாய்ச்செழும்ப
மன்றவேனிலான்மருவவந்தாணியாய்மலிவ
வொன்றியாடுமாமஞ்ஞைகட்கரங்கமாயுறவ
வென்றிவேள்பசும்புரவிக்குப்பந்தியாய்மிளிர்வ (எக)

மடுத்துநோக்கியநாட்டநகள்வாங்கொணுவளர்த்த
வடுத்தவெய்யவனெழுபரிக்காவணமாவ
விடுத்தநேன்மழைபிலிற்றுவவெண்மணற்றலத்த
தொடுத்ததாரெனப்பூந்துணர்நாறுவசோலை. (எஉ)

உழவரோதையுமொழுகுநீரோதையுநாட்கோள்
விழவரோதையும்விதைக்குமாவோதையும் * விழையுங்
கிழவரோதையுங்குரவையிணோதையுங்கெழுமி
† மழவரோதையுமலிவனவளனுடைவயல்கள். (எ௩)

ஆலைபாயுநாரவமுமகன்பணையுழுநர்
மாலையேருரப்பரவமும்வளமுடிநடுமார்
காலையெய்துநர்குரவையினரவமுங்கலித்து
வேலையேழினுமெழுமடங்கெழுவளவிம்மி. (எச)

மணக்குமோதியர்மழலையைக்கவர்ந்தனவென்றாந்
தணப்பிலாதவைதண்டித்துக்கொள்ளுநர்கடுப்பக்
கணக்கரும்புகள்கழித்தியாப்புறுத்துக்கண்ணுடையா
விணக்குமாலையிட்டொறுக்குநரிடந்தொறுமாதோ. (எரு)

ஆலுமாதரார்மிடற்றினுக்கஞ்சியபூகங்
காலுமுத்துடன்மாணிக்கங்கையுறையாக
வேலுமாறுகொண்டேந்துபுநிற்பதுமானச்
சூலுபாளைகளுடன்பழுக்காய்க்குலைசுமக்கும். (எசு)

கலிகொள்வண்டினநறவுகூட்டுண்டுடன்களித்தே
யொலிசெயோதியருருவிற்குடைந்தனமென்றுப்
புலியடிக்கொடுங்காய்க்குலைபூவொடுங்கதலி
தலைவணக்குநர்போன்மெனவிடந்தொறுஞ்சாய்க்கும். (எஎ)

---

* 'விளையும்' என்று பிரதிபேதம்

† மழைவரோதையின்' என்று பிரதிபேதம்

குலவுவான்முடிநடுபவர்குரவைக்குவியந்து
பலவுமாவுமாதுளங்கமும்பசும்பொனுமறவைத்
துலவு*செம்பொன்மாணிக்கமுமுதவுதல்போல
நிலவுமென்பழங்கனிந்தனநிரைநிரைசிந்தும். (எஅ)

கானலம்புசெங்கமலத்தம்பூமடல்காலுந்
தேனலம்பியுந்தீங்கனித்தேறலுட்டிளைத்தும்
பூநறுந்துகளாடியும்பொருபுனல்வாளை
வானிலிந்திரவில்லெனவளைந்துமேல்வாவும். (எகூ)

தேன்கலூறியசெந்நெலும்வெண்ணெலுஞ்செறிந்து
வான்கணீடியக்கன்னலும்வாழையுங்கமுகுங்
கான்கொண்மாவுடன்வருக்கையங்கானமுமல்லான்
மீன்கணத்துணையாயினும்வெற்றிடமின்றால். (அ0)

குரம்பிற்காந்துவகொழித்திடும்பசும்பொன்செம்பவளம்
பரம்பிற்காநதுவவிடறியபன்மணித்தொகைகள்
வரம்பிற்காந்துவவலம்புரியுயிர்த்தவெண்முத்தங்
கரம்பிற்காந்துவகளையெனக்களைந்தெறிகழுநீர். (அக)

எருமைப்போத்துடனேற்றினஞ்சிலம்பப்பண்ணுறுத்தி
யுரிமைமள்ளர்களுழுந்தொறும்பாய்வனவெழுந்து
வரிவரான்மடிமுட்டலும்வரிமுலைசுரந்து
சொரியும்பாலலார்கமலங்கடோடுடைந்துகுதேன். (அஉ)

சங்குசூலுளைந்தலறிச்செந்தாமரைப்பொகுட்டி
னங்கணீன்றவெண்முத்தினைக்கருவெனவயிர்த்துப்
பொங்குநீடொளிப்பொலன்சிறைத்தோலடிச்செவ்வாய்ச்
செங்கணோதிமப்பேடைகள்சென்றடைகிடக்கும். (அஙு)

உழவர்சும்மையுமுறுபகடுரப்புநர்கலிப்புங்
குழுமிவான்முடிநடுபவர்குரவையுங்குயங்கைத்
தொழுவர்நெல்லரிவரவமுமரிபலதெருக்கு
மழவரோதையுமாறுமாறாய்த்தலைமயங்கும். (அச)

இட்டபோரழித்தெருமைவன்பகட்டினாற்றெழித்தாங்
கட்டமாகவைகளைந்துகாலுறுத்துநெல்லமலை
கெட்டைமேருமால்வரையெனக்கதிருடனிலவார்
வட்டமாமதிவலஞ்செய்வானினைந்தலம்வருமால். (அரு)

---

* 'செம்பொனுமாணிக்கமுமுதவுதல்போல்' என்று பிரதிபேதம்.

பழங்கொள்பண்டியும்*பாசிலைப்பண்டியும்பழுக்காய்த்
தழங்குபண்டியுமெல்லிலைப்பண்டியுந்தாழைச்
செழுங்குலைப்பண்டி†தன்னுடன்முதிரைநெற்சிறப்ப
வழங்குபண்டமும்பெய்பண்டியுந்தலைத்தலைமயங்கும். (௮௬)

ஆரமாமுலையர்கலாருண்கியவிரகி
ணோருநீடுகிர்வாரணமோப்புவவுலவாச்
சாரலோங்கியதூம்புடைவான்றெருடுந்தகைய
வேரல்பாங்கரின்விண்டுகண்சொரிமுத்தமாதோ. (௮௭)

இலைக்குறண்ணுசுப்பங்கலார்புலிமுழக்கென்று
வலிக்கும்பாலரையழாவகையச்சுறுத்துவன
பளிக்குப்பாறையிற்பட்டவெண்டயிருடைத்தழுங்க
வலைக்கையாய்ச்சியர்மதித்திடுமத்தொலிமாதோ. (௮௮)

நீர்த்தடம்பணைநிலவியபேட்டிளவன்னம்
பார்ப்பினந்தழீஇவெருக்கொளநெருப்பெனப்படர்வ
கார்த்தடங்கடர்கானலங்கழிக்கரைகிளைத்த
வார்ச்செழுங்கிளைவளர்பவளக்கொடிமன்னோ. (௮௯)

## நகரச்சிறப்பு.

முத்தவெண்மணியிருவிளிம்பெறிந்திடுமுறையுற
பத்திபத்திசெம்பதுமங்கண்மலர்ந்திடும்பண்பா
லத்தர்சுந்தரநாயகர்க்கவணிமாதேந்துஞ்
சித்திரப்படாமொத்தனதீர்த்தநீர்த்தடங்கள். (௯௰)

கடவுளர்க்கடுதளித்துமைகாதலர்க்கனலும்
விடமளித்திடுதவற்றினைப்பொறுத்தற்குவேண்டி
மடல்செறித்தபூவாரிசக்கைத்தலங்கூப்பிக
கடன்மடுத்தெனக்குலவுவகயம்படுதடங்கள்.

விரும்புவெள்ளியங்கூடங்களுமேதினிவிற்கு
மருங்கெபொனுடகக்கூடங்களுமவிர்மணித்தசும்புஞ்
சுரும்புலாவருதுறைதொறுந்தோய்வனவன்றிக்
கருங்கலம்படியாதனகன்னியந்துறைகள். (௯௨)

விலகிவில்லுமிழ்விரிகதிர்க்கடவுண்மண்டிலத்தைத்
திலகமாமெனத்தீண்டுவதெண்டிரையாடை
யுலகளந்தவனொப்பனவுலகமேழனைய
நிலையமேழினையுடையனநெடியகோபுரங்கள். (௯௩)

---

* 'பகர்விலை' என்று பிரதிபேதம்.

† 'தன்னுடனமுதினேர்சிறப்ப' என்று பிரதிபேதம்.

[library stamp]

மேருமால்வரைச்சிகரத்தின்விளங்குபொற்றாவி
யாருழுந்தரப்பொருப்பினையொப்பமற்றதனைந்
தேருமாமணிகுயிற்றியநெடுமதில்செறிவ
தாருநீளுடலுரகநாண்சூழ்ந்தமைதரப்பாமால. (௯௪)

வேறு.

தீற்றுவெண்சுதையுடைச்செறிந்திமாட்டங்கண்
மேற்படப்புரிசையுள்விளங்கித்தோன்றுவ
தாற்பழுத்தன்னமட்கலத்திலட்டதிம்
பாற்குழிழிகளொழுந்தனையபண்பிற்றே. (௯௫)

கூறுகூறினமணிகுலவுநீர்மையான்
மாறுமாறெதிரெதிர்மலிந்தவோசையால்
வேறுவேறிடந்தொறுமிருந்தசங்கத்தா
வாறுநேராமெனக்கிடந்தவாவணம். (௯௬)

கொண்டலைத்தொடுவனகும்பம்வாய்த்தன
வெண்டரளத்தவான்கோடிவிஞ்சின
அண்டுதலின்றியநானநீர்ன
மண்டுதொட்டியமதமலையுமல்லன. (௯௭)

மருங்குவீழ்திரையினமணியின்மல்கின
பொருந்துநீள்வேலையபுடைசூலாவுவ
திருந்தியமாதரையடுத்த*செல்விய
கருங்கடலல்லனகளபந்தீற்றின. (௯௮)

பாட்டளிதுதைந்தனபதுமம்பூத்தன
மோட்டுடல்வலம்புரிமுழக்கம்விம்மின
தோட்டிடைக்கருங்கயறுள்ளுநீரன
கோட்டகமல்லனகுன்றம்போல்வன. (௯௯)

எண்டருசிகரத்தவிலங்குபானுவின்
மண்டலமூதியுடன்வலஞ்செய்கிற்பன
கண்டவூர்வியப்பச்செங்கனகமாவணி
விண்டலைத்தொடுவனமேருவல்லன. (௧௦௦)

வச்சிரமிழைத்தனமணியின்வைத்தன
பச்சையிற்குயின்றனபவளங்†கோட்டின
முச்சகம்விற்கும்வெண்முத்தின்மொய்த்தன
‡ கச்சுமல்லனவளங்கனிந்தமாடமே. (௧௦௧)

'செவ்விய' என்று பிரதிபேதம்.
'கொட்டின' என்று பிரதிபேதம்.
கச்சமில்லன' என்று பிரதிபேதம்

தாமமார்மழையொடுந் தவழ்ந்துசூழ்வன
மாமணிபுனைந்தன மடந்தைமார்முகத்
தாமரைமலர்ந்தன தவளமாடங்கள்
கோமறுகிடந்தொறுங் கோடியென்பவே (க0உ)

பூசலவண்டுழுகுழற் பொன்னனார்பயி
றேசுலாமேனிலைத் துடக்குஞ்செவ்விய
மாசில்வெண்டுகிற்கொடி வானநீணதி
வீசுதெண்டிரையென விளங்கித்தோன்றுமே. (க0ங)

நங்கைமாரோதிக்கு நாணியோவலாற்
சிங்கவேறனையவர் கொடைக்குத்தேம்பியோ
தங்கணீர்பனிப்பபோல சும்புதண்ணென
மங்குன்மேனிலையலமந்து தாழுமே. (க0ச)

பளிங்குபோழ்ந்தடுக்கிய பசும்பொற்பித்திய
விளிம்புமுத்தெறிந்த வேதிகையமேனிலைத்
தளங்கள்விண்டொடுவன தாவில்பல்வள
மளந்தறிவதற்கெழுமமைதியொப்பன. (க0ரு)

சுரார்க்கமுதளித்தமாறாயபூசுர
வரார்க்கும்வண்கடங்கொடுவழங்கவுய்த்தெனப்
பரக்கும்வேதியர்மணிவாசற்பாங்கெலா
நிரப்புபூரணகும்பநிலவித்தோன்றுமே. (க0சா)

புடைதவழ்மதிரிசைப்பொன்னனார்முலைக்
கொடிபடவெழுதியகொண்டகோவிலைக்
கடைபுடைத்திடுந்தொறுங்கதவுநாணநீ
ரிடைகசிந்தழையறுவென்னும்வையமே. (க0எ)

கன்னலுங்காய்க்குலைக்கமுகும்வாழையும்
பொன்னினுமணியினுங்குயின்றபொற்பின
முன்னியநவமணிமுகப்பிற்சேர்த்தன
துன்னியவச்சிரத்தூணந்தோறுமே. (க0அ)

சந்திரகாந்தமேற்றளங்கள்காலுநீர்
மைந்துடைமன்னவர்வழங்குந்தானநீர்
சிந்துரங்கவுண்மடைதிறந்துபாயுநீர்
முந்தலிற்புரவையுமுந்நீரென்றுயதே. (க0கூ)

---

துலங்கும்' என்று பிரதிபேதம்.

பத்திசெய்மணிப்பணியலது பானிலா
நித்திலத்தாமங்கணீலத்தாழ்வடங்
கத்திகைக்கோதையர்கடியுங்குப்பைபூங்
கொத்துகளல்லதுகுழங்கன்மாலையே. (௧௧௦)

வளையறையனையவாவரிசிமண்ணுமேர்
தளையவிழ்தாமரைத்தடங்களாகியே
விளைவயற்பாய்ந்தபின்மிகுந்தவாரிகொய்
*புளையுலாயமிழ்தெனவுயர்ச்சிசொல்வதே. (௧௧௧)

வேந்தர்தேர்குழுந்தவும்விடுத்தவாம்பரி
தாந்தடங்கிளைத்தவுஞ்சமஞ்செய்கிற்பன
காந்துபன்மணிக்கலங்கடிந்தகுப்பையுஞ்
சாந்தமுமல்லது தாமமென்பவே. (௧௧௨)

மறையொலிவளமனைவள்ளைப்பாட்டொலி
துறைதொறும்பல்லியந்†துவக்குநல்லொலி
கறையடிகலினமாகலிக்கும்பேரொலி
யறைகடலொலியினையடக்குமென்பவே. (௧௧௩)

திருந்தியகல்வியுஞ்செல்வம்யாவையும்
பொருந்திய‡வண்மையாவர்க்கும்பூத்தவா
விருந்துளார்க்கப்பதியெல்லைவந்தெதிர்
விருந்தவாலரியனவேறொன்றில்லையால். (௧௧௪)

விதுச்சிலாவட்டமும்விதுவும்வேரியங்
கதுப்பும்வந்தயறவழ்காளமேகமும்
புதுக்கடிமகளிரும்புனைந்தபாவையு
மதிப்பதற்கரியனமாடந்தோறுமே. (௧௧௫)

ஆள்வினைக்குய்ப்புகையாலைத்தீம்புகை
வாள்விழியவர்குழற்கூட்டும்வன்புகை
வேள்வியினெழும்புகைவிரைகொண்மென்புகை
நீளியவானையும்விழுங்குநீர்மைய. (௧௧௬)

விண்ணினுமகன்றனவிளங்குமேனிலை
யெண்ணினும்பெரியனவீண்டும்பல்வளம்
பண்ணினுமினியனபாடன்மாதரார்
கண்ணினுநெடியனகாமர்வீதியே. (௧௧௭)

* 'யுளையவாயமிழ்ததனுயர்ச்சிசொல்வதோ' என்று பிரதிபேதம்.
† 'துவைக்குநல்லொலி' என்று பிரதிபேதம்.
‡ 'வண்ணம்' என்று பிரதிபேதம்.

வேறு.

அந்தணரில்லமெங்குமருந்தவர்மடங்களெங்கு
மிந்திரதிருவினோர்தமேற்றெழிலிருக்கையெங்கும்
பந்தணைவிரலினார்கள்பயிலுமாளிகைகளெங்குங்
கந்தெனத்திரண்டதோளார்கலைபயில்கழகமெங்கும் (௧௧அ)

வண்டுழுகோதையெங்கும்வனைகறங்கோதையெங்கும்
பண்டருபாடலெங்கும்பயிலும்பொற்பாடலெங்கு
முண்டிடமமலையெங்குமோதனவமலையெங்கு
முண்டகமுகங்களெங்குமுழங்குகமுகங்களெங்கும். (௧௧௯)

ஓதுவேதங்களெங்குமொழிந்தவேதங்களெங்கு
மாதரார்தெருக்களெங்குமாற்றுசந்தெருக்களெங்குஞ்
சூதர்பொற்பணிகளெங்குந்துலங்குபொற்பணிகளெங்கு
நீதிசொல்வளங்களெங்கு*நீத்தபால்வளங்களெங்கும். (௧௨0)

இமையவர்கோயிலெங்கும்யாகமண்டபங்களெங்குஞ்
சிமையமொத்தெழுந்தசோதிச்செம்பொற்செய்குன்றமெங்கு
மமையுறுதோளினல்லாராடல்சாலரங்கமெங்குந்
தமைநிகர்வளமையாளர்தருமவைச்சாலையெங்கும். (௧௨௧)

இன்னநல்வளங்கண்மல்கியிணைதனக்கெங்குமின்றி
மன்னியநல்லூராழிமலர்த்தடமாகவையம்
பொன்னிறக்கமலமாகப்பொகுட்டுக்காவிரிநாடாக
வன்னதில்வாழுநங்கையாமெனப்பொலிந்ததன்றே (௧௨௨)

## தலமகிமை.

இத்திருநல்லூர்தன்னில்யாதொருதருமமேனும்
பத்துநூறதிகமாகப்பலிக்குமப்பரிசுதன்றாற்
சித்தசுத்தியுமுண்டாகுந்தீயமுப்பகையுந்தீரு
முத்தியினெறிவினைவிமுறைமையினடையுமன்றே. (௧௨௩)

சோருநீரருவியொப்பநதுப்புவார்தொழுகவின்ப
மாருமுப்பழமுநாளுமுதிரையுமருகிற்சேர்த்தி
மேருவைநிகர்ப்பநல்கும்வியன்பலநல்லூர்தன்னி
லோரவிழனித்தற்கொவ்வாதென்னின்மற்றுரைப்பதுண்டோ.

பற்பலபருவமெல்லாம்பட்டினிவிட்டும்பார்த்தோர்க்
கற்புதமாகச்செய்தற்கருந்தவம்புரிந்துமெய்தும்
பொற்புடைப்பலங்கணல்லூர்ப்புனிதனைப்போற்றல்செய்தோர்
நற்பகல்வசித்தார்க்குண்டாமென்னில்யானவிலற்பாற்றோ. (௧௨௫)

* 'நீத்தயில்வளங்க' என்று பிரதிபேதம்.

சுந்தரநாதர்க்கன்பாற்றூபிகோபுரங்களாதி
யந்தமில்பணிகளாற்றியாலயங்கண்டதூயோ
ரிந்திரசெல்வமெய்தியெண்ணில்பல்லூழிவைகிச்
சந்திரமௌலிசெய்யதாண்மலர்நீழல்வாழ்வார். (௧௨௬)

தீர்த்தநீர்வாவிதொட்டோர்தெளிந்தநீர்க்கூவல்கண்டோ
ரார்த்தருக்குறையுளாய்த்தோரன்னசாலைகள்சமைத்தோர்
பார்க்கரனனையசோதிப்பனவருக்கிருக்கைநேர்ந்தோர்
நீர்க்கடலுலகாண்டும்பர்நெடும்பகலாள்வரன்றே. (௧௨௭)

நாலுதிக்குவரும்போற்றுநல்லூராண்டாருக்கன்பா
லாலயம்புதுக்கினோர்களணிவிழாநடத்தினோர்கள்
காலமூன்றினுமெய்ப்பூசைகனிவுடன்புரிந்தமேலோர்
ஞாலமுற்றாண்டுபின்னர்நம்பனதுலகில்வாழ்வார். (௧௨௮)

தூசுநல்வனங்களீந்தோர்தூயபட்டாடையுய்த்தோர்
மாசையான்மணியாற்செய்தவண்பணிவழங்குநல்லோர்
நாசமில்லாதநல்லூர்நம்பனதருளினாலே
காசினியாண்டுபின்னர்க்கற்பகநாட்டிலாள்வார். (௧௨௯)

கன்னியர்நூற்றநூலாற்கடிகொடாமரையினூலாற்
றன்னியதிரியினானெய்சொரிந்துதீபங்கணல்லூர்
முன்னவன்கோயிலெங்குமுறைமையினேற்றுந்தூயோர்
தன்னிகர்ஞானமெய்தித்தற்பரப்பொருளைச்சார்வார். (௧௩௦)

வெண்டயிர்நறுநெய்யான்பால்விளம்புமைவகையதாகக்
கொண்டிடு*மமிர்தந்தூயகொழுங்கனிச்சாறுசெந்தேன்
றண்டுதலிக்ந்தகன்னற்சாறுநல்லிளநீர்வில்வத்
தொண்டளிர்க்குழம்புசாலியோதனமுறையினாட்டி. (௧௩௧)

குங்குமக்கலவைச்சந்தக்குழம்பவிடேகித்தன்பாற்
பொங்கொளிப்பளிதம்வாசப்புழுகுநெய்லேபனஞ்செய்
தங்கணர்சுந்தரேசர்க்கணிபலசாத்தினோர்க
ளெங்கணும்புகழ்வைகியின்பவீடடைவரன்றே. (௧௩௨)

இண்டையுஞ்சூட்டும்பைந்தோடேந்துபூந்தாருஞ்சாத்தி
யண்டர்நாயகனுக்கன்பாலணிநலம்புனைவித்தோர்க
ளெண்டிசைவளாகமெல்லாமியல்புளியொருகோலோச்சி
முண்டகன்வாழ்நாளெய்திமுத்தியுமுறையிற்சேர்வார். (௧௩௩)

---

* 'மிரு' மென்று பிரதிபேதம்.

ஞ கரையகைகள்சாலியோதனவகைகளின்பப்
பாகுறுமபூபவர்க்கம்பாங்குடனிவேதித்தோர்க
டோகையோர்பங்கினெங்கோன்சுரந்தபேரருளினாலே
போகமும்வீடுமெய்திப்புண்ணியர்போற்றவாழ்வார் (௧௩௪)

கொழுவென நுடங்குஞ்செம்பொற்கோற்றொடியுமையாளோடு
நம்பனுக்கன்பாவாசுநறும்புகையேந்துநல்லோர்
பம்புநீர்க்கடலந்தானைப்பார்முழுதாண்டுபின்ன
ரும்பர்நாடெய்திமீளாவுயர்கதிசேர்வர்மாதோ. (௧௩௫)

நாடகக்கணிகைமாதர்நம்பனுக்குவந்தவாறே
பீடுசால்வாகனங்கள்பிறங்குநீடாழித்திண்டேர்
நீடுவான்கவிகைசெம்பொனடுங்கொடியாதியுய்த்தோர்
வீடுசேர்ந்துய்வரிந்தமேதினியாண்டுமாதோ. (௧௩௬)

குடம்புரைசெருத்தனல்லான்கொய்யுளைப்புரவிவேழந
தடம்படுவிளையுளாதிசவுந்தரநாதர்க்கீந்தோ
ரிடம்படுஞாலமெல்லாமேத்தவீற்றிருந்துபின்ன
ருடங்குதஞ்சுற்றத்தோடுமும்பர்நாடெய்திவாழ்வார் (௧௩௭)

மேதகுசிறப்பின்மிக்கவிழாவணிசேவித்தோர்க
ளேதுதீர்பிரதோடத்திற்றெரிசனம்புரிந்தமேலோர்
நாதனையினையவாயநற்றினத்திறைஞ்சினோர்கள்
பூதலத்தரசாய்வைகிப்புரந்தரன்போகந்துய்ப்பார். (௧௩௮)

சாந்திராயணமுன்பாகச்சாற்றுநல்விரதநல்லூர்ப்
போந்தனுட்டித்தமேலோர்புண்ணியனருளினாலே
வேந்தர்தம்வேந்தராகிமேதினியாண்டுபின்னர்ப்
பூந்துணர்த்தருநாடெய்திப்பொருவருமுத்திசேர்வார். (௧௩௯)

வேனில்வந்திறுத்தமாந்தர்விடாயொழித்திடுதற்கேற்ற
பூநறுந்தண்ணீர்ப்பந்தர்புதுமலர்நந்தவான
மூனமிலன்பாற்கண்டோருலகில்வீற்றிருந்துபின்னர்க்
கான்மலிபசும்பொன்பூத்தகற்பகநீழல்வாழ்வார். (௧௪0)

சுந்தரநாதர்வைகுந்தூயநல்லூரினங்க
ணந்தணராற்றும்வேள்வியனைத்தும்வண்புரவிமேதந்
தந்திடுபலன்கணல்குமென்னிலத்தலத்தின்மேன்மை
யெக்தையேபுகல்வதல்லால்யாவரேயிசைக்கவல்லார். (௧௪௧)

தென்புலத்தவரைநோக்கித்திருத்தகுநல்லூரங்க
ணன்புடன்குடங்கையானீரள்ளியோர்முறையுய்த்தாலு
மன்பெருநூல்கள்சொன்னமரபுளிவிழாதுசெய்யு
மின்பமதடைவரென்றால்யாரதன்பெருமைசொல்வார். (௧௪௨)

எண்ணிருதிறத்தவாகவியம்புமெய்த்தானமன்பாற்
புண்ணியநல்லூர்தன்னிற்புரிந்தவர்பெறும்பேறம்ம
வெண்ணிலாவரும்புங்கொன்றைவிரிமலர்த்தொடையுஞ்சூடுங்
கண்ணுதற்கடவுளல்லால்யாவர்கட்டுரைக்கற்பாலார். (கசங)

அறங்களெண்ணான்குமேவாமற்றிருநல்லூர்தன்கட்
டிறம்படப்புரிந்தமேலோர்செல்வங்களனைத்துமெய்திக்
கறந்தபாலனையநீற்றுக்கடவுடனருளினாலே
பிறந்தைதவேரரிந்துமீளாப்பேரின்பவீட்டில்வாழ்வார் (கசச)

நலஞ்செயுநல்லூர்தன்னைநண்ணியன்பதனொடுமூன்று
வலஞ்செய்யிலுலகமூன்றுவலஞ்செய்தோர்பலனுமெய்தி
நிலந்தனக்கரசராகிநெடும்பகலாண்டுபின்னர்க்
குலங்கண்மூவேழொடையன்குரைகழனீழல்வாழ்வார். (கசரு)

ஆலயமலகிட்டோர்களணிமறுகலங்கரித்தோர்
கோலுநீர்த்தீர்த்தவாவிக்கூலங்கள்விளக்கினோர்க
ளேலவாங்குறையுமேலோரின்னறீர்த்துபகரிப்போர்
ஞாலமுற்றாண்டுமுக்கணாயகனுலகில்வாழ்வார். (கசசு)

மனமொழிமெய்கடம்மான்மரபுளியினையவண்ணந்
தனதன்மெய்த்தொழற்காற்றுந்தன்மையோர்நல்லூர்வாழும்
புனிதவேதியர்களாதிபுண்ணியர்க்குதவிசெய்தோர்
பனகன்மேற்புடவியாண்டுபரகதிசேர்வரன்றே. (கசஎ)

வளப்பமார்நல்லூர்தானேவான்கயிலாயமவ்வூர்க்
குளப்படிநீர்களெல்லாங்குரைபுனற்கங்கையாங்கா
ணளப்பருமணல்களெல்லாமற்புதவிலிங்கமென்றாற்
றுளக்கிலாத்தலத்தின்மேன்மைதொகுத்தியானுரைக்கற்பாற்றோ.

என்மதிவிபுலங்காறுமெழில்வளம்புகன்றேனிப்பான்
முன்னவனல்லூர்க்குள்ளமுதுமொழிச்சரிதமெல்லாம்
பின்னலஞ்சடிலந்தாங்கும்பெற்றியீர்கேண்மினென்னாக்
கன்னலுந்தேனும்போலக்கட்டுரைசெய்யலுற்றான். (கசகூ)

## வேறு.

அறிதொறும்பெறலரும்பொருள்பயக்குநான்மறையிற்
செறிதரும்பொருள்விரித்துரைசெய்வனவாகு
முறைபயின்றனபுராணமூவாறென்பரவைதாங்
குறிகொண்மேலவரிலக்கணான்காமெனக்குறிப்பார். (கருo)

பாதியாமதிக்கண்ணியான்புராணம்பத்தவைதா
மோதுணர்ந்தவரிலக்கமூன்றுமெனமொழிவார்
சீதரன்கதைநான்கிரண்டயன்கதைதீயோ
டாதவன்கதையிரண்டவையிலக்கமென்றனரவர். (௧௫௧)

பவுடிகோத்திரம்பூர்வகாருடம்பிரமாண்ட
மிவையியார்மூன்றினுமோதுவதிசைகெழுநல்லூர்
நவையின்மான்மியமன்னதுநலங்கொள்செவ்வேளுக்
குவகையாற்சிவன்முன்னமோதியதெனவுரைப்பார். (௧௫௨)

அனையவாகியவத்தலமேன்மையந்தணர்காண்
முனைவன்கூறுவதன்றியார்முறைவிரித்துரைப்பா
ரினையவாயினுமென்மதிவிபுலத்தின்காறுங்
கனைகடற்கலசத்தியலார்கழறவனுல். (௧௫௩)

நைமிசாரணியச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧௫0

---

## இரண்டாவது

## கைலாசச்சருக்கம்.

---

தஞ்சநீயெனப்பணிதலுந்தண்ணளிசுரந்து
நஞ்சமாரமுதாமெனநுகர்ந்தருணம்பன்
விஞ்சுவான்புகழ்க்கடலிடைமலர்ந்தமேதகுவெண்
கஞ்சமாமலர்போன்றதுகயிலையஞ்சிகரம். (௧)

சென்னிமீமிசைப்புனிற்றிளம்பிறைதவழ்திறத்தாற்
றுன்னிமாமுகிலொருபுடைசெறிந்ததோற்றரவான்
மன்னுநீற்றொளிவயங்கமீதணிந்தநங்கருணைக்
கன்னிபாகனைநிகர்த்ததுகயிலையஞ்சிகரம். (௨)

நம்பனார்தமைநீரவர்தாபித்துப்போற்றுங்
கும்பமொத்ததுகயிலையஞ்சிகரமக்கும்பத்
தும்பர்மாமதிவயங்குவதிண்டையொப்பாகத்
தும்பைமாலைகளொத்தனதாங்குவெள்ளருவி. (௩)

இடபமீதுறப்பொலிதலாலேந்தெழிற்கன்னி
புடைவைபங்கலாற்பொன்னலரிதழிவேய்தலினாற்
சடையில்வாளராத்தாங்கலாற்றவளநீறணிந்த
கடவுளாமெனச்செழித்ததுகயிலையஞ்சிகரம்.

குரவம்பாடலங்குங்குமங்கோழரைச்சாந்த
மரவம்வாசந்திகோங்குபுன்னாகநீள்வகுளா
மிரவுநண்பகலாக்குமாமணிவெயிலெறிப்ப
விரவுதண்டலைவிண்டலைதடவந்துவிளங்கும். (௫)

தேவர்சாரணர்சித்தர்விச்சாதரரொருபாற்
கோவைவாயரமாதரார்குழாங்கண்மற்றொருபாற்
றாவிலாவருந்தவம்புரிதாபதரொருபா
லோவிலாதனபற்பலசாரல்களுடைத்தால். (௬)

ஆடுவார்சிலரமிழ்துறழ்சாமகீதங்கள்
பாடுவார்சிலர்பதமொருமூன்றையும்பகுத்து
நாடுவார்சிலர்நயனஞ்சிம்புளித்துச்செம்மாந்து
தேடுவார்சிலர்சிலர்*சிவானந்தத்துட்டிளைப்பார். (௭)

அடியர்கண்மழையமரர்கள்பூமழையலர்ந்த
கடிகொள்பூந்துணர்க்கண்மழையிறானின்றுங்கசிந்து
வடியுந்தேன்மழைமாமுகின்மழையொடுந்துவன்றி
முடிவிலாதனபஃறலையருவிகண்முழங்கும். (௮)

கணிப்பிலின்னனவளங்கனிகயிலைமால்வரையிற்
றணிப்பிலாதுயர்தமனியச்சினகரமதன்கண்
மணித்தலம்பயின்மாணிக்கமண்டபமருங்கிற்
பணிச்செழுங்கதிர்மணிபுனைபரியங்கமதனின். (௯)

உலகமூன்றையுமீன்றசிற்றுதரத்தினுமையு
மிலகவாய்ப்பசுங்குதலைச்செவ்வேளுமாங்கினிதிற்
றுலவவன்னவர்தம்மொடுமெள்வளாய்க்குழக
னலகிலாவுவப்பெய்தினனொருதினத்தமர்ந்தான். (௰)

அமருமேல்வையிலன்னைதன்மடித்தலத்திருக்குங்
குமரன்றாதைதன்குளிர்முகத்தாமரைநோக்கித்
தமரவேலைசூழ்நாவலந்தீவிலெத்தானமும்
விமலநீவிழைந்துறைகுவததுவிளம்பென்றான். (௧௧)

---

'சிதானந்தத்துள்' என்று பிரதிபேதம்.

என்றுகூறலும்ருகையாலெடுத்தணைத்தெங்கோ
னன்றுநன்றுநீவினவியபரிசெனநயந்து
குன்றவில்லியும்புத்திர*ஞுரைசெயல்குறிக்கொண்
டொன்றவோதுதுமதிகுய்யமதுவெனவுரைத்தான். (கஉ)

வேறு.

பாவபுண்ணியமில்லைபுயன்றரு
தேவுமில்லைநாஞ்சிந்தித்தவண்ணமே
யேவச்செய்துமெனத்திரிநாத்திகர்க்
காவதல்லவறவோர்க்குரைப்பதால். (கங)

வேதநிந்தனைசெய்யும்விதண்டைய
ரேதமின்மறையோரையிகழ்பவ
ரோதும்வைதிகநீதியொருவினோர்
பாதகர்க்கும்பகரவொண்ணாததால். (கச)

தாயைத்தந்தையைத்தம்முனைவைபவ
†ரேயத்தங்குரவர்க்கிடர்செய்குநர்
சேயைத்தாரத்தைத்தீஞ்சுவையன்னத்தை
வீயத்தான்கொடுபோய்விற்கும்வெய்யவர். (கரு)

கற்பின்மிக்கமனைவியைக்கையொரீஇப்
பொற்பின்மிக்கபுறத்தொழுகுற்றவ
ரற்பின்மிக்கவனன்றியயலவன்
வெற்பின்மிக்கதோள்வேட்டவிடலியர். (கசு)

செய்தநன்றிமறந்தவத்தீமையோ
ருய்யுமாறின்றியோரமுரைப்பவர்
வெய்யதீயகுறளைவிளம்புநர்
பொய்யுரைக்கும்புலையர்புன்செய்தியோர். (கஎ)

சாலநம்முடையன்பராய்த்தண்டுழாய்
நீலமாயனைநிந்தனைசெய்பவர்
ஞாலமுண்டவனன்பராய்நம்முடைச்
சீலநிந்தனைசெய்யுந்தகைமையோர். (கஅ)

சொற்றவின்னதுரிசுடையாளருக்
குற்றுநாளுமுரைக்கவொண்ணாததா
னற்றவர்க்குநசையுடையாளர்க்குங்
கற்றவர்க்குமேகட்டுரைசெய்வதால். (க௯)

---

'ஞுரைசெயல்' என்று பிரதிபேதம்.
'ஏய்தம்' என்று பிரதிபேதம்.

கடவுளுண்டெனக்கைத்தொழுமன்பினோர்
படருநீடொளிப்பானுவையேத்துவோ
ருடவிளுதனையுண்மையிற்போற்றுநர்
சேடிகொள்வானின்சிறப்பெடுத்தோதுவார். (உ௰)

துறந்தமேலவைதூய்மைவிரும்பினோர்
சிறந்தநல்லறஞ்செய்யும்ச்செய்தியோ
ரறந்தவாதுபகுத்துண்ணுமன்பினோர்
மறந்துந்தீச்சொலுரையாமரபினோர். (உக)

செய்தநன்றியறியுஞ்சிறப்பினோ
ருய்யுமாறுநடுநிலையுற்றவர்
மெய்யையாதியமூன்றும்விதிமுறை
வையமீதிலடக்கியமாட்சியோர். (உஉ)

ஒழுக்கமோம்புமுயர்குலமேலவ
ரிழுக்கிலாவயலான்மனைக்கேக்கறார்
வழக்கினோர்மிகைதன்னைமனங்கொளா
ரழுக்கறார்பிறராக்கம்விரும்பலார். (உங)

குறளையோடுபயனிலகூறிலார்
திறனிலாதபடிற்றுரைசெப்பிலார்
மறலியெய்தும்பருவந்துமாசிலா
வறனலாதனசெய்வதற்கஞ்சுவார். (உச)

உலகநன்னடையுய்த்துணர்மேலவ
ரிலமென்றார்தமக்கீயுமியல்பினோர்
நிலவுமெய்ப்புகழீட்டுநெறியினோர்
குலவுநல்லருட்செல்வங்குறிக்கொண்டோர். (உரு)

ஊன்சுவைத்துண்ணுமூனமொழிந்துளோர்
வான்பழிச்சும்வகைதவமேற்கொண்டோர்
நான்குமுந்நீருங்கடனுட்டொன்றுந்
தான்கரந்துகொள்ளாததகைமையோர். (உசா)

கதங்கடிந்தவர்காசினிமீதுயிர்க்
கிதங்களன்றியின்னாத்செய்யாதவர்
மதங்கள்சொல்லும்வகைகண்டுமெய்ம்மையாற்
பதங்கண்மூன்றின்பரிசுணர்மேலையோர். (உஎ)

ஈறினம்முடியாரையிணையிலா
வீறுபெற்றவிலிங்கத்தைமெய்ம்மொழி
கூறுமுண்மைக்குரவனைப்போற்றுவோர்
தேறுமித்தகையோர்க்குரைசெய்வதால். (உஅ)

என்றுமுக்கணிறைவனெடுத்துரைத்
தன்றிற்குன்றமடர்த்தவற்கன்பிறு
னன்றுகூறுநல்லூர்க்குள்ளானமிய
மொன்றுகாதலினேதினனென்பவே.   (உகூ)

சம்புத்தீவிற்றமனியச்சோலைசூழ்
செம்பொன்மேருவரைக்குத்தென்பக்கத்தி
னும்பர்போற்றுஞ்சோணாட்டினொலிபுனற்
யம்புகாவிரித்தென்கரைப்பாங்கரின்.   (௩0)

நண்ணுமோர்திலநல்லூரெனவஃ
தெண்ணுங்காமக்கென்றுமுவந்ததால்
வண்ணவேலநின்போலிந்தமாதுபோற்
றிண்ணமென்றதன்சீர்த்தியுஞ்செப்பினான்.   (௩க)

தலவிசிட்டமுமத்தலத்தின்னிடைக்
குலவுதீர்த்தவிசிட்டமுங்கோதிலா
விமலமூர்த்திவிசிட்டமும்வேலனுக்
கமலன்கட்டுரைசெய்தனனமரோ.   (௩உ)

அந்தமாக்கதைவேலவனன்புகூர்
நந்திகேசற்குநன்குநவோதினான்
சந்தையோதுஞ்சனற்குமாரற்கவன்
புந்தியாரப்புகன்றனனென்பவே.   (௩௩)

அனையமாதவத்தந்தணர்கோமகன்
வினவும்வேதவியாதற்கியம்பின
னனையுமோர்பொருளாக்கியவ்வேதனு
முனிவிர்காடமிமேற்குமொழிந்தனன்.   (௩௪)

மூட்டமாவின்றிமுற்றியநோன்மையா
வெட்டலாத்திசையும்மிறைபோக்கிய
சிட்டர்காளெந்தைசிந்தைநகளிப்புறக்
கட்டுரைத்தவவ்வாறுகணித்தரோ.   (௩௫)

## (வரலாறு.)

மூந்தைநாளிற்முழுவலிவாயுவாற்
சந்தமாருந்தமனியவெற்பினின்
றிந்தமாநிலமுய்யவிலங்கொளிச்
சுந்தராசலம்வந்தவத்தொன்மையும்.   (௩௬)

பூவைவண்ணன்பொலிதருநாபியின்
மேவுதாமரைவேதியன்ராசத
தாவிலாக்குணசாந்தியினர்ச்சனை
தேவதேவனுக்காற்றியசெய்கையும். (௩௭)

விரைகொடாமரைமேலவன்வான்கங்கை
யுரவுநீர்கொடொருங்குநிரப்பவா
லரவுபூண்டருளண்ணலருளெனப்
பிரமதீர்த்தம்பிறங்குமப்பெற்றியும். (௩௮)

பத்திவந்துபணைத்தெழவெண்ணுவோர்க்
கத்திருத்தருநல்லூரகவயின்
முத்திநல்குமுக்கண்ணனெழுந்தசந்நின்
சித்திவல்விரைந்தெய்துமச்சீர்மையும. (௩௯)

குண்டமொன்றுகுளிர்ந்தவன்குஞ்சிநீர்த்
தண்டுளிக்கணநதாக்கவோரந்தண
னுண்டிவெஃகுஞ்சுணங்கனுருவொரீஇப்
பண்டைநல்லுருப்பெற்றவப்பான்மையும். (௪0)

விந்தவெற்பையடக்கியவேதியற்
கெந்தைமங்களரூபத்தையேடவிழ்
கந்தமாமலர்க்கண்களித்தாயகவன்
சிந்தையன்புறக்காட்டியசெய்கையும (௪௧)

பரவுகுந்திதன்பத்திவிசேடத்தாற்
குரவமார்குழற்கோதையோர்பங்கின
னுரவுநீர்க்கடலேழுமொருங்குடன்
பிரமதீர்த்தத்தழைத்தருள்பெற்றியும். (௪௨)

வந்தடைந்தருண்மாக்கடன்மன்னுவன்
சிந்தையன்புறச்செப்பேசுரம்பணிந்
தெந்தைநல்லூரிடத்தெய்திமீண்டவன்
முந்தையெல்லைபுகுந்தமுறைமையும். (௪௩)

முண்டகாசனன்முள்ளுடைப்பாசடைக்
கண்டற்போதுகரிபொய்த்தநதீங்குடன்
கொண்டுபொய்யுரைகூறியகுற்றமும்
விண்டுபோகவிளைத்தமெய்ப்பூசையும். (௪௪)

கள்ளுலாமலர்தூவிக்கனிவுடன்
வள்ளல்சேவடியேத்திவலாரியாம்
கொள்ளுஞ்சாபந்தணந்துநாற்கோட்டுடை
வெள்ளையானைவிளங்கியமேன்மையும். (௪௫)

பொன்னுலாங்கொன்றைவேணிப்புராந்தகன்
றன்னையேத்தியெஞ்ஞான்றுந்தணப்பிலா
மன்னுகாதற்கணவனைவாளராக்
கன்னிமுன்னமடைந்தவக்காதையும். (சசு)

போதுலாவும்புரிகுழற்பூண்முலை
மாதுபாகன்மலரடிவந்தித்தே
கேதநீங்கக்கிராதற்கிறையவன்
றீதின்மக்களைப்பெற்றவச்செய்தியும். (சஎ)

விள்ளருஞ்சுருதிப்பொருள்வீறென
வுள்ளமூலபிலத்தொடுமுண்மையால்
வள்ளல்சேவடிவந்தித்தொர்வேட்டுவன்
றள்ளருங்கதிபெற்றவத்தன்மையும். (சஅ)

சுருதிபாடல்செய்சுந்தரவெற்பின்மேற்
கருணைவாரியைக்கைதொழுதன்பினாற்
றருமசேனன்மகப்பெற்றுத்தாழ்விலாப்
புரவிமாமகம்பூண்டபுராணமும். (சகூ)

குணங்களைந்துடன்கூடியவாயதம்
பணங்களைந்துடைப்பாம்பரையார்த்தவ
னிணங்குபேரருளெய்திக்கயிலைவாழ்
கணங்களுக்கரசாகியகாதையும். (ரு0)

தோகைபங்கினன்சுந்தரவெற்பினோர்
காகமோசனக்காதையைக்கேட்டனு
மோகையோடொருவணிகன்களித்
தேகன்வெள்ளிவெற்பெய்துமியற்கையும். (ருக)

நீபமல்கியநீண்மதுராபுரிப்
பூபனுந்தமிழ்நாட்டுப்புரவலன்
கோபமுற்றுக்குறுமுனிகூறிய
சாபநீங்கித்தணந்தசரிதமும். (ருஉ)

மகதியாழ்முனிவாய்ந்தநல்லூர்வயிற்
றகுதிநான்முகன்றன்னைவினவலும்
பகுதியாலவன்பாங்குறவாங்கதன்
மிகுதியாவும்விளம்பியவண்ணமும். (ருங)

முரணின்மிக்கமுழுவலித்திண்புயத்
திரணியன்சமரேற்றிகல்வெல்லுவான்
றரணிகாந்தன்சகதண்டம்யாவைக்கு
மரணினன்வந்தருச்சனைசெய்ததும். (ருச)

தமரவேலை தன்னைக்கடைந்தின்னமு
திமயவாணர்முன்னேந்திவந்தாட்டலுங்
குழுதவாயுமைகொண்கன்றிருப்பெய
ரமுதலிங்கமென்றாகியவண்ணமும். (௫௫)

வேரிநாண்மலர்மேவியநான்முக
னூரதப்பெயர்நற்றவற்கம்பொனீ
டரமேவியதீர்த்தங்கள்யாவையு
மோருமாறுமுன்னோதியபெற்றியும். (௫௬)

ஒழுகுசெயயமேதனைத்தறுந்தந்திர
வழுவிலாதமகதியாழ்மாமுனிக
கழிவிலாநெறியால்விதியாய்ந்தொரு
கழுகுமோசனக்காதையுரைத்ததும். (௫௭)

விளங்குநீண்முடிவீதிவிடங்கர்வான்
றுளங்கநீங்கியாரூரெல்லைதன்னுநாட்
டளங்கொள்சுந்தரசைலத்தின்மல்கிய
வளங்கள்கண்டவண்வைகிப்பின்சென்றதும். (௫௮)

அழுதுபாற்கடல்பெற்றவருந்தவன்
வழுவிலாதமுனிவர்க்குமாட்சியான்
முழுதுந்தேர்ந்துமுறையுளிகூறிய
பழனைவாழமர்நீதிதன்பான்மையும். (௫௯)

இன்ன* தன்மையெவையுமெடுத்தியான்
முன்னவன்னருளான்மொழிவேனெனாத்
தன்னையொத்தசவுனகனாதியோர்க்
கன்னசூதனுரைத்தனனாமரோ. (௬௰)

கைலாசச்சருக்கம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௨௩௰.

---

* 'தொன்மை' என்று பிரதிபேதம்.

## மூன்றாவது

# சுந்தராசலச்சருக்கம்.

---

### வேறு.

வானராசர் சுதனைக்குமுன்னாளின் மதவலிமாருதந்தனக்குந்
தோளுலாம்வலியினிகலமர்தோன்றச்சுந்தராசலம்புவிதோன்றுங்
கேளுலாங்காதைமொழிகுவனவரவோர்களைத்தலுஞ்சுதமாமுனிவன் [ன்.
காளமாமுகில்போலிருள்கனிந்தொழுகுங்கண்டனைவணங்கினன்சொல்வா

வண்டுழாயணிந்தமுகுந்தனுமுகுந்தன்வயங்கொளிகாபியிற்பூத்த
முண்டகாசனனுங்குலிசபாணியனேமுதலதேவருமுனிவோருங்
கொண்டல்போந்துறங்குந்தமனியச்சாரற்குலவரைநாப்பணிற்றொழும்
பண்டொருஞான்றவைகினர்வைகப்பன்னகவாசனுங்கெடுத்தான். (௨)

அடுத்திடும்பன்னகேசனைநோக்கியாயிரம்பணாடவியதனை
யடுத்திடுங்கடல்சூழ்தரையினைப்பரிக்குமதுகையேயன்றிவாயுவையு
மெதிர்த்தெடுத்தருந்துமாற்றலாயுன்போலெறுழ்வலியெவருளரென்றுத்
தொடுத்ததந்திரியாழ்நாரதன்வியப்பத்துண்ணெனவாயுவுமெழுந்தான்.

எழுந்தனன்புழுங்கிநெட்டுயிர்ப்பெறியாவிருகணுங்கடைக்கனல்கால்த், தொழுந்தகையமரரெவரையுநோக்கித் துளையெயிற்றரவையோர்பொருளாய், மொழிந்தனன்முனிவனென்னுடைவலியுமுதராவரசுடைவலியு, முழுந்துருள்பொழுதிற்காணுதிரென்றூற்றமிக்குடன்றனனுரைப்பான்.

அண்டகோடிகளைத்துகள்படப்புடைப்பேனசலகோடியையெடுத்தெறிவேன், கொண்டலேழினையுமொருபுடைத்தொகுப்பேன்குரைகடலேழையுமுகந்திரைப்பேன், விண்டலத்தியாவுமியக்குதல்புரிவேன்மேம்படுமெம்மைக்குமெஞ்ஞான்றுந், தண்டுதலிகந்தபிராணன்யானெனதுசண்டவேகத்தையார்தவிர்ப்பார். (௩)

மந்தரப்பொருப்பையொருகணத்தின்கண்மத்தெனக்கடலிடையுய்த்தேன்
சந்திரமவுலிவீரியந்தனையுஞ்சரவணப்பொய்கையின்மடுத்தேன்,
முந்தியதழற்குச்சகாயன்யானட்டமூர்த்தியுளொருவன்யானென்றுக்,
ந்தவாகனன்கட்டுரைத்தனனுரைப்பக்கனல்விழித்தனந்தனுமுரைப்பான்.

கருங்கடலாடைப்புடவியோர்துகளிற்கணபணமௌலிமேற்பரிப்பே
னொருங்குடனுலகமுழுவதுந்தனித்துண்டும்பரைத்தாங்குமாயனையும்.
விரிதருமணையாய்த்தாங்குவனிமயவெற்பையுங்கறங்கெனத்திரிப்பேன்
றிரிபுரமெரிக்குஞ்சிலைக்குநாணுகிச்சிற்பரர்க்கணியுமாகுவனால். (௪)

ஆயிரம்பகுவாய்முழைஞ்சுகொப்பளிக்குமாலவேகத்தையார்தடுப்பார்
நீயுமென்னுணவேயாமெனிலெனக்குநிகர்வதுமரிதுமென்கொல்லோ
வாயிறைஞ்சுரைத்தெதன்னுருவதுன்துமதுகையுமெனுதெறுழ்வலியு [ன்.
மேயெனுமளவிற்காண்பரால்வாமீனுரெனக்கனன்றிருஞ்சமர்க்கமைந்தா

அமைதலுமன்னேரொருவருக்கொருவராற்றலினிகலுந்னேக்கி, யிமை
யவருமதுமதுகையைக்காண்பாம்யாமெனமற்றிஃதுரைப்பார், சிமையவெ
ற்பிதனைப்பெயர்த்திமற்றுத்திண்ணிதிற்புரத்திநீயென்னுத், தமையடுத்
தெழுந்தசமீரணன்றனக்குஞ்சர்ப்பவேந்தனுக்குமாங்கிசைத்தார். (௯)

இசைத்தலுமனந்தன்காட்டெரிகதுவவெழுந்ததோர்வெண்புகைமானத்
திசைத்தலஞ்சிறுகப்பணுடைவிரித்துச்செங்கதிர்மண்டிலமறைப்ப
விசைத்துமேலெழுந்துதனதுநெட்டுடலமேருவுக்காயிரமடங்கா
யசைத்தனனீட்டிக்கண்கனலுகுப்பவாங்கதன்பாங்கர்வந்தடுத்தான். (௧௦)

நில்த்துவாலூன்றித்தனதுநெட்டுடலானெடுவரைமுழுவதுஞ்சூழ்ந்து
வலத்திறுற்சிக்கயாத்தனனிறுக்கிமணிப்பணமாயிரமவற்று
ணலத்தகுசிறகாற்கொடுமுடிமறைத்தானிலமுழுவதுநடுங்கச்
சொலத்தகுந்தகைத்தோமற்றவனுற்றல்சுரர்களுநடுநடுங்கினரால். (௧௧)

அண்டகூடத்தையாக்கியதொடங்குமந்தணன்றாணநட்டதற்கு, வெ
ண்டுகில்சாத்தும்விதங்கொலோவல்லால் வெண்முகிறவழ்ந்திடுமான்போ,
கொண்டல்வான்பனியினெழுச்சியோமற்றக்குளிர்ச்சியோற்றெட்டகஞ்சு
கமோ, மண்டுபொற்கடலைமதித்தகாட்பொதிக்குவயங்கொளிவெண்ணெய்
மற்றேயோ. (௧௨)

கூற்றுயிர்குடித்தகுரைகழ்லொருவன்குலவியசெம்பொன்மேனியிற்பா
னீற்றொளிபழுத்தவண்ணமோநெடுநாணிலத்திளைத்தாங்குநீர்மையிற
லாற்றல்சாலுதனுக்கிரசதமணிப்பூணமைத்ததோசுடுசுண்ணச்சாந்தந்
தேற்றியவாறோதெரிந்திலமனந்தன்றிண்ணிதிற்பொதிந்தவப்பரிசே. (௧௩)

அத்திறமேருவடிமுடிகாறுமாயிரமுடியுடையனந்தன்
பொத்துதல்புரியக்குலகிரியனைத்தும்பூளைவீயெனத்திசைபுகுத
மூத்தெறிந்தரங்கக்கருங்கடலனைத்துமோத்துண்டுகரைபொருதிரங்கச்
சத்தமேகமும்பஞ்சடரெனப்பறப்பத்தருக்குலஞ்சருகெனச்சுழல. (௧௪)

திங்களுங்கதிருங்கூறங்கெனத்திரியத்திசைக்கரிமதகமொத்தழுங்க
வங்கண்மாநிலமும்விசும்புமாறுடவண்டருங்கண்புதைத்தஞ்ச
வெங்களுந்துகள்பட்டொழியவான்முகட்டினில்ங்குடுக்கணங்களுமுதிர
வங்குதல்புரியுமூழியின்ஞான்றுவந்ததோவெனப்புவிமருள. (௧௫)

கூற்றெனவுருத்துநெருப்பெனக்கொதித்துக்கொடியவெள்ளிடியென முழங்கிச், சீற்றமுந்தானுந்தெரிவுருவண்ணந்தீப்பொறிவிழிக்கடைசிந்தி. நாற்றிசைமுகமுமொருமுகமாககாலிரண்டிரண்டெனக்கிடந்த, காற்றெழுந்தடர்ந்துதொடர்ந்துமீதூர்ந்துகைபரந்தலைத்தனைதயன்றே. (௧௬)

அலைத்தலுமேருவிலைவுருவண்ணமனந்தனுந்திண்ணிதின்யாத்துந்
தலைத்தலைசேர்ச்சியிலாவகைகாத்துத்தனதுடையாயிரம்பகுவாய்ப்
பிலத்தினில்வாயுவனைத்தையும்புகுத்திப்பெரும்பசிதணிந்திலாதவர்போற்
கலக்கமற்றின்றிவரவரப்பருகிக்கதுவுருப்பிரமமொத்துளனால். (௧௭)

வேறு.

இறங்க*வேற்றுஞ்சலாகையிலங்கொளித்
திறங்கொண்மேருச்†சிகரமொப்பாகவே
மறங்கொள்வாயுமதுகையினுற்சுழல்
கறங்குபோன்றதுகாசினிவட்டமே. (௧௮)

அண்டகூடமலைந்துகப்பற்பகல்
சண்டமாருதமின்னணந்தாக்கலு
மண்டுமொற்றலின்வாளராவேந்தனுங்
கொண்டுபெற்றினன்கோதாவொப்பாகவே. (௧௯)

வாயுவாற்றலும்வாளரவாற்றலுஞ்
சாயுமாறுசலிப்பதிலாமை‡யா
னேயும்வானவர்கண்டிறும்பூதெனு
வோயுமாறிரப்பாமெனவுன்னினர். (௨0)

உன்னிவிண்ணோருரகனிடத்தெய்தித்
துன்னுமாற்றலுனதேயித்தொல்புவி
சின்னபின்னம்படாதுசிறிதுநீ
மன்னநீள்பையொதுக்கெனவாழ்த்தினர். (௨௧)

வந்திவானவராற்றலுமற்றது
சிந்தைசெய்துசிறிதிடக்தந்ததாற்
சுந்தராசலஞ்சூழ்மணிகூடத்தொ
டந்தில்வாயுபிடுங்கியதாமரோ. (௨௨)

* 'இறங்கவெற்றும்' என்று பிரதிபேதம்.
† 'சிரகம்' என்று பிரதிபேதம்.
‡ 'வான்' என்று பிரதிபேதம்.

பிடுங்கலோடும்பெருவலிவாயுவை
யிடங்கொள்பூதலமீதுறுவண்ணத்தாற்
றடங்கொள்வானவர்தானவர்கையமைத்
தடங்குகென்னவடங்கியதென்பவே. (௨௩)

அரவவேந்தையுமாற்றல்வீங்கூழையும்
பரவிநம்வலிபார்த்தனம்யாமென
விருவிர்நீவிரிளைத்திலிரீண்டென
வுரவுநீண்முடியும்பர்கொண்டாடினர். (௨௪)

சண்டவாயுவுஞ்சர்ப்பமுமாறுதிர்ந்
தண்டர்போற்றவகன்றனரப்பொழு
தெண்டிசாமுகத்திந்திரனாதியோர்
தண்டலின்றியதம்பதத்தேகினர். (௨௫)

அங்கனுற்றதிறமஃதாதலாற்
றுங்கநீண்முடிச்சுந்தரமால்வரை
யிங்குவந்ததிறமற்றியம்புகே
ளுங்களன்பினனென்றினிதோதினன். (௨௬)

காவலஞ்செழுந்தீவுகவையிலாத்
தேவமேருவின்றென்றிசைப்பாங்கரும்
பூவலம்புநீர்ப்பொன்னிகன்றுடுமுன்
னேவலாற்றுமிழுக்கிறவத்தினால். (௨௭)

வாயுவேகத்தான்மாகயிலாயத்தி
னேயுநீண்மணிக்கூடத்தொடேந்தெழிற்
றாயநீடொளிச்சுந்தரமால்வரை
மேயகாவிரித்தென்கரைமேவிற்றால். (௨௮)

தணப்பில்சுந்தரசையமதனுக்குக்
குணக்கிரண்டுகுரோசத்தினெல்லையின்
மணக்குஞ்சாந்தமணிகூடமால்வரை
கணக்கிலாவளம்பூத்துக்களித்ததால். (௨௯)

அனையஞான்றமரற்புதலிங்கத்தைத்
துனிவிலன்பிற்சூரியருச்சித்துக்
கனைகருங்கடற்காசினிபோற்றவே
முனிவில்பேரின்பமுற்றியதென்பரால். (௩0)

பொன்னித்தென்கரைபொற்புறுபான்மையாற்
றுன்னியுற்றவச்சுந்தரமால்வரை
தன்னிற்சோதிதயங்குமணிமய
மன்னுகின்றமகாலிங்கம்வைகுமால். (௩௧)

வைகுமந்தமகாலிங்கந்தன்னுடன்
மெய்கலந்தழின்னுள்கிரிசுந்தரி
மொய்கருங்குழன்முற்றிழைச்செய்யவாய்ப்
பெய்கனங்குழைப்பேதையும்வைகுமால். (௩௨)

அன்னகுன்றந்தடியினகலந்தான்
மன்னுயோசனைமூன்றதன்மாமுடி
பன்னுகின்றபரப்பரையோசனை
யென்னவோதுவர்மேலவரென்பவே. (௩௩)

நலஞ்செய்கின்றநவமணிவண்ணமா
யிலங்குசுந்தரலிங்கமிருந்ததா
ணிலந்தணிற்புகுதாதந்தனீள்வரை
பொலன்கொண்மாமுடிபொற்புறத்தோன்றுமால். (௩௪)

அக்குவட்டிலரும்பெறலுச்சிமேன்
முக்கிளைத்தளிர்மொய்ம்மலர்க்கூவிளை
தக்கவன்னதன்கீழருடான்குடி
புக்கலிங்கம்பொலிந்ததுவென்பரால். (௩௫)

ஈறிலன்பர்க்குமெண்ணில்விண்ணோருக்கும்
பேறுநல்கும்பொருட்டப்பிறையுட
னாறுவன்னியரவமணிந்துமை
கூறுகொண்டுகுழகனுறைவனால். (௩௬)

தேவர்கின்னரர்சித்தர்விச்சாதரர்
யாவரும்மங்கணெய்தியுறைவரான்
மூவர்தம்மிலுமுன்னவன்மால்வரைப்
பாவையாளொடும்வைகுமப்பான்மையால். (௩௭)

எண்டிசாமுகத்துற்றுமிவ்வெற்பையுட்
கொண்டுளார்க்கும்பாரகதிகூடுமாற்
கண்டுளார்க்குங்கைதொழுவார்க்கும்வாய்
விண்டுவாழ்த்துநர்க்குஞ்சொலவேண்டுமோ. (௩௮)

வீறுசுந்தரவெற்பவண்மேவலாற்
பேறுநல்கும்பெயரத்தலந்தனக்
காறுசூடியருளாலவனிமேன்
மாறில்சுந்தரமாபுரமென்பரால். (௩௯)

தேவபாடையிற்செப்புமப்பேரினைத்
தாவிலாநதமிழ்தெரிநாவலர்
பூவின்மங்கைபொருந்தலினுற்செல்வ
மோவிலாதநல்லூரென்றுரைப்பரால். (௪0)

இககதைதக்கணெழுத்தொன்றுகற்பினுந்
தக்கவாறுசலிப்பின்றிக்கேட்பினு
மிக்கசெல்வங்கள்யாவையுமேவியே
யக்கணிந்தவரன்பதஞ்சேர்வரால். (௪௧)

ஆயுள்விஞ்சையருமகப்பேற்றுட
னேயுஞ்செல்வமிராசவசீகரந்
தூயநல்லறந்தொல்புகழெய்துவார்
மேயவிக்கதைகேட்கவிரும்பினோர். (௪௨)

சுந்தராசலச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௨௭௨.

---

நான்காவது

## பிரமதேவரருச்சனைபுரிந்தசருக்கம்.

---

வேறு.

ஏய்ந்தகாதலாலிராசதக்குணச்
சாந்திவந்துறுந்தன்மையாலயன்
வாய்ந்தபூசைசெய்வண்மைகூதநீ
யாய்ந்துசொல்கெனவவனுஞ்சொல்கின்றான். (௧)

---

'பிரமாவர்ச்சனைச்சருக்கம்' என்று பிரதிபேதம்.

படைப்புப்பூண்டுழல்வான்மையானமக்
கிடைப்படாச்செயலெய்துகின்றதாற்
றடைப்புணுதுளர்தன்மயத்துறக்
கிடைப்பதென்றெனுக்கேதமுற்றரோ. (௨)

அறஞ்செய்கிற்பவுமலக்கணெய்தியே
மறஞ்செய்கிற்பவுமாகிமன்னுயிர்
பிறந்தையெய்துமப்பேதம்யாவையுந்
திறந்தெரிந்துசெய்வதுமோர்செய்தியே. (௩)

தோற்றமேழெனத்தொகுத்துத்தொகையுயி
ரேற்றநாற்கதிக்கெய்தவேற்றலும்
பேற்றுக்கேடின்பம்பிணிகிழவுசா
வாற்றுமாறுமோரமைதியாகுமோ. (௪)

இன்பமெய்துவவெண்ணில்பல்லுயிர்
துன்பமெய்துவசொல்லினத்துணை
யன்புசெய்வனவலகிலாதன
வன்புசெய்வனவருக்கலாகுமே. (௫)

மணந்துவாழ்வனகோடிமண்மிசைத்
தணந்துசாம்புவகோடிதாவிலா
திணங்குசெல்வத்தகோடியேதமுற்
றுணங்குநல்குரவுறுவகோடியே. (௬)

தாழ்ந்துபோற்றுவவனந்தந்தம்மையே
சூழ்ந்துபோற்றவோங்குவவுமத்துணை
வீழ்ந்துநோயினுல்விளிவவெண்ணில
வாழ்ந்தநோயிலாதனவனந்தமே. (௭)

இழிவசிற்சிலவேற்றமாகவே
மொழிவசிற்சிலமூடஞ்சிற்சில
வொழிவிலாவறிவுத்வுநன்னெறி
யழிவில்விஞ்சையவனந்தகோடியால். (௮)

பிறப்பவாயிரம்பிறந்துபூமிசை
யிறப்பவாயிரமினையயாவையு
மறப்பிலாவகைமதித்துநோக்குதல்
சிறப்பென்றாகுமோசிறுமைத்தென்பவே. (௯)

ஆதலாலுளத்தமைதிவந்துற
நாதன்றாளிணைகளுமிப்போற்றுதற்
கேதுவாந்தலமேதுவாமென
வேதனோர்ந்துமேதினியைமேவினான் (௧௦)

மேவிநான்முகன்வேலைசூழ்புவி
தாவிலாத்தலமெவையுஞ்சார்ந்த
னோவிலாதுமையுடனிருந்துமெய்த்
தேவன்வாழுநல்லூரைச்சேர்ந்தனன். (௧௧)

சேர்ந்துமுக்கணன்செம்பொனாலயஞ்
சார்ந்துதாண்மலர்தலையிற்சூடியே
யார்ந்தகாதலாலருச்சனைசெய்வான்
வார்ந்துகண்கணீர்ததும்பவாழ்த்தினான். (௧௨)

கஞ்சமாமலர்க்கடவுள்வாழ்ததலு
மஞ்சனம்மிடற்றிறையனர்ச்சனை
நெஞ்சுவந்துநீநெறியிற்செய்கெனச்
செஞ்செவேயருள்செய்திட்டானரோ. (௧௩)

ஈசனல்லருளெய்திவேதிய
னேசவாவியொன்றமைத்துநீதியால்
வாசமாமலர்தூவிவைகலும்
பூசைசெய்தடிபோற்றினானரோ. (௧௪)

முண்டகாசனன்முறையினின்னணந்
தொண்டைவாய்க்கிரிசுந்தரியுடன்
மண்டுசோதியமாமணிமயத்
தண்டர்நாதனையருச்சித்தானரோ. (௧௫)

வேறு.

பருவமாயிரங்கடந்தபின்பனிமதிமிலைச்சு
முருவநீண்முடியும்பர்கோனுந்திருத்தவன்* செய்
பொருவில்பூசனைக்குள்ளுவந்தருண்மழைபொழிவா
னரிவைதன்னொடுமெவ்விலிங்கத்தினின்றெழுந்தான். (௧௬)

பனிச்செழுந்துணரிதழியம்படர்சடைப்பரப்பிற்
புனிற்றிளம்பிறைசெக்கர்வானெழுந்தெனப்பொலியக்
கனைத்தெழுந்திரைப்பா[illegible]
வனற்றதும்புகண்[illegible] (௧௭)

---

* 'சேய்' என்று பிரதிபேதம்.

செய்யதாமரைமலர்ந்தெனத்திருமுகங்கவினப்
பையராமணிக்குண்டலந்தோடொளிபரப்பத்
துய்யவானநாட்டரம்பையர்துணைவிழிக்கெழுத
மைகுழைத்துவைத்தாலெனமணிகண்டம்வயங்க. (௧௮)

மந்தராசலமதனுடன்வாருவையளப்பான்
சிந்தைசெய்தராச்சூழ்ந்தெனவங்கதஞ்செறிய
வந்தின்மான்மழுவரதத்தோடபயமுந்தாங்கி
யெந்தைகைத்தலச்சரோருகநான்குநன்கிலங்க. (௧௯)

உரியமுப்புரிநூலுடனோடியபசும்பொன்
வரிகொணீருடல்வயங்கொளிவளராமிடைந்தே
யரியசெம்பொனோடைவிரொளியிமைக்கும்பால்வெள்ளிப்
புரிமுறுக்கியதாலெனமார்பிடைப்பொலிய. (௨௦)

மேருமால்வரைப்பாங்கரின்விருப்பமீதூரச்
சேருமோர்பசும்பொற்கொடியாமெனச்செறிந்து
வாரும்பூங்குழல்வனமுலைபாங்கமைபணைத்தோ
ளீணருநுண்ணிடைவரைமகளொருபுடைநிலவ. (௨௧)

ஐங்கரத்தினோடாறுமுகனவனுமென்பா
லெங்கணாயகன்றனதிருமருங்கினுமெய்தச்
செங்கண்மால்விடைநெடுங்கொடிசேண்விசும்பளப்பக்
கங்குல்வந்தெழுமதியெனவெண்குடைகவிப்ப. (௨௨)

உரகர்கின்னரர்கருடர்கந்திருவரொண்சோதி
விரவும்விண்ணவர்விஞ்சையர்சாரணரியக்கர்
பரவுமாதவர்புரந்தரனிரந்தரம்பாங்காற்
புரவுபூண்டமான்முதலியோர்சூழ்ந்தடிபோற்ற. (௨௩)

தேவதுந்துமிதிசைதிசைமுழங்கொலிசெய்யத்
தாவில்தும்புருநாரதர்தீந்திரிசிவைப்
பாவைநல்லவர்பாற்கடல்வயிறுவாய்த்துள்ளார்
மேவுவெண்ணிலாச்சுகிர்ந்தகன்சாமரைவீச. (௨௪)

வெள்ளியங்கிரிமுதலினோர்மேருவேதண்டர்
தெள்ளுசெங்க[illegible]லைச்சேர்திருந்தாங்குப்
பள்ளவேலைசூழ்புவனெலாமேய்ந்தவெள்விடைமேல்
வள்ளறோன்றினன்றோன்றலும்வணங்கியம்மலரோன். (௨௫)

பாடினான்மறையாயிரகோடிகள்பாடி
யூடினான்மணிமுடிமிசையடிமலரன்பாற்
சூடினானுடனுளங்கினான்றுளக்கிலாவின்பங்
கூடினானவன்புத்திமையாவரேகுணிப்பார். (௨௬)

அன்புமீக்கொளவருவிநீர்கண்மலர்சொரிய
வென்புநெக்குநெக்குருகவேயிதயபுண்டரிக
நன்கினோடலர்தரப்புளகரும்பநான்முகத்தோன்
முன்புவந்தித்துப்பழிச்சுதல்புரியமுன்னினனால். (௨௭)

## வேறு.

மைக்கட்கொடிபங்குடையாய்சரணம்வடிகூர்மழுவாட்படையாய்சரணந்
தொக்குத்தருதாசுடையாய்சரணந்துணராரிதழித்தொடையாய்சரண
மிக்குச்சிலையாற்கிடையாய்சரணமெளியேற்கருள்கட்கடையாய்சரணஞ்
செக்கர்ச்சடையாய்சரணஞ்சரணஞ்சினமால்விடையாய்சரணஞ்சரணம்.

வேதப்பொருளாய்நின்றாய்சரணம்விரவாரரணம்வென்றாய்சரண
நாதத்தொனியாய்நிறைவாய்சரணநல்லூர்குடிகொண்டுறைவாய்சரணம்
போதத்துருவாகியவாசரணம்புகழெண்டிசைபோகியவாசரணங்
கீதத்தொலியாய்சரணஞ்சரணங்கேடில்வலியாய்சரணஞ்சரணம். (௨௯)

விடமாரமுதாநுகர்வாய்சரணம்விண்ணோர்பரவும்விமலாசரணந்
தடமால்வரைவார்சிலையாய்சரணந்தவளத்திருநீறணிவாய்சரணம்*
படவாளரவப்பணியாய்சரணம்பத்திக்குதவும்*பாதாசரண
மிடரானவைதீர்த்தருள்வாய்சரணமெனையாளுடையாய்சரணஞ்சரணம். ()

அணுவிற்கணுவாயமர்வாய்சரணமண்டத்தினுமேலானாய்சரண
முணர்வுக்குணர்வாயுறைவாய்சரணமொளிர்மாமணியின்னுருவாயசரண
மிணையற்றுயருமெந்தாய்சரணமீறில்பொருளாமிறைவாசரண
நண்ணுதற்கரியாய்சரணஞ்சரணநல்லூரரசேசரணஞ்சரணம். (௩௧)

மூவாமுதலேசரணஞ்சரணமுக்கட்கனியேசரணஞ்சரணந்
தாவாவொளியேசரணஞ்சரணந்தருகற்பகமேசரணஞ்சரணங்
கோவாமணியேசரணஞ்சரணங்குன்றாநிதியேசரணஞ்சரண
நாவாரமுதேசரணஞ்சரணநல்லூரரசேசரணஞ்சரணம். (௩௨)

## வேறு.

இத்திறம்பழிச்சிவேதனிணையடியிறைஞ்சிநிற்ப
முத்தகமுரிஞ்சும்பைம்பூண்முகிண்முலையிலஞ்சாயற்
கத்திகைக்கருமென்கூந்தற்காம்புறழ்பசுந்தோட்கன்னி
வித்தகப்பாகனோக்கிவேண்டுவகேண்மோவென்றான். (௩௩)

---

* ‘பரதா’ என்று பிரதிபேதம்.

அங்கணனிணையகூறவம்புயத்தவிசின்மேலோன்
பங்கயக்கரங்கள்கூப்பிப்பதமலர்பணிந்துபோற்றி
யெங்கணுயகயான்கேட்பதெவன்கொலோவென்றுநின்பாற்
பொங்கியவன்பேயல்லாலாயினும்புகல்வனென்றான். (௩௪)

இப்பரிசெங்கும்தஞ்ஞான்றுமிந்தவிங்கத்தினூடே
தப்புதலொருவியையசார்ந்துநீவிளங்கல்வேண்டு
மைப்படிகண்ணுள்செவ்வேள்வரமிகுநந்தியோடு
மொப்பிலித்திருவினுளுமுற்றருள்சுரத்தல்வேண்டும். (௩௫)

நவமணிமயமாயோங்குநலங்கொளிவ்விலிங்கந்தன்னை
யுவமையிலன்புதன்னுலுற்றருச்சனைசெய்வோர்க்குப்
பவந்தருவினைகணீக்கிப்பாங்குடனினைந்தவெல்லாஞ்
சிவந்ததாண்மலராய்நல்கிச்சிவகதியுதவல்வேண்டும். (௩௬)

அடியனேன்கண்டதீர்த்தத்தாடுநல்லவருக்கைய
வொடிவிலாப்போகமுற்றுமேழ்முறைமாந்திப்பின்னர்
நெடியவன்முதலாயுள்ளோர்நேசித்தேக்கற்றுநிற்கு
முடிவில்பேரின்பவீடுமுறைமையினளித்தல்வேண்டும். (௩௭)

எந்தைநின்வடிவமானவெழுத்தைந்தின்சித்தியந்தக்
கொந்தவிழ்கமலவாவிக்குளிர்புனற்படிந்துநின்னை
வந்தடிபணிந்துபோற்றிவரன்முறைவழாமலோதிச்
சந்ததமினிதுநல்குந்தானமீதாதல்வேண்டும். (௩௮)

இத்தலத்துறையுந்தூயோரெண்ணியவெண்ணியாங்கே
யத்தநீயருளிப்பின்னரழிவிலானந்தவீடுஞ்
சித்தமதுகந்துவாழத்திருவுளநயந்துநல்கி
முத்தலத்தவரும்போற்றமுறையுளியுறைதல்வேண்டும். (௩௯)

ஒருவழிப்பட்டென்னுள்ளமுன்னிருபாதமுன்ன
விருமையுமுதவுமெந்தாயிராசதகுணத்தின்சாந்தி
தருதலும்வேண்டுமென்னுததாமரைப்பொகுட்டின்மேலோன்
பொருவருமன்புகூரப்பொன்னந்தாள்வணங்கிநின்றான் (௪0)

அண்ணலவ்வரங்களெல்லாமருள்பழுத்தளித்துச்சோதி
வண்ணவற்புதலிங்கத்துமருவினன்வயங்காநின்றான்
கண்ணுடுமனமுந்தக்ககருணைலிங்கத்தின்வைத்துத்
தண்ணந்தாமரையின்மேலோன்றனதுலகடைந்தான்மன்னோ. ()

இயம்புமிக்காதைதன்னையெழுதுவோரிசைக்குநல்லோா
நயம்பெறக்கேட்குந்தூயோர்நன்றெனமதிக்குமேலோ
ரியைந்தனகுணங்களெல்லாமெண்ணியாங்கெய்தி*யன்னோர்
பயந்தருமின்பவெள்ளப்பரவையிற்படிவர்மாதோ. (சஉ)

## பிரமதேவரருச்சனைபுரிந்தசருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௱௪௪

---

ஐந்தாவது

## பிரமதீர்த்தச்சருக்கம்.

---

வேறு.

அரவுபூண்டவனருளாமெனவிந்நிலந்தவதரித்து
பரவுமாதவமிகுசூதமாமுனிவவிப்பாலெமக்கு
விரைகொடாமரையில்வாழ்வேதியனன்பினால்விதியினாற்றும்
பிரமதீர்த்தத்தியல்பேசெனவாங்கவன்பேசலுற்றான். (க)

எம்பிரான்சன்னிதிமுன்னர்நாற்சதுரமாயிலங்குசோதிப்
பைம்பொனாற்படிவகுத்தாங்கதற்குத்துறைபாங்கினன்கா
யம்புயாசனனமைத்தருளினாகாயகங்கைப்புனலா
லிம்பராருய்யவேயினிதுபூரித்தவனினையசெய்தான். (உ)

இந்திரன்றிசையினிருக்குவேதத்தையும்மதிசைக்க
ணந்தமிலாவெசுர்வேதமாங்கதனையுமமுதமூற்றுஞ்
சந்திரமவுலிசன்னிதியிற்சாமத்தையுந்தாவிலாத
மந்திரவதர்வணம்வடதிசைத்துறையினும்வைத்துமாதோ. (௩)

† ஆங்கதனடுவில்வேதாங்கமுமெம்பிரானருளின்மல்கு
நீங்கலின்றாயமூவறுபுராணங்களுநீதிசான்ற
பாங்கமைசத்தகோடிம்மகாமந்திரப்பரப்புந்தாபித்
தோங்குமன்பாலமைத்தானதன்பெருமையாருரைக்கவல்லார் (௪)

---

* ‘வியந்தநற்குணங்களெல்லாம்வேண்டியாங்கெய்தி’ என்று பிரதிபேதம்.
† ‘ஆங்கவணடுவில்’ என்றும், ‘ஆங்கவனடுவில்’ என்றும் பிரதிபேதம்.

அத்தனைப்பெருமையாலலரின்மீமிசையவனமைந்ததீர்த்தந்
தெந்தலத்தினுமுளகங்கையேமுதலயாறெவையுமீர
முந்தெறிமானதமுதலவாடைகளுமூழ்கியேதந்
தொந்துறுமாசுதீர்ப்பான்வரும்வற்சரந்தோறுமாதோ. (௫)

திக்குநான்கினுமுளோரார்மூசுதீர்க்கும்புனற்றீர்த்தம்யாவு
மக்குளத்தாடுதீப்பாவநீங்கும்பரிசாகுமென்றுற்
றெற்க்குமூழ்கினர்பவன்சொல்லலாந்* தகையவோசுருதியாலு
முக்கணனல்லதியாவரேயதனிலைமொழியவல்லார் (௬)

அந்தணர்தீதப்பிறோரருள்புரிகுரவனுக்கவதிசெய்தோர்
சுந்தரவனிதையர்கருவழித்திடுதல்செய்சுமடர்தூய
நந்தலில்லாதவாசான்மனையாட்டிபானலம்விழைந்தோர்
மைந்துடைக்களியினன்மதுவருந்திடுதல்செய்மாட்சியிலோர் ()

ஊனினுக்கழிவுசெய்யாதர்வேற்றோர்பொருட்காசைவைத்தோ
ரூனமில்பிறர்மனையாட்டிபான்மோகம்வைத்துழலுந்தீயோர்
ஞானமாதவர்தமைநிந்தனைபுரிபவர்நடுவிலாத
வீனர்மற்றிவருமூழ்குவரெனில்வினையொழிந்தின்புசேர்வார். (௮)

விருச்சிகத்திங்கணுண்முப்பதும்வெய்யவன்மேவுபோதி
னிருக்குநல்வேதவண்டுறையினின்மூழ்குவோர்தீதிலாத்
வுருக்கிளர்செய்யவாய்ப்பைந்தொடிபாகர்வாழுலகுசேர்வார்
திருக்குதீவினையொழிந்தவர்பிதிர்க்களுங்கரைசேர்வான்றே. (௯)

ஞாயிறுட்சியின்மவுனத்தொடுமம்மதிநாளினங்கட்
டேயசாமந்துறையாடினோர்வினையெலாந்தொலைந்துநாத
னேயநல்லருளினனிலமெலாம்புரந்துபின்னெறியினாலே
வீயுமாறின்றியுநிரதிசயானந்தவீடுசேர்வார். (௧௦)

வெண்ணிலாச்செங்கதிர்மேவுநாளில்யசுர்வேதமல்கும்
வண்ணவார்துறையினிலாடியேதருப்பணமரபினாற்றி
யுண்ணிலாமன்பினுலாமலகத்தனவுளுத்தமாவாற். [தே
றிண்ணமாய்ச்சேர்த்தபிண்டந்தினைப்பிதிர்க்களைச்சிந்தைசெய்

தென்றிசைநுனியதாய்த்தருப்பையைப்பரப்புசெங்கைநன்னு
னன்றுறவவர்களுக்களித்திடிலிவர்புரிநன்மைதன்னை [கோர்
லொன்றுமப்பிண்டியின்பொடிகளைத்துணையவையொன்றினுக்
மன்றவற்சரமான்மருவுநற்கயிலையின்வாழ்வரன்றே. (௧௨)

---

* தகையமோ' என்று பிரதிபேதம்.

முப்புரிநூலினாரசர்வாணிகருமுறைமையாளர்
செப்பிளமுலையினார்யாவரேயெனினுமுன்செப்பும்வண்ணம்
மெய்ப்புறுமுச்சியிற்புரிவரேலவர்களும்வினைகடீர்ந்தே
யிப்புவிதன்னில்வாழ்ந்தெம்பிரான்கயிலையிலெய்திவாழ்வார். (௧௩)

முந்திநன்முனிவிர்கேண்மின்விதிபாதமேமுதலவாய்
வத்தகைநற்றினமிவையினுங்காடினுமல்லறீர்ந்து
தத்துநீர்ப்பரவைசூழுலகெலாமினிதுடன்றனிபுரந்து
கத்திகைக்கூந்தனங்கவுரியோர்பாகனார்கயிலைசேர்வார் (௧௪)

மாகமாதத்தினிலதர்வணத்துறையினில்வந்துமூழ்கி
யேகமானதர்களாயெம்பிரான்பதயுகமேத்துவோரை
வேகமாங்கழுதொடும்பிரமராக்கதமுதல்வெருவியோடிப்
போகுமாற்கண்டபோதேயெனிலதனிலைபுகல்வதேயோ. (௧௫)

மேடமாதத்தினிற்சித்திரைநாள்வயின்விளம்புசாமத்
தீடுசாறுறையினின்மூழ்கியெம்மானடியிறைஞ்சுகிற்போர்
நீடுதீவினையெலாந்தீயிடும்பஞ்சுபோனீறதாக்கிப்
பீடுசாலுலகில்வாழ்ந்தெங்கணாயகனருள்பெறுவரன்றே. (௧௬)

இடபமாதத்தினிலன்லனுண்மூழ்கியெங்கோனையேத்தின்
மடவனாம்வேதவீனப்பிராமணனுநான்மறைகள்கற்ற
திடனுளனாகியாகங்களுஞ்செய்துமெய்த்தேவுமாகக்
கடவனாவன்மறுமைக்கண்மற்றதனிலைசணிப்பதேயோ. (௧௭)

எத்தகைக்காலமாயினுமதின்மூழ்குவோர்யாவரேனுங்
கொத்துடைத்தீவினைமுற்றவுந்தீர்ந்துநற்கொள்கைநண்ணிச்
சித்தமன்புறுவனமுழுவதுநல்குமெய்ச்செல்வமெய்திப்
பைந்தலைப்பாருலகாண்டுவிண்ணுலகமும்பாங்கினாள்வார். (௧௮)

உச்சியம்போதினிற்சித்திரைத்திங்களினுலகமெல்லா
நச்சிய*சுவையினாட்பிரமதீர்த்தப்புனனாடியள்ளி
மெச்சியவிழைவினொருதுளியாயினும்விழுங்கினன்னோ
ரச்சமினெஞ்சகத்துச்சிவலிங்கமேயாகுமன்றே. (௧௯)

அன்னவர்க்காணினுந்தீண்டினுங்கேட்பினுமளவளாவி
நன்னயக்கிளவிகள்சிற்சிலபகரினுஞாலமெல்லாந்
துன்னிவல்வினைதொலைத்தின்பவீடடைவராற்சுமடரென்றாற்
பன்னவும்வேண்டுமோவப்பெரியோர்கடம்பான்மைமாதோ. (௨௦)

---

*'சுளகுநாள்' என்று பிரதிபேதம்.

தாவிலாவாங்கவர்புக்கவாறெங்குநற்றலமதாகு
மோவிலாமந்திரமாகுமான்மற்றவருரைகளெல்லா
மேவியாடும்புனற்கங்கைநீரதாகுமால்விண்ணுளோரும்
பூவைபோல்வண்ணனும்புகழ்வரேலவர்நலம்புகலற்பாற்றே. (உக)

புள்ளுலாவும்மலர்பொதுளுமிவ்வாவியிற்போந்துமூழ்கி
யெள்ளிலோர்பாதிதானல்கினுமன்னதுமேமகூடத்
தள்ளுருவரையெனப்பொலியுமாலத்தலந்தானமேன்மை
கள்ளுலாங்கொன்றைவேணியனலால்யாவரேகணிக்கற்பாலார். ( )

ஆதியூழித்தனிற்பிரமபுட்கரிணியாமடுத்தவூழி
வேதபுட்கரிணியாமேதினியோர்கண்மூன்றாம்யுகத்திற்
காதரந்தீர்த்திடும்புண்யபுட்கரிணியாங்கலியுகத்தி
லேதமில்சத்தசாகரமதாம்பெயரதற்கென்பரன்றே. (உங)

பிரமதீர்த்தந்தனக்கிணைபுவிமீதினிற்பிறிதொன்றில்லை
விரவியநவமணியிவ்விலிங்கத்தின்மேல்வேறொன்றில்லை
பரவுமிச்சுந்தரநகரிபோற்புடவிமேற்பதியொன்றில்லை
வரமிகுமுனிவிர்மூவகைவிசிட்டமுமவண்மன்னுமன்றே. (உச)

ஆதலாலத்தலந்தீவினைதீர்த்திடுமறம்பெருக்கும்
பேதைமைநீக்கிஞானநன்னெறிதரும்பெற்றியாலே
காதரம்பேர்த்திடுங்கயிலையங்கிரியில்வாழ்கடவுள்செம்பொற்
பாததாமரைதருமப்பதிமேன்மையார்பகர்தற்பாலார். (உரு)

இக்கதைபடிப்பவர்கேட்பவரெழுதினரெழுதுவிப்போர்
தொக்கதீவினையெலாந்துகள்படுத்திக்கடல்சூழும்பார்மேன்
மிக்கவிந்திரனெனத்தங்கிளைதன்னொடுமேவிவாழ்ந்து
முக்கணனுலகிணையடைவதுதிண்ணமாமுறையினன்றே. (உசா)

பிரமதீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

ஆ௳ திருவிருத்தம்—கசo.

## ஆறாவது

# பஞ்சாக்கரச்சருக்கம்.

---

### வேறு.

விழுத்தவக்கிழவோர்மிகுகாதலாற்
றொழத்தகுந்திறற்சூதனைநோக்கியே
யெழுத்தீராரைந்தினியல்புறுசித்திதன்
வழுத்துகாதைசொல்கென்னவகுக்கின்றான். (க)

உடைதிரைக்கடலொப்பக்கவுட்குழி
மடைதிறந்துசொரிமதவாரணப்
* பிடரினேறியப்பீடுடைவானெலா
மடையக்காக்குமோராயிரக்கண்ணனும். (உ)

உம்பர்யாவர்க்குமொள்ளழற்குண்டத்து
ளிம்பராகுதியேற்றொருவேற்றைமேற்
பம்புசோதிபரப்பிவந்தேயருள்
விம்பவாயெழுநாவுடைவேந்தனும். (ங)

ஏற்றுவன்பனையீர்ந்துவைத்தாலெனத்
தோற்றுங்கோடுடைந்துங்கப்பகட்டின்மே
ளாற்றிசைக்குநடுவனென்றேவருஞ்
சீற்றமிக்கதோர்தென்றிசைவேந்தனும். (ச)

குருதிகொப்பளிக்குங்கொலைவாட்படை
பொருதிரைக்கடல்போன்மெனச்சூழ்வரப்
பிருதிவிக்கட்பிரேதத்தின்மேல்வரு
நிருதியென்னுநெடுந்திறல்வேந்தனும். (ரு)

வெள்ளவேலையொரேழுக்கும்வேந்தெனத்
துள்ளித்தாவுஞ்சுறாவின்மிசைவருந்
தெள்ளுசோதிச்செழுமணிநீண்முடி
வள்ளற்றாரகலத்துவருணனும். (சு)

---

* 'பிடரினேறியபீடுடை' என்று பிரதிபேதம்.

விண்ணந்தாவும்விறலுடைவான்கலை
வண்ணமாமுதுகேறிவலம்வரு
மெண்ணிலாற்றலியல்புளியெய்திய
தண்ணந்தாமச்சதாகதிவேந்தனும்: (௮)

பெரிங்குநீடொளிப்புட்பகவூர்திக்கு
மெங்குமேத்துமியக்கர்தஞ்சாதிக்குஞ்
சிங்கநீணிதியாதிக்குஞ்சம்புவின்
வெங்கணன்வடவீதிக்கும்வேந்தனும். (௯)

அள்ளிவாரித்தன்னகமுழுவதும்
வெள்ளைநீறெருளிவீசிடப்பூசியே
துள்ளுமால்விடையேறித்துரத்துபு
தெள்ளுபாற்கடல்போல்வருஞ்செல்வனும். (௧௦)

கற்பகச்செழுந்தாமங்கமீழ்தரு
பொற்புரிக்கபுனைமணிமோலியார்
விற்பழுத்தொழுகுஞ்செழுமேனியார்
மற்புயத்துயர்வானவர்யாவரும். (௧௧)

குய்பர்சாரணர்கோதில்விச்சாதரர்
கையில்யாழ்பயில்கந்தருவத்திஞர்
வெய்யநாகர்வியக்குமியக்கர்க
ளெய்யசித்தரினையதொல்லோர்களும். (௧௨)

வள்ளவாய்க்கமலங்கண்மடைதிறந்
தள்ளல்வாரியிறைய்கநவூற்றவே
துள்ளுமேழ்பரிதூண்டிவந்தீண்டிய
தெள்ளுசோதிச்செழுங்கதிர்ச்செல்வனும். (௧௩)

அமிழ்துசூற்கொண்டரும்பியவெண்ணிலா
வுமிழுமாறுசெய்தூடறுத்தேகலா
விமிழ்திரைக்கடல்வையததிருள்கெடத்
தமிழ்சுரக்குமத்தண்மதிவேந்தனும். (௧௪)

ஆரல்பண்டிதனுண்டளப்பான்புகர்
காரியாதியகோள்களுங்காண்வரும்
பாரின்மங்கையம்பங்கயச்செல்வியும்
வீரபத்திரையும்பொருவிக்கையும். (௧௫)

காசிபன்கும்பயோனிகவுதமன்
மாசின்மார்க்கண்டன்மாண்டவியன்றவத்
தாசில்கண்ணுவனத்திரியங்கிரா
வோசைபெற்றவசிட்டனுரோமசன். (கரு)

சீலம்வாய்மைசெறுமையருணலுங்
காலமூன்றுமுணர்தல்கடைப்பிடித்
தேலநற்றவஞ்செய்தலிவைபெறும்
வாலகில்லியராதிவரர்களும். (கசு)

இன்னதன்மையிமையவர்யாவரும்
பொன்னையன்னபுரிசடைச்செல்வருந்
தன்னையொத்தவச்சத்தியலோகம்புக்
கன்னவூர்தியடியிணைபோற்றினுர். (கஎ)

போற்றிவந்திக்கும்புங்கவராதியா
மேற்றமிக்கவர்யாரையுநோக்கியே
சேர்றிதட்கமலத்தமர்செவ்வியான்
றேற்றமிக்குளீர்வந்ததென்சொல்கென்றான். (கஅ)

என்னநான்முகன்கூறலும்யாவரும்
பொன்னைநோக்கிப்புகல்கெனவோதினு
ரன்னவன்மலரோனடித்தாமரை
முன்னமேத்திமுறைமையிற்கூறுவான். (ககூ)

ஈறில்போகமெவர்க்குமளிப்பது
மாறிலாதவரகதியுய்ப்பதுந்
தேறில்யாததுதேர்ந்துரைசெய்யெனக்
கூறினனவனுங்குறித்தோதுவான். (உ0)

அலகில்வேதமுதலவனைத்தையு
முலகமீன்றவொருவனெருங்குணர்ந்
திலவவாயுமைபங்கனெழுத்தைந்தி
னலமதித்தனனுகிகவில்கின்றான். (உக)

உறுதியாவுமுதவுமத்தன்மைய
திறுதியில்லைக்தெழுத்தன்றியில்லையா
னறுமலர்க்கமலத்துறைநான்முக
னறிதிரீதெனவாங்கவர்க்கோதினன். (உஉ)

ஓதலோடுமெங்குற்றவர்யாவரு
மாதுபாகன்மகிழ்ந்தவம்மந்திரம்
பேதையேமறியுந்திறம்பேசெனப்
போதின்மேலவனும்புகல்வானரோ. (௨௩)

என்னைநீன்றமுராரியும்யானுமற்
றன்னதன்பரிசின்றளவாய்ந்திலங்
கன்னலஞ்சொற்கவுரியோர்பங்குடை
முன்னவன்னலதியாவர்மொழிவரால். (௨௪)

ஆதலாலரனம்புயத்தாண்மலர்
காதலாற்பணிந்தேத்திலக்கண்ணுதற்
பூதநாதனேபுண்ணியவஞ்செழுத்
தோதுவாயெனவோதிமற்றோதுவான். (௨௫)

சண்டவாயுவினாலித்தராதலத்
தெண்டிசாமுகம்யாவையுமேத்தவே
பண்டுவந்தபசும்பொற்சிகரமொன்
றுண்டெனாவதனுண்மையுங்கூறினான். (௨௬)

கூறலோடுங்குறிக்கொண்டனைவரும்
பேறுநல்கும்பிரானடிபோற்றுவான்
றேறுநீர்ப்பொன்னித்தென்கரைப்பாங்கரி
னீறிலாமகிழ்பூப்பவந்தெய்தினார். (௨௭)

எய்திவானவரேந்தியகொள்கையா
ருய்திநல்குநல்லூரைவலங்கொண்டு
செய்திகூரத்திசானனன்வானதி
பெய்ததீர்த்தத்துடன்பெற்றிமூழ்கியே. (௨௮)

நியமமுற்றிகிலவியகாதலா
னயனமூன்றுடையானைநல்லூரில்வாழ்
கயனெடுங்கண்ணிபாகனைக்கைதொழு
தயலுளம்புகுதாதருச்சித்தரோ. (௨௯)

தத்தம்பேரினாற்றாபித்திலிங்கமுஞ்
சித்தமின்புறத்தீர்த்தங்களுங்கண்டு
பத்திமீக்கொளப்பற்பகலர்ச்சித்தார்
முத்தனும்மவைகண்டருண்முற்றியே. (௩0)

கரும்புமென் றதையொக்குங்கனிமொழி
யரும்பிளங்கொங்கையாளலர்ப்பூந்தொடைச்
சுரும்புலாங்குழலாள்கிரிசுந்தரி
விரும்பிவாமத்துமேவிவிளங்கவே. (௩௧)

ஐங்கரத்தொருபோதகமாறிரு
துங்கவண்புயத்தோன்றன்முன்றோன்றவான்
றிங்கள்வெண்குடைசென்னியின்மீமிசைப்
பொங்குசீர்நிழல்செய்துபொலியவே. (௩௨)

விடைநெடுங்கொடிவிண்ணந்தடவர
விடபவூர்தியின்மீமிசையேறியே
புடையிற்பூதகணம்பலபோற்றிடக்
கடவுளன்னவர்காண்வரத்தோன்றினன். (௩௩)

எந்தைதோன்றலுமிந்திரனாதியோர்
தந்தமன்புதமக்கெல்லைகாண்கிலார்
கந்தமாமலர்தூவிக்கனிவினால்
வந்தித்தாடிவழுத்தத்தொடங்கினார். (௩௪)

வேறு.

சையம்யாவைக்குமேலாந்தமனியப்பொருப்பினின்றுந்
துய்யபூஞ்சோலைசூழ்ந்தசுந்தரச்சிகரத்தோடும்
பையராமவுலிமீதுபாங்குடன்பரிக்குமிந்த
வையகமுய்யவந்தவள்ளலேபோற்றிபோற்றி. (௩௫)

பூரணப்பொருளதாகிப்புறம்புமாயுள்ளுமாகிக்
காரணச்சுடராயார்க்குங்களைகணாய்க்கருணைமல்கி
யாரணத்தலைவன்செய்தவருச்சனைக்குகந்துநல்கும்
வாரணத்துரியாய்நல்லூர்வரதனேபோற்றிபோற்றி. (௩௬)

எங்கணாயகனேபோற்றியெவர்க்குமேலவனேபோற்றி
பொங்கராவணிந்தாய்போற்றிபுரிசடைப்புனிதாபோற்றி
செங்கண்மாலறியாய்போற்றிதிருமலைச்சொக்கியென்னு
மங்கைபங்குடையாய்நல்லூர்வரதனேபோற்றிபோற்றி. (௩௭)

இன்னனதுதிகள்கூறியிணையடியிறைஞ்சிநிற்ப
முன்னவனோக்கிநீவிர்முன்னியதெவன்கொலென்னப்
பன்னகமணிந்தோன்பாதம்பணிந்தனர்மீண்டும்போற்றி
யன்னவருவகைபூப்பவாங்கதுமொழியலுற்றார். (௩௮)

பிஞ்சுமாமதியஞ்சூடும்பிஞ்ஞகனினதுநாமத்
தஞ்செழுத்தோதல்வேண்டுமதனிலையடியேமுய்யச்
செஞ்செவேயுபதேசித்தல்செய்தவைசெபிக்குமாறு
நெஞ்சிடைநினையும்வண்ணநீயினிதருளவேண்டும். (௩௯)

பொன்னலரிதழிசூடும்புனிதநின்சரணத்தென்று
மன்னுபேரன்புவேண்டுமெகிழ்ந்தியாமருச்சித்தேத்துந்
துன்னியசோதிலிங்கமெவற்றினுந்தொழுவோர்தொல்லை
யின்னறீர்த்தருளிநாளுமிலங்குதல்வேண்டுமன்னோ. (௪0)

பாசிழைப்பரவையல்குற்பாவையோர்பாகங்கொண்ட
வீசயாமமைத்ததீர்த்தமூழ்குநரெவர்க்கும்பார்மேன்
மாசினையகற்றிமீளாவாகதிகொடுத்தல்வேண்டு
மாசைமற்றெமக்கீதென்றுரையனுமதற்குநேர்ந்தான். (௪௧)

வேறு.

ஒப்பரும்*பரிசுநீடியோர்மலைத்தீயெனச்
செப்புமச்செயலினோர்செனனகோடியினூறு
மெப்பெரும்பாவமுமீறுகண்டிடுதல்செ
ய்ப்பெருந்தன்மையதஞ்செழுத்தாகுமே. (௪௨)

சத்தகோடிம்மகாமந்திரந்தன்னிலு
முத்தமோத்தமமெனவுரைசெயுந்தகையதூஉ
நித்தமாநிலையதூஉநிகரில்பன்மறைகளி
னத்தமாகின்றதூஉமஞ்செழுத்தாகுமே. (௪௩)

திருந்தியவிஞ்சையுஞ்செய்தவமேன்மையும்
பொருந்தியவாயுளும்புகழ்மையும்பூப்பதூஉ
மருந்தினுமினியதூஉம்வன்பெரும்பிறவியி
னருந்துயர்களைவதூஉமஞ்செழுத்தாகுமே. (௪௪)

வழுவிலாவெண்வகைமாபெருஞ்சித்தியும்
பழுதிலாமரபினற்பன்னுவார்க்கெண்ணியாங்
கொழிவிலாமாட்சியினுற்றபோகத்துட
னழிவில்வீடருள்வதூஉமஞ்செழுத்தாகுமே. (௪௫)

மேயநம்மாற்றலுமிக்கநஞ்செல்வமு
மேயநன்னாமமுமீறிலாநீர்மையாற்
றாயநங்கரசரணாதியுந்தொன்மையே
யாயதூஉமத்தகையஞ்செழுத்தாகுமே. (௪௬)

* 'பஞ்சு' என்று பிரதிபேதம்.

வீறியாமும்மெமைவிட்டகலாதநம
மீறிலாச்சத்தியுமேயவான்மாவுமாய்க்
கூறுசேரிருண்மலக்கொத்துமாய்க்குடிலையோ
டாறுமாகின்றதூஉமஞ்செழுத்தாகுமே. (௪எ)

வன்பராய்முருடேர்மனத்தினராயினு
முன்பிலாநெறிபயின்மூர்க்கரேயாயினு
மின்புகூர்தரவுளத்தெண்ணுவோர்தமையெமக்
கன்பராய்ச்செய்வதூஉமஞ்செழுத்தாகுமே. (௪அ)

இத்திறம்பற்பலவினிதெடுத்தெம்பிரா
னத்தகையஞ்செழுத்தமைதியவ்வானவர்க்
குத்தமமுனிவர்காளோங்குதாரகமுடன்
சித்தமின்புறவுபதேசஞ்செய்தானரோ. (௪௯)

தேவதேவனுபதேசஞ்செய்தன்னவர்க்
கோவிலாதோதுமாறிவ்வண்ணமோதினன்
பூவுலாம்பிரமதீர்த்தத்தினிற்போந்துநீ
ரேவருமூழ்கினியமம்புரிந்திட்டபின். (௫0)

அம்புயப்பொகுட்டினனருச்சனைபுரிந்தநஞ்
செம்பொனீடவிரொளித்திவ்யலிங்கத்தினைப்
பைம்பொனுவையம்வலமாகவேபாங்கின்வந்
தும்பர்காளுமையுடனுவந்துசேவித்தரோ. (௫க)

தக்கிணமூர்த்திதன்சன்னிதியெய்திநீண்
முக்கிளைக்கூவிளைமூலத்தின்வைகியே
மிக்கவாதரவினன்மேவரவெணமகிழ்ந்
தொக்கவோராயிரத்தெட்டுருவோதியே. (௫உ)

நீதியான்முற்றியேவிட்டபின்னெஞ்சினிற்
காதலாயினவெலாங்கடிதுசித்திக்குமா
லாதலாலும்பர்காளஞ்செழுத்துண்மையா
மோதுமாறேதிநீருய்ம்மினென்றுரைசெய்தான். (௫௩)

சந்தமார்காவிரிதனக்குத்தென்பாலினிற்
சுந்தரகிரியின்மேற்சோதிநீண்மயமதா
யந்தமில்லாதநம்பீலிங்கமதுற்றதா
லிந்தமெய்த்தீவுதீவேழினுமுயர்ந்ததே. (௫௪)

மாகயிலாயநீள்சிகரமிவ்வான்பதி
யாகையாற்பரதகண்டம்மிஃதாதலா
லோகைகூர்சித்தித்தானம்மெனவுணர்மினென்
றேகநாயகன்மொழிந்தினையவும்புகலுவான். (௫௫)

இத்தலத்தைந்தெழுத்தெவர்களோதினுந்து
பத்துநூறாயிரப்பத்தெனப்பலித்திடு
மத்தலைகயருச்சனையதுலமா* மாதலான்
மெய்த்தலமிதற்குநேர்வேறுமற்றில்லையே. (௫௬)

கன்மபேதத்தினாற்காண்வருந்தகையவாம்
வன்னவித்தியாசத்தான்மற்றவிம்மந்திரம்
பன்னிலையைந்ததாம்பரகதிவேண்டுவோர்
பின்னைவேறுள்கலர்பெற்றியினெண்ணுவார். (௫௭)

அக்கமாமணியினாலவிர்பளிங்கவற்றினான்
மிக்கவித்துருமந்தால்வேறுமித்திறத்தினாற்
றொக்கநீள்வடத்தினாற்றாமிலிம்மந்திரந்
தக்கவாறெண்ணுவார்சற்சதிக்குரியரால். (௫௮)

விருச்சிகத்திங்களின்மேவுகார்த்திகைதனிற்
றிருத்துபூரணைதனிற்செய்யவேற்குமரனை
யருச்சனைபுரிந்துசன்னிதியிருந்தைந்தெழுத்
துருத்தொகுத்தோரவனொப்பவீற்றிருப்பரால். (௫௯)

அக்கினிகோத்திரத்தடலையாலடைவுசான்
மிக்கதோர்விரசவோமத்தின்வெண்பொடியினாற்
றக்கவௌபாசனத்தவளவெண்பூதியாற்
றொக்கசைவாக்கினித்தூயவெண்ணீற்றினால். (௬0)

சென்னியினெற்றியிற்றிருந்துகந்தரத்தினிற்
பொன்னணிமார்பினிற்பொற்புறுமுந்தியின்
மன்னியதோண்மணிப்பந்தமற்றிவற்றினிற்
கன்னமேமுதலியகவின்கொளங்கங்களில். (௬௧)

அக்கினியாதியமந்திரமவற்றினாற்
பொக்கமின்னெறிகொடுபுனைந்துகண்டிகைவடந்
தக்ககண்டம்முதற்றரித்திதுவோதுவோர்
மிக்கநம்பொற்கயிலைக்கண்வீற்றிருப்பரால். (௬௨)

---

* 'அருச்சனையதுவுமாம்' என்று பிரதிபேதம்

பூதிகண்டிகையணியாதவர்புலையரே
யாதலாலவர்களையாற்றெதிர்ப்பட்டவர்
சீதநீரங்கிதேனுவைநமைத்தெரிசியா
வேதமில்லைந்தெழுத்தெண்ணிமாசொழிவரால். (௬௩)

காசியிற்றமதுடன்முடிவுகண்டிடுமெவ
ரேசிலாமுத்திவீடெய்துவரித்தலத்
தோசைகூரஞ்செழுத்தொருமுறையோதுவோர்
மாசுதீர்ந்திறுதியில்வரகதியுறுவரால். (௬௪)

ஒருகணழித்தலத்துறைவரேலன்னவர்
பெரிதுநங்கயிலையிற்பிரிவிலாதுறைவரென்
மருவுவீடாதியுமரிக்கின்மற்றவைகளு
மருமைசால்வரகதியடைவதுதிண்ணமே. (௬௫)

சேணிடைச்சுந்தரச்சிகரநோக்கினர்களு
மேணுடைப்பாதகமெவையுநீங்குவர்களாற்
காணவோர்மூன்றடிகாலையிற்செல்குநர்
பேணுவாம்பரிமகப்பேறுபெற்றுய்வரே. * (௬௬)

கந்தனந்திகவுரியுடனுந்தமக்
கந்தமில்லின்ப†வீடருளிநாநாளுமிச்
சுந்தரகிரியின்மேற்றுன்னிவாழ்வோமெனு
வெந்தைகூறியிலிங்கத்தமர்ந்தானரோ. (௬௭)

இன்னவாறெம்பிரானினிதுரைத்தேகினன்
சொன்னவாறனையவர்சூழ்ந்தனர்புரிதலு
மூன்னுமாறைந்தெழுத்துயர்பெருஞ்சித்திகண்
மன்னினாரவர்பெறுமாட்சிநான்வகுப்பதோ. (௬௮)

ஐந்தருநீழலினரியணைப்புறமிசைச்
சுந்தரநீண்முடிச்சுரர்தொழுதேத்தவே
மந்திரவைந்தெழுத்துதவும்வீண்சித்தியா
லிந்திரனரசவீற்றிருந்தனனென்பவே. (௬௯)

அங்கிவானவன்சுசியடைந்தனனந்தக
னெங்கணுந்தருமனென்றேத்தவீறெய்தினன்
றுங்கவாணிருதியுந்தொகையிலாநிசிசார்
தங்கணாயகனெனுந்தலைமைபெற்றனரோ. (௭0)

---

* 'பெற்றுயர்வரே' என்று பிரதிபேதம்.

† 'வீடருளினநாளும்' என்றும், 'வீடருளிநாணும்' என்றும் பிரதிபேதம்.

மறிகடற்கிறையெனவருணன்வாழ்வெய்தின
னெறுழ்வலிக்கிணையிலானெனவொலியோங்கின
னுறுநிதிக்கிழவனுயுத்தரதிசைபுரந்
தறைகழற்பிங்கலனரசுவீற்றிருந்தனன். (௭௧)

காளகண்டமுறுதற்கண்ணும்விண்ணோர்தொழுந்
தாளதாமரையுமுச்சம்புவொப்பாகவே
கோளிலாச்செல்வமுங்குறைவறப்பொருந்தியே
மீளியீசானனும்வீற்றிருந்தானரோ. (௭௨)

அள்ளிருட்படலமேய்ந்தாயிரங்கதிரினால்
வெள்ளநீருலகெலாம்வெய்யவன்விளக்கலுந்
தள்ளரும்பனிக்கதிர்சந்திரன்படைத்ததுந்
தெள்ளுமம்மந்திரச்சித்தியாலென்பவே. (௭௩)

வாலகில்லருமெழுவாம்பரித்தேரினன்
காலும்வெங்காய்கதிர்காண்வரத்தாங்கியிஞ்
ஞாலம்யாவையுமிடர்நண்ணுறுதருணல
மாலபாரணனெழுத்தைந்தினாலென்பவே. (௭௪)

எண்வகைச்சித்தியுமெத்துணைப்பெருமையுந்
தண்ணளிக்குறையுளாந்தாபதரடைந்ததுங்
கண்ணுதற்கடவுடன்கருணையின்வடிவமா
மண்ணலைந்தெழுத்துடையாற்றலாலென்பவே. (௭௫)

எத்தகைத்தேவரும்மெவ்வகைமுனிவருஞ்
சித்தமுற்றெறவைகளுஞ்சேர்ந்துவாழுந்திற
மத்தகையைந்தெழுத்தாற்றலேயெனிலதன்
வித்தகச்சித்தியின்மேன்மையார்புகல்வரே. (௭௬)

இப்பெரும்பதியினிலெம்பிரானைந்தெழுந்
தொப்பருஞ்சித்திபெற்றுய்ந்துளாரளவியான்
செப்புறுந்தகையதோதெண்டிரைமணல்களு
மப்பெருந்தொகையுறைக்காற்றுமாறரிதரோ. (௭௭)

இப்பெருங்காதையையெழுதுவோருரைசெய்வோர்
தப்புதலின்றியாதரவினாற்கேட்பவர்
முப்பெரும்பகையையுமுடிவுகண்டீறிலா
வொப்பருஞ்சிவகதியுற்றுவீற்றிருப்பரால். (௭௮)

பஞ்சாக்கரச்சருக்கம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—௪௧௮.

ஏழாவது

# அக்கினிதீர்த்தச்சருக்கம்.

---

வேறு.

பண்டையொருதொழுகுலத்தோன்பரம்பரன்வாழ்நல்லூரின்பாங்கரெய்த
கண்டவர்கள்வியப்பெய்தச்சுணங்கனுருத்தணந்தபழங்காதையிப்பாற், [க்
புண்டரிகமுகமலர்ந்துபுகல்வாயென்றருந்தவத்தோர்புகலச்சூதன் [ன்.
றுண்டமதிக்கண்ணியனைத்தொழுதமிழ்தமுமிழ்வதுபோற்சொல்லலுற்று

பண்பயிலுமேழிசையவறுகாலஞ்சிறைச்சுரும்பர்பசும்பொற்றேட்டிற்
கண்பொருவப்பொருதுலவுஞ்சோலைவிளிம்புடுத்துவளங்கனிந்துநாளும்
விண்குலவுநெடுஞ்சினையகோழரைச்சந்தகிலினொடும்வீழ்த்தியூக்குந் [றே.
தண்பொருனைப்பொருகரையின்மாதவியென்றொருமூதூர்தழைத்தநன்

அந்நகரினொருபனவன்வசுவெனப்பேர்தரித்துள்ளானங்கமாறும்
பன்னுமறையொருநான்குமையம்விபரீதமறப்பயின்றமேலோன்
றுன்னுநெடும்புகழாளன்சுருதிநெறிமுறையொழுகுந்தூயோனேய
மன்னுபொறையறிவூக்கநடுநிலைமைவாய்மைமுதல்வாய்ந்தநீரான். (௩)

இல்வாழ்க்கைநிலைக்குரியமனைவியொடுமைந்தரொடுமீறின்மெய்ந்நூற்
சொல்வாழ்க்கையொக்கலொடுமெண்ணில்பலவளங்களொடுந்துவன்றிநந்தா
பல்வாழ்க்கைநிலைபூண்டசால்புடையானனைவோரும்பாரின்மீது [ய
நல்வாழ்க்கையிவன்வாழ்க்கையெனமதித்துவியப்பெய்தநடக்குநாளில். (௪)

சையமெனப்பணைத்தெழுந்ததிரடோளஃான்சரணமெனத்தரியார்சாய்க்கு
செய்யமுடித்தழும்பிருந்தவிருதாளான்வளையாதசெங்கோல்வேந்தன் [ஞ்
பையரவின்முடிக்கிடந்தவுலகாண்மன்னவன்கூடற்பதிக்குநாதன்
வையையந்தித்துறைபுரக்கும்வழுதிமலயத்துசனேர்வாகைவேலான். (௫)

சீற்றமோடயிலனுக்கிச்செஞ்சிலைவாளியைமருட்டிச்செழுந்தோடுந்தும்
போற்றுதாமரைமடந்தைபொருவுநல்லார்கருந்தடங்கட்பூசலல்லாற்
கூற்றுநாவெனச்சோரிகுடித்துமிழுஞ்சுடர்வாளாற்குறுகார்வெய்ய
வாற்றல்சால்பூசல்கடிந்தபூசல்பெறுதுபுவியாளுநாளில். (௬)

இருநிதியைந்தருச்சுரபிபுட்கலாவர்த்தமணியிவற்றோடேற்றுப் [து
பொருவதைமேற்கொண்டவன்போற்பூசுரர்க்குநாவலர்க்கும்புன்கண்கூர்ந்
வருபிரவலாளருக்குமாமணிநீணிதிதூசுவளங்களெல்லா
மொருவருநேரில்லையெனவவரவர்வேண்டியதெல்லாமுதவுகின்றான். (எ)

முந்தமொளிமுகடழுத்தும்பசும்பொற்கோளகைமருப்பின் முயங்கச்சேர்
ந்திப், பத்திபத்திமணிகுயின்றதமணியத்தாற்குரநான்கும்பருமித்தார்க்கு
ங்,கௌத்துமணித்தாமமணிந்தோடைநுதற்புனைந்தனையகுழக்கன்றோடு
முந்தமவவ்வசுவினுக்குப்பசுவொன்றீந்தானவனுமுவப்பினேற்றான். (அ)

ஏற்றவனுமவ்வியங்கவ்வியம்பயப்பதவயவந்தாமெவையுமெய்ந்நூல
சாற்றியதெய்வதமிதுவேதருமத்தினுருவமிதுசாரதமென்னாப்
போற்றுசுருதிப்பொருளைப்பின்செல்லுமாரிடமேபோலநாளு
மூற்றமிகுவேதியனுமதன்குறிப்பின்வழியேநின்றொழுகுகின்றான். (கூ)

கொடிவிடுபொர்சறுகினுடன்வாலரியேய்த்தகடாரக்குளிர்நீரூட்டி
வடிசுதைதீற்றியபுரையுட்சமனிலத்தினிசைந்தவகைவகைவைக்கோ
லடியினமளியிற்படுத்துமசகமுடனீக்கதுவாதகற்றிநாளு
நெடியதடங்கண்மணிபோற்போற்றியதன்கன்றையுமந்நெறியிற்பேணி. ()

குடம்புரையுஞ்செருத்தறலைசுரந்துபீரோடுதலுங்குழக்கன்றூட்டி
முடிந்தபினர்விஞ்சியபால்கறந்துவேள்விகளைந்துமுறையினாற்றி
யடைந்தகுழக்கன்றினுக்கவ்வான்போலவகங்கசிந்தாதரவுமல்கித்
தடம்புரிநூலணிமார்பனிப்பரிசேகாத்தோம்பிச்சரிக்குநாளில். (கக)

அரும்பெறற்சேயொருவனுக்குமணம்புரிவானெண்ணிமனையாட்டியோடும்
விரும்பியதங்கிளைஞரொடும்வேற்றார்க்குச்செலநடப்பான்விழைந்துதன்
பொருந்தியவண்கலைபயிலுமாணாக்கனொருவனையிப்புனிற்றுநல்லான் [பூற்
பெரும்பசிநீக்குதிதிவசமூன்றென்றானவனுமந்தப்பெற்றிநேர்ந்தான். (கஉ)

நேர்ந்தபினர்க்கவற்சியொரீஇந்தீவேட்பான்வேதியனுநெறியிற்செல்லச்
சூர்ந்தவிளைஞர்களொடுமாணாக்கன்முத்திவசந்தனக்குங்கூட
வார்ந்தகொடிப்பாசறுகுகொய்திட்டானத்தினமேமடுத்தவெல்லா
மார்ந்துபசுப்பட்டினியேயிருதினமுங்கிடந்ததந்தோவந்தணீர்காள். (கந)

விப்பிரனுமணமுடித்துமீண்டெய்திச்சுரபிநிலைவினவலோடுஞ்
செப்பியவாறொருங்குதினமூன்றினுக்கும்பச்சிளம்புற்சேர்த்தவாறு
மப்பசுமற்றவையனைத்துமொருதினத்தினருந்தியிரண்டானியந்தான்
றுப்பருந்தப்பெருமலரும்பசியுழந்துசோர்ந்ததுவுஞ்சொற்றார்மன்னோ.

சொற்றலுகெட்டுயிர்த்துமனந்துளங்கினன்மெய்ந்நடுநடுங்கிச்சோர்ந்தானவி, யிற்றவன்போற்கிடந்துமீண் டெழுந்திதனுக் கென்செய்வோமெனமாழ்காந்தான். கற்றதுவுங் கேட்டதுவுஞ் சீலமுமென் னுகுமெனக் கரைந்தான்பின்னை, மற்றதனுக்கென்செய்வான்மூறையவனுமலமந்து வருத்தங்கூர்ந்தான். (கரு)

ஏற்றல்விதியெனினுமானேறபதுதீததனிலுந்தீதிரண்டானேற்றல்
போற்றவரிதெனவிற்றுற்றலைமுறையேழ்பொன்றுமெனப்புகலாநிற்பர்
தோற்றமிகுமாவினைக்காத்தளிப்பவர்க்கேகநற்கதியாந்துணிவிதாமா
லாற்றுநெறியாற்புரயாசுடைந்தனம்பாதகமென்னுவறிவினோர்ந்தான். ()

வேதியனுமாதாந்தத்தாவினையோர்விப்பிரற்குவிருப்பினீந்தே
யேதமிலாவாழ்நாளுக்கெல்லைகண்டுமேறலியுலகெய்தியன்னேன்
றீதுடையநிரயமதிற்றினமிரண்டான்பசியுழந்தீங்குதன்னுன்
மாதுயரமீதூரமாழாந்துநூற்றிரட்டிவருட மாழ்ந்தான். (கஎ)

நிரையவுலகதுநீங்கிநிலவுலகந்தனையடைந்துநெறியொன்றில்லாப்
புரையுடையஞாளியாய்ப்பிறந்தைதநூறெய்திமுனம்புரிந்தநன்றால்
வரையினையொத்துயர்திணிதோள்வல்லவுணர்வலிசாயவானேருய்யத்
திரையெறிவாரிதியுண்டதமிழ்முனிவனுச்சிரமஞ்சேர்ந்தானன்றே. (கஅ)

வேறு.

அன்னவாச்சிரமத்தினணிநலம்
பன்னகாதிபனுக்கும்பகர்ந்திட
வுன்னுறெதனினூழ்முறையாலுணர்ந்
தென்னவாறெடுத்தெங்ஙனமோதுகேன். (கக)

சந்தமோடுதமிழ்மணமிக்கது
முந்தைமாதவரெண்ணிலர்மொய்ப்பது
விந்திராதியர்யாருமிருப்பது
மந்தமாருதஞ்சூழ்மலயாசலம். (உ0)

ஆளியெற்றியசைந்தருவிப்புன
னீள்குவட்டிடைநின்றிழிகின்றன
மீளியுற்றவிராட்புருடன்மணித்
தோளிலிட்டமுந்நூலெனத்தோன்றுமால். (உக)

---

¹அலம்வந்து² என்று பிரதிபேதம்.
ஆளியேற்றினசைந்தருவி என்று பிரதிபேதம்.

கணங்கொள்சாந்தங்கமழ்குவட்டின்னிடை
மணங்கொள்வேங்கைமலர்விரிக்கின்றன
குணங்கொள்பார்மகள்கொங்கைத்தலத்தின்மேற்
சுணங்குபூத்ததுபோன்மெனத்தோன்றுமால். (உஉ)

சிந்துவைகியவாசவன்வேழமுங்
கந்துகொல்லுங்கடகளிற்றீட்டமு
முந்துமஞ்சு* முன்னீருண்டமேகமும்
யந்தியந்திகுலவுமோர்பாங்கெலாம். (உந)

முருகனூர்திமுராரிசெலுத்திய
கருடன்வேதன்கடவியவோதிம
முருவிலான்கிளியொன்றுடனொன்றுசாய்†
மருவிவைகும்வண்காவின்மருங்கெலாம். (உச)

நாவின்பாடலுநான்மறைக்கீதமுந்
தாவில்கின்னரர்தந்திரியோசையு
மேவரம்பையர்மென்சிலம்போசையுந்
தேவதுந்துமியார்ப்புந்திசையெலாம். (உரு)

வாசவார்குழல்வானரமாதரார்
பூசுசாந்தமும்பொன்னரிமாலையுங்
காசுலாமலர்க்கற்பகத்தாமமு
மாசையெங்குமருங்கடிவீசுமால். (உசு)

குண்டுநீர்ச்சுனைபூத்தகுவளையு
மண்டர்நாட்டிலரிவையர்வாட்கணுங்
கண்டுவேறுகணிப்பதருமையின்
வண்டுசூழ்ந்தலமந்து‡மயங்குமால். (உஎ)

இன்னதன்மைமலயத்திலங்கொளிப்
பன்னசாலையுட்பாங்குடன்வைகிய
வன்னவாய்மையகத்தியன்கண்டனன்
முன்னவன்செய்தவத்தின்முதிர்ச்சியால் (உஅ)

கண்டுகும்பமுனிவன்கருணையாற்
பண்டுமற்றவற்குற்றபரிசெலாந்
தண்டலின்றியதன்மையினோர்ந்துவாய்
விண்டுகேண்மதியென்னவிளம்புவான். (உகூ)

---

* 'முந்நீருண்ட' என்று பிரதிபேதம்.

† 'கூய்' என்று பிரதிபேதம்.

‡ 'அலம்வந்து' என்று பிரதிபேதம்.

வழுவில்வென்றிமலயத்துவசன்பா
லொழுகுபாற்பசுவொன்றுநீயேற்றதும்
பழுதில்விஞ்சைபயில்பவனுலதற்
கழிபெரும்பசியுற்றதுமாய்ந்தனம். (௫0)

அன்னதீமையினாலவனோடுநீ
யின்னல்கூர்நிரயத்திடையெய்தியே
பன்னருந்துயர்பற்பலவெய்தினை
பின்னுஞாளிப்பிறந்தையுற்றாய்மன்னோ. (௫௧)

சிறந்தவான்பசிசேரவருந்தியோ
ரிறந்துதீயநிரயத்தினெய்தியே
பிறந்தைநூறுநாயாகப்பிறந்துபின்
னறந்தவும்புலைச்சென்மமடைவரால். (௫௨)

புந்தியாரப்புரிந்திலையாதலால்
வந்ததீங்கினைமாற்றுமுபாயநாஞ்
சிந்தைசெய்துதெளிவுறக்கூறுது
மந்தணாளவதனுக்கஞ்சேலென்றான். (௫௩)

உச்சிப்போதிடைஞாளியுருக்கொடு
நச்சிவந்திடுநான்மறைவேதிய
செச்சைமேனிச்சிவனருளாலின்றே
நிச்சயம்*புறங்காப்பனினையென்றான். (௫௪)

என்றுபின்னுமினிதெடுத்தோதுவான்
கன்றினோடுங்கபிலைகனிவுட
னொன்றுநல்கினுலகமுழுவது
நன்று†நல்குநர்நற்பயனெய்துவார். (௫௫)

செய்யதேனுடன்சேதாவின்பாலினை
யையன்சென்னியிலாட்டியதூயவ
ருய்யும்வண்ணமுவப்புடன்மான்மறிக்
கையனல்லதெவர்கட்டுரைப்பவே. (௫௬)

மானுடச்சிவலிங்கத்தின்மாண்புடைத்
தானவாரிடலிங்கமதிகமா
மேனைச்சித்தவிலிங்கமதனினு
மூனமற்றபயன்பெரிதுய்க்குமால். (௫௭)

* ‘புறங்காப்பநினை’ என்று பிரதிபேதம்.
† ‘நல்கினர்’ என்று பிரதிபேதம்.

இயம்புஞ்சித்தவிலிங்கத்தினும்பயன்
சுயம்புலிங்கமதிகஞ்சுமக்குமால்
வியந்துபஞ்சாமிர்தம்விழைந்தாட்டினோர்
நயங்கொள்சாயுச்சியபதநண்ணுவார். (௩௮)

ஆவினைத்தெய்வதங்களையன்பினாற்
பாவதீர்த்தங்களைப்பரனன்பரை
யாவரேனுமினிதுதெரிசித்தோ
ரோவில்பாவங்கண்முற்றுமொழிவரால். (௩௯)

அறிந்தியற்றியபாவமரன்பதஞ்
சிறந்தவன்புடன்பூசிக்கத்திருமா
னிறங்கொளாவைநெறிபயிலந்தணர்
கறந்தவாமலளித்தனையாமரோ. (௪0)

ஆதலானவைபாதியகன்றது
வேதபாரகவிஞ்சியதற்குமிப்
போதுமுத்திபொருந்தியதாலிஃ
தேதநீங்கவியம்புதுங்கேட்டியால். (௪௧)

சுழிக்குந்*தெண்டிரைதூமணியெற்றுநீர்
செழிக்குங்காவிரித்தெக்கிணதீரத்திற்
கொழிக்குஞ்சோதிக்குடந்தைக்கியமதிசை
கழிக்குங்கோணத்திற்காவதம்பாதியில். (௪௨)

சித்தர்சாரணர்தேவரியக்கர்கள்
பத்தரந்தணர்பண்ணவர்யோகியர்
சுத்தர்சூழ்சுந்தரகிரியென்னவே
யத்தர்வாழுமசலமொன்றுண்டரோ. (௪௩)

சாற்றுமச்சுந்தரகிரிதன்வயிற்
போற்றுமங்கிதிசையினோர்பூந்தட
மாற்றன்மிக்கதொரக்கினியாற்றந்த
தேற்றமெய்தியிலங்குமற்றென்பவே. (௪௪)

சொற்றிவத்தடந்தூய்மையிலுண்டியின்
குற்றமுற்றுங்குறுகலுந்தீர்ப்பது
பெற்றமூரும்பிரானருள்போல்வது
தெற்றுநீர்க்கங்கையொப்பதத்தீர்த்தமே. (௪௫)

---

*'தெண்டிரைத்தூமணியேற்றநீர்ச்செழிக்கும்' என்று பிரதிபேதம.

வலங்கொண்டன்ன தன்மாடொருபிப்பல
நலங்கொண்டோங்குநயங்கெழுமற்றத
னிலங்கொண்மூலத்தினீசென்றுநின்றிடிற்
பொலங்கொள்பங்கயப்பூந்தடமாங்கதில், (சகூ)

ஆடிநல்லவராய்மலர்க்குஞ்சியின்
வீடநீர்த்துவலைத்துளிவீசலு
நீடதீவினைநீருநினதுருக்
கூடுமந்தணர்கோமகனென்பவே. (சஎ)

பரவுமத்தடமாடிப்பரிவினல்
விரவுமந்தணர்தம்முடன்†மேவிநீ
யரவுபூண்டருளண்ணறன்சன்னிதிப்
பிரமதீர்த்தத்திற்பெற்றியின்மூழ்கியே. (சஅ)

ஆலயத்தெய்தியன்புடன்மும்முறை
யேலவேவலம்வந்திறைவன்பதஞ்
சீலமாகவுமையுடன்சேவித்து
மூலவைந்தெழுத்தோதிமுறைமையால். (சகூ)

சொல்லுமாறுதொழுதங்கண்வாழுநா
ளெல்லைகாறுமிருந்திசிவனிசி
வல்லைவந்துறுமாசியும்வந்ததா
லொல்லையேகெனப்பின்னருமோதுவான். (ருO)

தலவிசிட்டத்தினற்பிரசன்னதை
நிலவுமாற்சிவனின்னெதிர்தோன்றியே
யலகிலாவவராதசமரெனக்
குலவிவேண்டுவயாவுங்கொடுப்பரால். (ருக)

அப்பதிக்குநீபோதற்கறிவுநா
மொப்பரும்பரிசாலின்றுதவினஞ்
செப்புமாறுசெல்வாயென்றகத்தியன்
றப்பிலாததன்சாலைபுக்கானரோ. (ருஉ)

ஞாளிமுத்தமிழ்நற்றவன்றுண்மலர்த்
தாளியாடித்தன்றேகைகுழைத்துரா
‡யாளியெற்றியருவிவந்தார்க்குமம்
மீளிவெற்பைவலங்கொண்டுமீண்டரோ. (ருங)

* 'கோமகனென்னவே' என்று பிரதிபேதம்.
† 'மேவுநீ,' 'ரரவு' என்று பிரதிபேதம்.
‡ 'யாளியேற்றினருவி' என்று பிரதிபேதம்.

தமிழ்மணந்தருதண்*பொருனைப்புன
லிமிழ்தடந்துறையாடியினிதுராய்க்.
கமழ்நறுந்துணர்ப்பூங்கடம்பாடவி
யமிழ்தலிங்கத்தைதயன்புடனோக்கியே. (௫௪)

வைவிய்யமாநதியாடிவழிக்கொளீஇ
யையன்வாழ்சிராப்பள்ளியடைந்துமான்
கைவின்வாரணக்கானனங்கண்ணுற்று
மெய்யன்வாழ்பதியேனவுமேவியே. (௫௫)

நம்பன்பஞ்சநதத்தைவலங்கொண்டு
பம்புகாவிரித்தீர்த்தம்படிந்துராய்க்
கும்பகோணங்குறுகிக்குழகன்வா
ழும்பர்போற்றுநல்லூரைவந்துற்றதால். (௫௬)

உற்றுநேசமுவட்டெடுத்தோடவாங்
கற்றமின்றியவக்கினிதீர்த்தத்தைச்
சுற்றிமும்முறைசூழ்வந்தரசின்கீழ்ச்
சொற்றவாறுசுணங்கன்வதிந்ததால். (௫௭)

துனிவுதீர்க்குமத்தூய்தடந்தன்னிலோர்
முனிகுமாரன்முழுகித்தன்குஞ்சிநீ
ரினிதினுற்றுழியெற்றுமொர்சீகர
மினையஞாளிதன்னகத்தணைந்ததால். (௫௮)

அன்னகாலையினவ்வுருநீங்கித்தன்
முன்னைவேதியனுருமுற்றினான்
மன்னுசித்தகுளிகையின்மாட்சியாற்
பொன்னதாகிப்பொலிகருந்தாதெனா. (௫௯)

வாலஞாயிற்றின்மண்டிலத்தையுருக்
† கோலமோவியன்குத்திவகுத்தெனக்
காலுஞ்சோதிக்கரசரணந்திகண்
ஞாலமீயாவும்வியப்பநலஞ்செய. (௬0)

சாற்றுநான்மறைதன்னுடனாறங்கம்
போற்றிவாண்முகம்பொற்பநிலாவினை
நூற்றதன்னநுடங்குமுந்நூலுட
னேற்றமானுயிர்மார்பத்தெழிலுற. (௬௧)

* 'பொருந்தப்புனல்' என்று பிரதிபேதம்.
† 'கோலுமோவியன்' என்றும், 'கோலியோவியன்' என்றும் பிரதிபேதம்.

தோன்றிநின் றசுருதியந் தோன்றலை
யான்றநூலணிமார்புடையந் தண
ரூன்றுகாதலுவட் டெடுத் தோடநே
ரேன்றுநோக்கியிலிங்கந் திரும்பூதென்னூர். (௬௨)

என்னவன்னவரோடுமிசைந் தவன்
பின்னர்வந் துபிரமதீர்த் தத்தினிற்
சொன்னவண்ணமேதோய்ந் துகடன்கழீஇ
முன்னவன்றிருக்கோயிலைமுன்னினுன். (௬௩)

ஆலயத்தினையெய்தியவ்வந் தணன்*
ஞாலமுற்றும்புகழ்தருநந் திமுன்
மாலயற்கரியானைவணங்கிப்பின்
சீலமாய்மும்முறைவலஞ்செய் தரோ. (௬௪)

காசியைங்கரன்கான்மலர்கைதொழு
தீசன்சேவடியேத் தியிறைஞ்சியே
யாசைமீக்கொளவம்பிகைதாளிணை
வாசமாமலர்வாழ்த் திவணங்கியே. (௬௫)

இன்னதன்மைநியமம்நினிதுசெய்
தன்னலூர்தியனையவவ்வந் தணன்
சொன்னவைந் தெழுந்தோதித் துளக்கற
மன்னியாங்குசிலபகல்வைகினுன். (௬௬)

வைகுநாளிற்சிவநிசிவந் தென
மெய்கொள்வேதியன்பூசைவிதிமுறை
கைகளாரக்கனிவினியற்றியே
பைகொள்பாம்பரையானைப்பரவுவான். (௬௭)

வேறு.

கங்கைவாழ்சடையாய்போற்றிகவுரிதன்பாகாபோற்றி
பொங்கரவசைத் தாய்போற்றிபுரம்பொடிபடுத் தாய்போற்றி
பங்கயன்முகுந் தன்காணுப்பரஞ்சுடராகிநின்று
மிங்கெமையினிதிணுண்டவிறைவனேபோற்றிபோற்றி. (௬௮)

மூலகாரணனேபோற்றிமுக்கணுயகனேபோற்றி
சூலபாணியனேபோற்றிசுருதியின்முடிவேபோற்றி
மேலைவானவர்களுய்யவிரிகடன்முகட்டிற்றோன்று
மாலமேயமுதாயுண்டவையனேபோற்றிபோற்றி. (௬௯)

---

* 'எய்தியவந் தணன்' என்று பிரதிபேதம்.

பாலலோசனனேபோற்றிபனிமதிமுடித்தாய்போற்றி
வேலனைப்பயந்தாய்போற்றிவிண்ணவர்தலைவாபோற்றி
சீலமாமுனிவரேத்தச்சின்மயவடிவமாகி
யாலமா*நீழல்வைகியீறம்பலவுரைத்தாய்போற்றி. (௭௦)

கண்டவர்வெருக்கொண்டேகக்கவைத்தலைச்சூலஞ்சுற்றுஞ்
சண்டனைமார்க்கண்டற்காத்தழிந்துயிர்புரந்தாய்போற்றி
முண்டகமலரினானுமுகுந்தனுமருண்டுநீங்கப்
பண்டொருபாலற்கென்றேபாற்கடலளித்தாய்போற்றி. (௭௧)

வண்ணமைந்துடையாய்போற்றிவானவர்தலைவாபோற்றி
பெண்ணொருபாகாபோற்றிபேரருட்செல்வாபோற்றி
யெண்ணுதற்கரியாய்போற்றியெமக்கெளிவந்தாய்போற்றி
யண்ணலேபோற்றிநல்லூரமலனேபோற்றிபோற்றி. (௭௨)

அணுவினுக்கணுவாய்மற்றையண்டத்திற்கண்டமாகித்
தணவுதலிகந்துநின்றசச்சிதானந்தாபோற்றி
யிணையிலாவன்புபூண்டோர்க்கீறில்பேரின்பமான
துணையடிநீழனல்குஞ்சுந்தரேசரனேபோற்றி. (௭௩)

சென்னியைந்துடையாய்போற்றி†தேவர்க்குந்தேவேபோற்றி
பொன்னணிநீக்கியென்புபூண்டருள்புனிதாபோற்றி
முன்னையவடிவுநல்கிமுனியுநாயுருவம்போக்கி
யென்னையுமாண்டுகொண்டவிறைவனேபோற்றிபோற்றி. (௭௪)

இன்னனதுதிகள்கூறியிணையடியிறைஞ்சிநிற்ப
வன்னவன்காணச்சோதியவ்விலிங்கத்தினின்றுங்
கன்னியோர்பாகமாகக்கந்தவேணுவெண்வைகப்
பொன்னிறமேனியண்ணல்பொலிவுறத்தோன்றிநின்றான் (௭௫)

தோன்றலுமந்தணாளன்றொடர்ந்தபேரன்பினாலே
கான்றுகண்ணருவிசோரக்கரகமலங்கள்கூப்பி
மூன்றுகண்ணுடையான்பாதமுளரிகண்முடிமேற்சூடி
யீன்றணித்தாயசேதாவெனக்கசிந்துருகிநின்றான். (௭௬)

உருகுமந்தணனைநோக்கியொருவனென்றுலகமேத்தும்
விரைகமழிதழியானும்‡வேண்டுநல்வரங்களென்னப்
பரமநின்பாதம்போற்றும்பான்மையேயன்றிவேறு
வரமெனக்கென்கொலென்றான்வல்வினைமாய்த்துநின்றான் (௭௭)

---

* 'ஆலமர்நீழல்' என்று பிரதிபேதம்.
† 'தேவர்தந்தேவே' என்று பிரதிபேதம்.
‡ 'வேண்டுநல்வரங்கேளென்ன' என்று பிரதிபேதம்.

ஆயினுமையநின்பேரருள்வழிநிற்பதன்றி
நாயினேன்மறுப்பதுண்டோநல்வரமாவதெந்தாய்
மாயிருஞாலமுண்டோன்மண்கிளைத்தறியாநின்பொற்
சேயொளிச்சரணம்போற்றுஞ்செல்வமேவேண்டும்வேண்டும். (எஅ)

தவவினைபுரிதறேற்றாத்தன்மையேநன்மையெய்துஞ்
சிவனிசியதன்கட்பூசைசெய்திலரேனுமைய்
பவவினைநீக்கியின்பம்பயக்குநின்பதவிநண்ணி
யுவகையினிங்குவாழ்வோருறைவதுவேண்டுமென்றான். (எகூ)

என்றயனியம்பலோடுமெம்பிரான்கருணைபூத்து
நன்றுநன்றென்றுவேண்டுநல்வரமனைத்துநல்கிப்
பொன்றிரண்டனையசோதிப்புனிதலிங்கத்தினூடு
சென்றுபுக்குறைந்தானெங்குஞ்செறிந்துடனிறைந்தானன்றே. (அ0)

அன்றுதொட்டுலகமெல்லாமபராதசமமென்றோதக்
கன்றுமானுகளுங்கையான்காண்வரும்பெயரொன்றுற்றான்
பொன்றிரண்டனையசோதிப்புரிசடைமவுலிதாங்கு
நன்றறிமுனிவிரையன்கருணையார்நவிலற்பாலார். (அக)

இக்கதைபடிப்போர்கேட்போரெழுதுவோரெழுதுவித்தோர்
தொக்கதீவினைகடியிற்றாலம்போன்மாயநூறித்
திக்கெலாம்புகழப்பார்மேற்செல்வமீதூரவாழ்ந்து
முக்கணனுலகையெய்திமுடிவின்றிவாழ்வரன்றே. (அஉ)

அக்கினிதீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௩00.

---

எட்டாவது

## அகத்தியர்க்கு மணக்கோலங்காட்டிய சருக்கம்.

---

மாதவர்குறுமுனிக்குமணவாளக்கோலம்பெம்மான்
காதலாற்காட்டியாண்டகதையிப்பாலுரைசெய்கென்னச்
சீதமாமதியஞ்சூடுஞ்செல்வனைவணங்கிப்போற்றிச்
சூதநூற்றாவுகூரத்தொகுத்தமைதுரைக்கலுற்றான். (க)

பங்கயத்தவிசின்மேயவண்ணவன்பயந்தபால
ரங்கண்மாஞாலம்போற்றுமாற்றல்சால்பதின்மான்றோர்
தங்களிற்றலைமைசான்றதக்கனன்மறைகள்வல்லான்
மங்கையாயவதரித்தாள்வான்புவிமுழுதுமீன்றாள். (௨)

ஈர்ந்தவெண்பளிக்குப்பாறையிடத்தெய்தித்தோன்றுநின்ற
வார்ந்தபாசொளியின்மிக்கமாந்தப்பாவையொப்பா
ணோர்ந்தநூலிடையாளந்தநேரிழையவளையீசற்
கார்ந்தவாதரவாலன்னோனளித்தனனுறையுநாளில். (௩)

மூலகாரணனுமுக்கண்முதல்வனையிகழ்ந்தோர்வேள்வி
சாலும்வானவரோடந்தத்தக்கனுற்றினனவ்வேலை
யேலவார்குழலாடாதையியற்றுமவ்வேள்விகாண்பா
னூலிடைதுவளவந்தாளோக்கினன்மதியாதுற்றான். (௪)

*அவமதித்திடலுமந்தவாயிழைவேள்வியோகத்
தவவனலுங்கவாகந்தனையவியாகநல்கிப்
புவியொருமூன்றும்போற்றும்பொன்னெடுமிமயவேந்த
னுவகைகூர்புதல்வியாகியுதித்தனள்வளருநாளில். (௫)

எழுவகைமுனிவர்தம்மையியன்மணம்பேசுகென்னச்
செழுமலையரசன்றன்பாற்செலவிடுத்திசைவுநோக்கி
முழுமுதலிறையோன்செங்கண்மூரிவெள்விடைமேற்கொண்டு
தொழுதிருமருங்குமும்மைத்தொல்புவியோருஞ்சூழ. (௬)

இமையமால்வரையினெங்கோனெய்தினனிறுத்தகாலை
யமைநெடுந்தோளினருமாண்டகையவருமீண்டிச்
சிமையவெற்பிடம்பெறாதுசேர்ந்தொருங்குறலுந்தென்பாற்
சமநிலைதுறாதுவிண்ணந்தடவமீதுயர்ந்ததன்றே. (௭)

அத்திறநோக்கியீசனகத்தியன்றன்னைக்கூவி
வித்தகமுனிவநீபோய்மேவரப்புரிதியென்ன
முத்தகமுரிஞ்சும்பொம்மன்முகிழ்முலையுமையைவேட்டுக்
கத்திகைசூட்டுங்கோலங்காண்டலெங்ஙனம்யானென்றான். (௮)

என்றவனிரங்கலோடுமெம்பிரான்கருணைபூத்து
மன்றலங்கோதைசூட்டுமெங்களுருவந்தன்னைப்
பொன்றிகழ்புரிசைநல்லூர்ப்போந்துகாட்டுதும்யாமென
னன்றெனவவனுநேர்ந்துமலயகோடென்வரையிற்செல்வான் (௯)

* 'அவமதித்திடலாலந்த' என்று பிரதிபேதம்

தொடுத்தவேதன் பிரசமென்னச்சுடரவனோடு திங்கள்
மடுத்திடவான்கீழாகவடதிசையிருளின்மூழ்க
முடித்தலைமுன்னமெங்கோன்முளரியான்றேடநீண்டாங்
கிடைப்படலோடுமின்றியெழுந்தமால்விந்துதன்னை. (௰)

குடங்கையினடக்கிச்சார்ந்தக்குளிர்நறுஞ்சோலைசூழ்ந்த
தடம்பெறுமலயச்சாரல்சார்ந்தனன்சாரலோடு
நெடுங்கடலுலகமெல்லாநிலைமையினின்றதன்றே
னிடம்பெறுதவத்தின்மேன்மையாவரேயிசைக்கவல்லார். (௧௧)

திங்களஞ்சடிலத்தெங்கோன்சிறப்பரைதன்னைவேட்ட
மங்களரூபங்காணும்வாஞ்சையுள்ளத்தின்மல்கப்
பொங்குவாரிதியைவாரிப்புனிதவாய்மடுத்தோன்
பங்கயத்தடாகஞ்சூழ்ந்தபரமனல்லூரில்வந்தான் (௧௨)

வந்தவன்பிரமதீர்த்தவாவியின்மூழ்கியன்பாற்
சுந்தரநாதன்பாதந்தொழுதுபோற்றிசைத்துநிற்ப
விந்துவாழ்சடையினுனுமியற்றமிழ்முனிவன்காண
முந்தியமணக்கோலத்தைமுறையுளிகாட்டுகின்றான். (௧௩)

செஞ்சடைமவுலிதானேசெழுமணிக்கிரீடமாக
நஞ்சராவணிகளெல்லாநகைமணிப்பணியேயாக
விஞ்சுமூமத்தைபூளைவெள்ளெருக்கிதழிந்தாம
மெஞ்சலிலாமந்தாரத்தேடலர்தொடையலாக. (௧௪)

பூசுவெண்ணீறுவாசப்புதுநறுஞ்சுண்ணமாக
வீசுதோலுடைகளெல்லாம்விலைவரம்பறிதல்செல்லாத்
தூசுகளாகத்தேவதுந்துமிமுழங்கவிண்ணோ
ராசிகளியம்பமெய்ந்நூலறிஞர்பல்லாண்டுகூற. (௧௫)

எண்டிசையுலகமெல்லா*மினிதொருங்கீன்றவாசப்
புண்டரிகத்துவாழும்புண்ணியன்சடங்குகாட்டத்
தண்டுளவணிந்தமாயன்றமனியச்சிரகநின்னீ
ரண்டர்நாயகன்கைப்போதினடுத்தனனின்றுவார்ப்ப. (௧௬)

செம்பொன்மால்வரையின்பாங்கர்ச்செழித்தகார்மயிலேவாணிற்
பைம்பொனீடருவிநேர்பாற்படர்ந்தபைங்கொடியோவென்ன
விம்பவாயிமயவல்லிமேவருமொருபாலாகத்
தம்பிரானெதிரேதோன்றித்தமிழ்முனிகாணவுற்றான். (௧௭)

* 'இனிதொருங்கீன்ற' என்று பிரதிபேதம்.

உற்றபின்கும்பயோனியுவகையூற்றிருந்துமல்கக்
கற்றையஞ்சடிலன்பாதகமலங்கண்முடிமேற்கொண்டு
முற்றுபோன்புதன்னுண்முறைமுளிபழிச்சிக்கண்கள்
பெற்றதற்கின்றுபேறுபெற்றனனெனப்பூரித்தான். (௧௮)

பூரித்தமுனியைநோக்கிப்புகலுநல்வரங்களெல்லாம்
வாரித்தாரணியோர்போற்றவழங்குதுமுனக்கின்றென்ன
வேரித்தாமரைத்தாள்போற்றிமெய்த்தபோதனனுநின்பாற்
பாரித்தவன்பொன்றல்லாற்பகர்வதுபிறிதொன்றுண்டோ. (௧௯)

அத்தகைத்தேனுமையவடியனேன்காணத்தோன்று
மித்தகைக்கோலத்தோடுமென்றுமிங்குறைதல்வேண்டுஞ்
சித்தமின்புறுமிவ்வெற்புந்தென்கயிலாயமென்ன
வித்தகவேண்டுமிவ்வூர்வியன்காசியெனவும்வேண்டும். (௨௦)

வந்துநீதமியனேற்குமணவாளக்கோலங்காட்டி
யந்தமில்லாதவின்பமளித்தவாலிந்தமூதூர்
சுந்தரபுரமென்றோழித்தொல்புவியோர்களெல்லாஞ்
சந்திரமவுலியெந்தாய்சாற்றுதல்செயவும்வேண்டும். (௨௧)

தோன்றலேயுனதுநாமஞ்சுந்தரநாதனென்ன
மூன்றுபேருலகத்தோருமொழிந்திடல்வேண்டுமென்ன
கான்றசெஞ்சடையினுனநன்றெனவினைத்துநல்கி
யூன்றுமவ்விலிங்கத்தின்பாங்குசந்நிதியுறைந்தானன்றே. (௨௨)

குறுமுனியென்றுகூறுங்கோதிலாநெடுந்தவத்தோன்
மறுவிலாதரவுதன்னுல்வயங்குமந்நல்லூர்தன்னிற்
சிறிதுநாள்வைகிப்பின்னர்த்தென்வரைப்புகுந்தானிந்த
வுறுதிகூர்காதைகேட்டோருயர்மணம்பொருந்திவாழ்வார். (௨௩)

அகத்தியர்க்குமணக்கோலங்காட்டியசருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௫௨௩.

ஒன்பதாவது

## சத்தசாகரம் வரவழைத்த சருக்கம்.

---

வேறு.

பரவையேழையும்பாங்குறுகுந்திதன்பொருட்டாற்
பிரமதீர்த்தத்துப்பின்னுகனழைத்தருள்பெற்றி
யுரைசெய்வாயெனவுறுதவரோதலுஞ்சூத
னரவுபூண்டவனருளினற்புகலுதற்கமைந்தான். (௧)

தூண்டுவாம்பரித்தேரினன்றன்னலார்மகுடந்
தீண்டலாற்றழும்பிருந்திடுஞ்செய்யபொற்கழலா
னீண்டகோட்டிடைக்குஞ்சரநகர்க்கொருநிருபன்
யாண்டுமற்றவன்பாரியப்பதுமையேயனையாள். (௨)

தருமனாதியவைவரைப்பயந்திடுந்தைய
லுரிமைபூண்டுயர்கற்பினாலருந்ததியொப்பா
ளிருநிலத்துளமடந்தையர்திலகமென்றேத்தும்
பெருமைமிக்குளாள்குந்தியென்றொருபெயர்பெற்றாள். (௩)

பெண்ணலங்கனிந்தொழுகுமப்பெய்வளையொருநா
டண்ணந்தாமரையாளிகர்தவமியற்சார்ந்து
வண்ணமாமலர்ப்பதயுகமரபினால்வணங்கி
யண்ணலேயெனத்தன்குறைகூறுதற்கமைந்தாள். (௪)

மந்திரத்தொகையாவையுமறங்கண்மற்றெவையு
மந்தமில்லதோர்காதலாலியனுக்குரைத்தா
யெந்தையாங்கதுகேட்டியானுய்ந்தனனிருந்தேன்
சிந்தையீருமாற்கன்னியிற்புரிந்ததோர்தீமை. (௫)

அனையதீமைமற்றியாதெனவினவுதியாயின்
முனைவகேண்மதிமுன்னமியான்புரிந்தமாதவத்தாற்
றுனிவிலாதவோர்தூயவனருளினாற்றோமில்
வினைகளுங்கழன்மகப்பெறுமந்திரம்பெற்றேன். (௬)

பெற்றபின்னரென்பேதைதனைமணாண்டலுமந்த
வற்றமின்றியமந்திரப்பயனையாங்கறிவா
னுற்றகன்னியம்பருவத்தினுதயனைநோக்கி
மற்றமந்திரத்தொருமனுமதித்தனன்மன்னே. (௭)

பேதையேன்மதித்தெண்ணலும்பிறங்கொளிவெய்யோன்
சோதிமீக்கொளத்துனைவில்வந்தளித்தனனாக
வேதமில்லதோர்கருப்பமாங்கெய்தலுமினைவேன்
காதினாலொருமகவினைக்காண்வரவுயிர்த்தேன். (௮)

உயிர்த்தபாலனையோம்புதலிகத்துறுதவர்போற்
செயிர்த்தநோக்கமுநேசமுஞ்சிந்தனைகவற்ற
வயிர்த்துமாநிலமிஃதிறும்பூதெனவாழ்நீர்க்
கயத்திலிட்டனன்கன்னியுங்கட்டழிந்தனனால். (௯)

அரும்பெறற்சிறுமதலையையாற்றிலுய்த்ததற்குத்
திருந்துகன்னிமெய்கலங்கியதீமைக்குமுள்ளம்
வருந்துகின்றதான்மற்றதற்குய்திநீமதித்துப்
பொருந்தவோதுதிபுகலெனக்கென்றனள்புகன்றாள். (௧௦)

குந்தியித்திறங்கூறலுங்குரவனுநோக்கி
வந்ததீவினைக்கிரங்கினைமற்றஃதின்றே
யந்தமாயினதாயினுமகிலமுமுய்யச்
சிந்தைசெய்திதுசெப்புதுங்கேண்மதியென்றான். (௧௧)

வேதமேமுதனூல்களில்விளம்புதல்புரிந்த
வேதமில்லனபுண்ணியமெண்ணிலவற்றுண்
மாதராயெளிதாய்ப்பயன்வல்விரைந்தளிக்கு
நீதிபெற்றதுதீர்த்தயாத்திரையென்பர்நெறியோர். (௧௨)

அன்னதாகியதீர்த்தயாத்திரைசெல்வானன்யான்
முன்னநீயருண்மைந்தராலனுமதிமுற்றிப்
பொன்னையன்னநம்புதல்வனோடேகுதிகடிதி
னென்னவோதினனவளுமாங்கதற்கிசைந்தெழுந்தாள் (௧௩)

எழுந்துகுந்தியுந்தூமுனியிணையடியிறைஞ்சித்
தொழுந்தகைக்குலத்தேவியர்தம்மொடுந்துவன்றி
யழுந்துகாதல்கூர்மக்கடமனுமதியடைந்து
செழுந்தவத்தினானரும்பெறன்மகனொடுஞ்செல்வாள். (௧௪)

குரவன்மைந்தனுற்கொள்கையின்வழாநிலைநோக்கித்
திரமுறுந்*தினஞ்சங்கற்பஞ்செய்தனனாகி
யிரவலர்க்குமந்தணருக்கும்வேண்டுவவீந்து
பரமன்சேவடிபோற்றுபுபார்மிசைநடந்தான். (௧௫)

கங்கைவந்திழிகிரித்துவாரந்தனைக்கண்ணுற்
றங்கண்மாநிலத்தமுதன்னவந்நதியாடிப்
பொங்குகாதலாற்றானங்கள்பற்பலபுரிந்து
தங்குலக்குரவன்றொடும்யமுனையைச்சார்ந்தான். (௧௬)

சார்ந்துமற்றதின்மூழ்கியேசந்திரபாகை
சேர்ந்ததிற்படிந்தின்னனதீர்த்தநீர்தோய்ந்தே
யீர்ந்தநைமிசம்வதரிகாச்சிரமுதலெவையுங்
கூர்ந்தவன்பினாற்குறிக்கொண்டுவணங்குதல்புரிந்தே. (௧௭)

அழிவிலாவடமதுரைசோமேச்சுரம்வந்தி
தொழுதுமற்றவையேவண்காசியைவணங்கி
யொழுகுநீள்சடையும்பர்கோனுவந்துவீற்றிருக்கும்
பழையவான்பதிபற்பலவினையனபணிந்து. (௧௮)

சேணிற்காணினுஞ்செல்கதியுதவுசீசைலத்
தாணிப்பொன்னினைக்கைதொழுதவ்விடநீங்கி
மாணிக்கத்துடன்வயிரமும்வான்றுபொன்முகரி
பேணிக்காளத்திமலையினைவலம்வந்துபெயர்ந்தே. (௧௯)

அருணமால்வரைகைதொழுதாதாவதனு
லிருநிலந்தொழுங்காஞ்சிமாநகர்தனையிறைஞ்சிப்
பொருவிலாமுதுகுன்றினைச்சூழ்வந்துபோற்றி
யொருவனுடபொன்னம்பலங்கைதொழுதுவந்தே. (௨0)

காழிமாநகர்பணிந்துகாவிரிப்புனலாடி
வீழிவாயுமைபங்கினன்மேவுமாயூரம்
வாழிமாதவர்பயிலிடைமருதுடன்குடந்தை
பாழிமாமதில்வலஞ்சுழியினையனபணிந்தே. (௨௧)

நங்கைகுந்திநல்லூரைவந்தெய்தினள்வணங்கி
யங்கணுள்ளதொல்வளங்கள்கண்டற்புதமென்னப்
பொங்குதீர்த்தமங்குள்ளவையெவையும்போய்மூழ்கிக்
கங்குன்மூன்றவண்வதிந்தனள்வதியுமக்காலை. (௨௨)

* 'திறம்' என்று பிரதிபேதம்.

மறுவிலாமதியினையவாண்முகத்தினன்மறைதே
ரறிஞனரனஞ்செழுத்தழுத்தியவகத்தான்
பொறையும்வாய்மையும்புகழ்மையுஞ்சீலமும்பூண்டோ
*னுறுதபோதனனுரோமசன்வந்தவணுற்றான். (உ௩)

உற்றமாதவத்தொருவனையெதிர்கொண்டுள்ளுவந்து
பெற்றிகூர்தருபாத்தியமுதலியபேணி
யேற்றமின்றியவன்பினாலடிமலரிறைஞ்சி
நற்றவம்பயில்குந்தியுமின்னணநவின்றாள். (உ௪)

கன்னியம்பருவத்திடைப்புரிந்தவக்கரிசு
தன்னையான்றணந்திடுந்திறந்தவுமியற்சார்ந்து
பொன்னஞ்சேவடிபோற்றினன்போற்றலுமன்றோ
னென்னையேகென்றான்றீர்த்தயாத்திரைதனக்கியானும். (உ௫)

குரவன்கூறியபரிசினையுளத்திடைக்குறித்துத்
திரைசெய்தீர்த்தங்கள்பற்பலசென்றுசென்றாடி
வரைகொள்வில்லிவாழ்தானங்களனைத்தும்போய்வணங்கி
யுரைசிறந்தநல்லூரிதையுற்றனனுரவோய். (உ௬)

சிந்தையன்புறுதீர்த்தயாத்திரைப்பயனென்ன
வெந்தையின்றுனைக்கண்டனனின்னறீர்ந்துய்ந்தே
னந்தமின்றியபோகமும்வீடுநேரடைதற்
குந்துசாதனம்பெரியர்சார்பன்றிவேறுளதோ. (உ௭)

என்றுமீளவுமிணையடித்தாமரையிறைஞ்சி
நின்றுதன்னிலைமுழுவதுமாங்கவணிகழ்த்த
நன்றுநன்றெனவுரோமசன்வியந்துபின்னயப்பா
லொன்றுகூறுவன்கேண்மதிநீயெனவுரைப்பான். (உ௮)

நாளைமாசிமாமகமந்தநற்றினமதனில்
வாளைபாய்கடலாடினர்பலன்வரம்பின்றாற்
றாளையர்வினைக்குறித்துநீதாமதித்திடாதவ்
வேளையெய்துபுவேலையின்மூழ்கென்விதித்தான். (உ௯)

விதித்துமாதுநீதீர்த்தயாத்திரைசெயும்விழைவான்
மதித்திவ்வாறுநாமுரைத்தனமென்றுமாதவத்தோன்
கொதித்தவாரழல்விடத்தினைக்குலமணிபொருவும்
பதித்தகண்டனையன்புடன்பணிந்தவண்சென்றான் (௩0)

---

* 'உரோமசனவ்விடையுற்றான்' என்று பிரதிபேதம்.

சென்றபின்னவடேசிகன்மகனொடுமுசாவி
யின்றுநீள்கடலாடுதற்கேகுதலரிதாற்
பொன்றுசிந்தையேனென்செய்வேனெனநனிபுலம்பிக்
கன்றுமானுகள்கையன்முன்னின்றுகண்கலுழ்ந்தாள். (௩௧)

தோகையன்னவள்கலுழ்தலுஞ்சுந்தரநாதர்
பாகுநேர்மொழியாய்பரியேலெனப்பகரா
வோகையாற்கடலேழையுமொருகணத்தழைப்பே
மேகமாகவிப்பிரமதீர்த்தத்திடையென்றார். (௩௨)

திங்கள்சேர்மௌலியானிவ்வண்ணஞ்செப்பலுமகிழ்ந்து
மங்கையெம்பிரான்மலரடியுகளங்கள்வணங்கி
யிங்குநீயெனையொருபொருளாகவேயெண்ணி
யங்கணாயகவருளினையளியனுமுய்ந்தேன். (௩௩)

என்னவாங்கவள்பற்பலதிறனெடுத்தியம்பிச்
சென்னிமேற்கரங்குவித்தயனிற்றலுஞ்சிறந்த
வன்னிகூவிளைமுடித்தவன்வாரியேழினையு
முன்னமேவியவாவியினணையமுன்னினனால். (௩௪)

எந்தையெம்பிரான்வருகெனப்பணித்தலுமெறிநீர்ச்
சிந்துவேழுமெண்டிசைக்கரிசெவிடுபட்டழுங்க
முந்துநீடொலிமுழக்கொடுமென்மணிமுகிழ்ப்பப்
பந்திபந்திவெண்டிரைவரைநிரையெனப்பரப்பி. (௩௫)

சங்கராசியுஞ்சலஞ்சலராசியுந்தழங்க
வெங்குநீள்சுறாத்திமிங்கிலகிலமுடனெற்றி
யங்கண்மாநிலமிசைத்திறும்பூதெனவயரப்
பொங்கிநான்முகன்றீர்த்தத்துட்புகுந்தனவன்றே.

புகுதலோடுந்தன்புரோகிதன்சேயுடனவளு
மிகுதியாதரவாலந்தத்தீர்த்தத்தைமேவிப்
பகுதிகூர்தருசங்கற்பமுதலியபலவுந்
தகுதியாற்செய்துமூழ்கியேதருப்பணம்புரிந்து. (௩௭)

அந்தணாளர்தமவாக்கெடவானொருநூறும்
வெந்தவாடகப்பசும்பொனோடாயுதமும்வீசிச்
சுந்தரேசற்குச்சிறப்பெடுத்தணிபலதொகுத்திட்
டெஞ்ஞான்றுசுந்தரதாண்டவர்க்குவந்தனளீந்தே. (௩௮)

மைந்தரைவக்கும்வாழ்வுமேன்மேல்வரும்பரிசு
முந்துதன்னுடைவல்வினைதீர்ந்திடுமுறையு
மெந்தைநல்கெனவற்றைநாளாங்கவளிருந்து
பந்தியின்புறவவ்வரம்யாவையும்பொருந்தி. (௩௯)

பரம்பரன்றனைவிடைகொண்டுபசுபதீச்சுரம்போந்
தரிந்தைதீர்த்திடுமெண்ணருள்வணங்கினளாகி
நீரந்ததானங்களேனவுநெறியினுலிறைஞ்சித்
திருந்துசோலைசூழ்மறைவனந்தனைவந்துசேர்ந்தாள் (௪0)

மாதராண்மணிகன்னிகைபடிந்துமாசிகந்த
வேதபாரகர்க்கிருநிதிபற்பலவீசிச்
சோதிவானவன்றுணையடியிறைஞ்சிமீண்டவளுங்
காதன்மீக்கொளத்தன்பதியடைந்துளங்களித்தாள், (௪௧)

அந்தநாண்முதற்பிரமதீர்த்தத்தையேயகில
முந்துகாதலாற்சத்தசாகரமெனவோது
முந்துமாசிமாமகத்தினின்முடிமிசையறுகு
தந்துகாலையின்மூழ்கினர்தீவினைதவிர்வார். (௪௨)

உலகிலுள்ளனதீர்த்தங்கள்யாவையுமுவப்பா
னலமிகும்படிபடிந்தவர்பலத்தைநண்ணுவரான்
மலரின்மேலவன்வரநதிகொடுநிறைத்தமைத்த
வலகின்மேன்மைசால்பிரமதீர்த்தத்தினுடுநேரே. (௪௩)

அரவுபூண்டருள்சுந்தரநாதனாருளும்
பிரமதீர்த்தத்தின்பெருமையும்பிறைக்கொழுந்தணியு
மொருவனல்லதுமுனிவிர்காளுள்ளவாறெவரே
கரைகண்டோதுவார்சேடனுங்கழறுதற்கரிதால். (௪௪)

இனையகாதையையெழுதுநர்படிக்குநரென்று
நினையுமேலவர்புவியிடைநெறியின்வீற்றிருந்து
முனிவிர்முக்கணனருளினுன்மூதுலகேத்தத்
தனையொப்பரிகியசற்கதியடைவதுசரதம். (௪௫)

சத்தசாகரம் வரவழைத்த சருக்கம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—௩௬௮.

பத்தாவது

# *சமுத்திரராசன் *செற்பேசுரம் பணிந்து மீண்ட சருக்கம்.

வேறு.

விரிகடற்கிறைவீறுசெற்பேசுரம்
பரவிப்போய்வந்தபான்மைவிளம்பெனக்
கருணைமாதவர்கட்டுரைசெய்தலும்
மொருவில்சூதனும்புந்திசெய்தோதுவான். (க)

தம்பிரானருளாலிவண்சார்ந்தன
னிம்பர்மெய்த்தலம்யாவையுஞ்சேவிப்பா
னம்பலாசைநலிகின்றதாலெனப்
பம்புநீர்க்கடற்பார்த்திபன்கூறினன். (உ)

கூறலோடுங்குழகனும்பார்மிசை
யேறுதெண்டிரையேறநீயெய்திடின்
மாறுமாறுமகிதலம்யாவையும்
வேறுபட்டழியும்மிது †மெய்ம்மையால். (௩)

ஆகையாற்றலம்யாவுமடைவுற
வேகிச்சேவிப்பவெய்தும்வியன்பல
மோகைகூருஞ்செற்பேசுரமுற்றுநீ
சோகந்தீரத்தொழுதலுமெய்துமால். (௪)

அன்னதன்மையினுலத்தலத்திடை
நின்னதாற்றினிலவாவகைசென்று
மன்னுகாதலின்வந்தித்துமீளுதி
யென்னவீசனெடுத்துரைத்தானரோ. (௫)

உரைத்தலோடுமொலிகடல்வேந்தனு
நிரைத்தகொன்றையினயர்நெறியினற்
றரைத்தலத்திற்சவுமியனுகியா
னருத்திகூரவடைந்திவண்மீள்வனல் (௬)

---

* 'செப்பேசுரம்' என்று பிரதிபேதம்.

† 'மேன்மையோ' என்று பிரதிபேதம்.

# சமுத்திரராசன்செற்பேசுரம்பணிந்துமீண்டசருக்கம்.

என்றுமாக்கடல்வேந்தனிறைவனை
மன்றவன்பின்வணங்கிவிடைகொண்டு
சென்றுபச்சிமதிக்கிற்கவ்வியூதிமுன்
றொன்றுமெல்லையுவந்தனனெய்தியே. (௭)

அன்புகூர்வின்னேச்சுரஞ்சேவியா
வென்புபூணுமிறைவற்கணித்தெனப்
பொன்பெருங்குன்றமதொப்பப்புளினமொன்
றின்புகூரவினிதினியற்றினன். (௮)

வைகமேருமவ்வாலுகக்குன்றம்வண்
செய்கையாடவர்சீர்த்தியொப்பாகவே
மெய்குலாவும்விழுத்தவத்தீர்புனற்
பொய்கைபோற்குளிர்ந்தோங்கிப்பொலியுமால். (௯)

தெண்டிரைக்கடன்மன்னன்செற்பேசுரத்
தண்டவாணனையன்பினிறைஞ்சியே
தொண்டர்கண்டுதொழச்சுத்திசங்குகண்
முண்டுதாதலின்மாலிங்கத்துய்த்தனன். (௧௦)

பரவைமன்னவன்பத்திகண்டெம்பிரான்
வரமனைத்துமகிழ்ந்தருள்செய்தன
னுரவுநீர்க்கடல்வேந்தனுமோடையாய்
விரவிநாற்றிசைக்கண்ணும்விளங்கினன். (௧௧)

விளங்குநாளும்விமலனைச்சேவியாத்
துளங்குதோடங்கள்யாவுந்துடைத்தன
னுளங்கொளக்கடலுற்றதறிகுறி
யளந்துகாணின்முனிவிருண்டாகுமால். (௧௨)

அவனிமீதிலுற்பாதமடுக்குநா
ணவியச்சுத்திகணந்துகளாதிய
தவறில்செய்கைத்தபோதனர்கேளுமின்
சிவலிங்கத்திடைச்சேர்ந்திடுமென்பரால். (௧௩)

இத்திறங்கள்பலவுமியற்றியே
கத்துதெண்டிரைத்தண்கடல்வேந்தனு
மத்தவேணிவரதனைவந்தியா
வித்தகத்தின்விடைகொண்டுமீண்டரோ. (௧௪)

சோலைசூழ்தருசுந்தரவெற்பில்வந்
தாலபாரணனம்புயத்தாண்மலர்
சீலமோடுபணிந்துசெழுமணி
மாலைசூட்டிமகிழ்ந்துவிடைகொண்டே! (௧௫)

தடங்கடற்கிறைதாதகிமாலையு
முடங்குதிங்களுமூதரவுஞ்செறிந்
தடங்குவேணியரனருளாற்றன
திடங்கொடொல்லையினெல்லையினீங்கினான். (௧௬)

மாசித்திங்களின்வைகறைப்போழ்தினிற்
றேசுலாஞ்சத்தசாகரதீர்த்தத்தி
னாசையாற்படிந்தையாறமர்ந்தரு
ளீசனையுச்சிப்போதிற்சென்றேத்தினோர். (௧௭)

கணங்களாகிக்கடவுளர்யாவரும்
வணங்கியேத்தவனமுலைமாதுமை
யணங்கின்பாகனருட்சிவலோகத்தி
னிணங்குசெல்வமுற்றென்றுமிருப்பரால். (௧௮)

தொடங்குசன்மமெவைக்குந்துரிசுள
திடங்கொடீர்த்தங்களாடுதற்கெண்ணுவோர்
முடங்கவேயிடையூறுகண்மூண்டிடா
விடங்கொள்கண்டன்விரைந்தருள்செய்வனால். (௧௯)

இன்ன தன்மையினாற்றீர்த்தயாத்திரை
முன்னியாருமுயன்றிடவேண்டுமாற்
பன்னகந்தனித்தாங்குமிப்பாரிடை
யுன்னுங்காலதற்கொப்புமற்றில்லையே. (௨0)

ஓடைகூபமொலிபுனல்வாவியி
னாடுபுண்ணியதீர்த்தமதிகமா
நீடுமன்னவைதன்னினுநீள்கங்கை
நாடிமூழ்கினலம்பெரிதாகுமால். (௨௧)

வெற்பின்மேருவிசிட்டந்தருக்களிற்
கற்பகம்பசுவிற்காமதேனுமெய்ச்
சொற்பயிற்றுஞ்சுருதியிற்காயத்ரி
மற்புதந்துமணிதாரிலந்தணர். (௨௨)

வீறுபாத்திரத்தங்கிவிசிட்டமா
நாறும்போதினளின்னஞ்சிறந்ததாந்
தேறுங்காலையெத்தேவினுமேலவ
ஞறுசூடிநல்லூருறையாதியே. (உ௩)

நீடும்பரிசிலிலவுந்தலங்களி
னுடுங்காலையினல்லூரதிகமாந்
தேடியன்னதிற்சென்றுவைதிந்திடா
ராடல்செய்யுங்களேபரமாவரால். (உ௪)

எத்திறத்துமியம்புநல்லூரினைப்
புத்திவேண்டுநர்பொன்றுதலின்றிய
முத்திவேண்டுநர்மூதறிவாற்சென்று
பத்திகூரப்பணிந்திடவேண்டுமால். (உ௫)

கூறுமிக்கதைகோட்டமிலன்பினுற்
றேறுமாறுதெரிப்பவர்கேட்பவ
ராறுசூடியவண்ணலருளினு
லீறிலாவின்பமெய்தியிருப்பரால். (உ௬)

சமுத்திரராசன் சேற்பேசுரம்பணிந்து மீண்ட சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௩கூ௪.

---

பதினொன்றாவது

## பிரமதேவர் வரம்பெற்ற சருக்கம்.

---

வேறு.

கண்டலம்போதுமேனுட்கரிபொய்த்ததீங்கினோடு
புண்டரீகத்துமேலோன்பொய்யுரைத்தவறுந்தீர
வண்டநாயகனையேத்தியருச்சனைபுரிந்தகாதை
யொண்டவர்வினவச்சூதனுள்ளவாறுரைக்கலுற்றான். (க)

எங்களுயகனைப்பூசித்திராசதசாந்திபெற்ற
பங்கயத்தவனுக்கைக்கூரம்பரியாயத்துற்றவேத
னங்கண்மாஞாலமாதியுக்கெலாமழியவெய்துங்
கங்குல்போய்விடிந்தகாலைக்கண்விழித்தெழுந்துபார்த்தான். (உ)

ஆறுநீள்கடலும்பாருமசலமுமுதலவெல்லா
மாறுமாறாகித்தத்தம்வரம்பிகந்தழிந்தொன்றாகி
நீறுநீறானதன்றிநின்றதொன்றிலையுங்காணேன்
வீறுமற்றெனதேயென்றவ்விரிஞ்சனுமுளத்துட்கொண்டான். (௩)

கொண்டவன்றருக்கியாங்குக்குலவினனிற்றலோடும்
வண்டுழாய்ந்தொடையல்வேய்ந்தமழைமுகினிகர்ப்பழையோன்
றொண்டைவாய்முகங்கண்கைகாற்றுணைநெடுகொளம்பூத்த
புண்டரீகப்போதொப்பப்பொலிந்தெதிர்தோன்றிநின்றான் (௪)

நிற்றலுழுவனைநோக்கிநிரையிதட்கமலப்புத்தேண்
வீற்றெனக்கெதிர்யாரென்னமதித்தனனிருந்தேனின்னை
யிற்றைநாளெதிர்ந்தேனீயாரென்றலுமுகுந்தனோக்கி
யுற்றனையீன்றவென்னையுணர்ந்திலைபோலுமென்றான். (௫)

என்னைநீயீன்றதெங்ஙனெவற்றையும்யானேயீன்றே
னுன்னிலையுணராய்போலவுரைத்தனையிறும்பூதென்னப்
பொன்னணிமார்பனுந்திப்போதினிலீன்றேனென்று
னன்னதுகேட்டுவேதனணியெயிறிலங்கநக்கான். (௬)

ஒருவருக்கொருவரிவ்வாறுயர்ச்சியுமிழிவும்பேசி
யிருவருமிகலும்போதினீண்டெரிப்பிழம்பாயாங்கு
வெருவாமுதலுமீறுமேவுறவறிதரேற்றாத்
திருவநீணமொன்றுசேணிலத்தெதிர்ந்ததன்றே. (௭)

தூணமொன்றெழுதலோடுந்துண்ணெனநடந்தன்னோர்கண்
மாணழற்பிழம்பாயீங்குவயங்குவதெவன்கொலென்னக்
காணுதல்புரிமார்நெஞ்சிற்கவலையுற்றெண்ணுங்காலைத்
தாணுவுமதனுட்டோன்றிச்சாற்றுதல்புரியலுற்றான். (௮)

வாருமினீவிர்வாளாமலைவதென்வயங்காநின்ற
வோருமிவ்விலிங்கத்துற்றேமொளிமுடியடியுந்தேடிப்
பாருமின்கண்டுமீண்டபரிசினர்பெரியோரென்று
னாரணனொடுபைந்தோட்டுநளினனுமதற்குநேர்ந்தான். (௯)

தோலடிப்பவளச்செவ்வாய்த்தூச்சிறையன்னமாகி
மேலணிமுடியைக்காண்பான்விரிஞ்சனும்விண்ணம்போந்தான்
காலிடைக்கிடையேயண்டங்கடிப்பகைபொருவவோங்கி
மாலுமப்பியந்தாள்காண்பான்வராகமாய்மண்ணம்புக்கான். (௧௰)

கண்ணிளைப்பெய்தும்பன்னாளிருவருந் தருவிச்செல்ல
மண்ணிடைக்கிளைத்துப்புக்கோன்மலரடிகாணேனென்ன
வண்ணலுக்கோதிநிற்பவன்னமாய்* விண்ணிற்போந்தோன்
கண்ணெதிர்ப்பட்டுமீண்டேன் †கடவுணீண்முடியையென்றான். (கக)

என்றலுமுறுவல்கோட்டியெம்பிரானிலங்குமோலி
சென்றுநீகண்டேனென்றுசெப்பினையதற்குச்சான்றிங்
கென்றுமார்‡றுளதேலொப்பித்துயர்ச்சிநீபெறுதியென்று
னின்றநான்முகனுங்கைதாய்நீகரிகூறுகென்றான். (கஉ)

கூறலுங்கண்டற்போதுகுலமணிவேய்ந்தமோலி
நாறுபூங்கமலத்தோனுந் றூகினன் கண்டானென்ன
வாறுசூழ்சடையினின்றுமவிழ்ந்தனையாகிநீயு
மீறில்கற்பங்கள்வீழ்வரயிடைக்கண்டிங்கென்சொல்கின்றாய். (கங)

கரிபொய்த்தாயாதலாலேகடவுளரெவருஞ்சூடற்
குரியைநீயல்லையாகியொழிகெனவுருத்துக்கூறி
விரைகமழ்கமலப்போதின்வேதியனுக்கோரயி
றரைமிசையில்லையாகிச்சாம்புகநீயுமென்றான். (கச)

இத்தகைச்சாபமேற்கொண்டேகியவிரிஞ்சன்பார்மேல்
வித்தகக்கோயிலின்றாய்மேவுதல்வீறன்றென்றுச்
சித்தமாகுலமுற்றன்றென்றீவினையொழிப்பானெண்ணி
மத்தம்வேய்ந்தவனைப்போற்றிவழிபடமனத்துட்கொண்டான். (கரு)

கொண்டவனமக்குமுன்னங்குலவியவிரிஞ்சன்வைகு
§மெண்டருதவத்தானந்தான்யாதெனத்தேர்ந்துபார்மேல்
வெண்டிரைபசும்பொன்வீசும்விருத்தகாவிரியின்றென்பாற்
பண்டைநான்மறைகளேத்தும்பரமன்வாழ்கல்லூர்புக்கான். (கசு)

புக்கநான்முகத்துப்புத்தேள்புராந்தகன்சரணம்போற்றி
மிக்கபேரன்பாற்பூசைவிதிமுறைபுரிதற்குற்றே
னக்கநீயருளுகென்னநம்பனுநன்றென்றேவச்
செக்கர்மேனியனையேத்தித்திசைமுகனினையசெய்தான். (கஎ)

---

* ‘விண்ணம்போந்தோன்’ என்று பிரதிபேதம்.
† ‘கடவுணின்முடியை’ என்று பிரதிபேதம்
‡ ‘றுளதோவொப்பித்து’ என்று பிரதிபேதம்.
§ ‘மெண்டகு’ என்று பிரதிபேதம்.

வாயுதிக்கதனின்மூன்றுவாளிவீழெல்லைதன்னி
லேயுர்தன்கையிற்கொண்டவியப்புறுதர்ப்பைதனாற்
றாம்பநீர்க்குண்டங்கண்டுசுந்தரகிரியினங்கட்
பாயொளியிலிங்கமொன்றுபாங்குறத்தாபித்தன்றே. (கஅ)

கண்டவத்தடத்தின்மூழ்கிக்காலைசெய்கடன்களாற்றி
முண்டகத்திறைவன்மெய்ந்நான்மறையுளிவழாதவண்ண
மண்டர்நாயகனைப்பூசித்தஞ்செழுத்தெண்ணியிவ்வா
றொண்டவம்புரிந்தங்குற்றானொருநூறுபருவமாதோ. (கக)

வன்னமைந்தோதிவேதன்வான்முறைவதிந்தனாற்றான்
முன்னவன்வன்னமைந்தாய்முறைமையின்விளங்கித்தோன்ற
வன்னமீதுயர்த்தோன்கண்டங்கதிசயம்பெருகியையன்
பொன்னந்தாமரைத்தாள்போற்றிப்புளகம்பூத்துடல்பூரித்தான். ()

பங்கயத்தவிசின்மேலோன்பத்தியினுறுதிகண்டு
வெங்கள்விட்டலர்ந்தகொன்றைவிரிசடைமவுலியெங்கோன்
மங்கையோர்பாகமாகவயங்குமவ்விலிங்கநின்றுஞ்
செங்கண்வெள்விடைமேற்றோன்றித்திசைமுகன்காணநின்றான். ()

நிற்றலுங்கமலப்புத்தேணேசமுற்றிருந்துமல்கக்
கற்றையஞ்சடையோன்பாதங்கைதொழுதிறைஞ்சிப்போற்றி
யிற்றைநாளடியேன்பூசைக்கிரங்கினைபோல்வந்துற்றா
யற்றமில்பெரியோர்க்கென்றுமருள்வதேகடன்மற்றன்றோ. (உஉ)

இன்னனபலவுங்கூறியெண்ணில்பல்வேதஞ்சொல்லி
முன்னவன்பாதம்போற்றிமுறையுளியிறைஞ்சிநிற்பக்
கன்னலுந்தேனும்பாலுங்கனைகடலமுதும்போலச்
சொன்னலங்கனிந்தநங்கைதுணைவனுஞ்சொல்லலுற்றான். (உந)

அன்பினாற்புரிந்தபூசைக்ககமகிழ்ந்தருளினேம்யா
மின்புகூர்வரங்களெல்லாமீகுதும்வேண்மோவென்னப்
பொன்புரிகமலத்தோனும்புண்ணியன்பாதம்போற்றி
நின்பெருங்கருணையல்லானேசிப்பதெவன்கொலென்றான். (உச)

ஆயினுமையநின்பேரருள்வழிநிற்பதல்லா
லேயினவேதுமுண்டோவென்னுமன்னதனாற்சொல்கேன்
சேயொளிமவுலிகண்டேனென்றபொய்த்தீங்காற்கைதை
மாயும்பொய்ச்சான்றால்வந்தமாசிலைதவிர்தல்வேண்டும். (உ[illegible])

# பிரமதேவர் வரம்பெற்ற சருக்கம்.

தண்டினுற்றமிகோன் கண்ட தடத்திடையுவாவின் மூழ்கி
னெண்டிரைவாகர் துன்னோர் யார்க்குமைம்பாதகம்போய்
விட்டிடல்வேண்டும் பொய்ம்மை விளம்பியபாவத்தோடு
கண்டிடா துரைக்குஞ்சான்றின் கரிசுதீர்ந்திடுதல்வேண்டும். (உசு)

ஐவகைவண்ணமாகி யயனேன்காணத் தோன்றி
யுய்வகைபுரிந்தவண்ணமுலகெலாங்காணுமாறு
செய்வகையளித்தல்வேண்டுந் திங்களங்குழவியோடும்
பைவரியரவந்தாங்கும் படர்சடைமவுலியெந்தாய். (உஎ)

பிறன்பழிகூறுந் தீயோர் பிறழ்ந்தபொய்க்குறளைசொல்வோ
ரறந்தபவருந் தாவுண்டியருந் துர்ப்படிறுசொல்வோர்
திறம்படக்கரிபொய்த்துள்ளோர் தீம்பர்பாசண்டரேனு
மறந்தபயான்செய்லிங்கம் வணங்கின் வீடடைதல்வேண்டும். (உஅ)

பெற்றிகூர்மகாத்திங்கட் பூமகுண்டத்தின் மூழ்கி
னெற்றுநீர்க்கிடந்தான் றன்னையிருநிலத்தியாவரேனுங்
கற்றையஞ்சடையுமூன்றுகண்களுமழுவுமானு
முற்றுநின்போலகாளுமுறைந்திடல்வேண்டுமென்றான். (உகூ)

என்றலுமவைகளெல்லாமிளம்பிறைமுடித்தவெங்கோ
னன்றெனவளித்துமுன்னநாமுரைத்திட்டசாபம்
பொன்றுதலரிதாற்கோயில்பூசுரர்வதனமாக
வொன்றுநீமறமற்றென்றானுளங்களித்தயனுநின்றான். (௩0)

கானலங்கைகைதப்போதுங்காதலால்யாமேயன்றி
வானவரெவருஞ்சூடவரங்கொடுத்தளித்தோமென்றுத்
தேனினுமினியதீஞ்சொற்றேவியோர்பாகங்கொண்ட
கூனலம்பிறைசேர்சென்னிக்குழகனுமிலிங்கத்துற்றான். (௩௧)

வேதனும்விமலன்றன்னை விடைகொண்டுமீண்டுசென்றான்
பூதலம்புகழுமந்தப்புண்ணியநகரின்மேன்மை
யோதுமாறெளிதோசேடனூழிபல்லூழிகாறுங்
காதலினுரைசெய்தாலுங்கரைகாணலரிதுமாதோ. (௩௨)

இனையமர்க்காதைசொல்வோரெழுதுவோரினிதுகேட்போர்
முனைவனதருளினாலேமூதாமுடிமேற்கொண்ட
கனைகருங்கடலந்தானைக்காசினியாண்டுபின்னர்
நினைவரும்பெருமைத்தாயநகரில்வீட்டின்பஞ்சேர்வார். (௩௩)

பிரமதேவர் வரம்பெற்ற சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கூஉஎ.

பன்னிரண்டாவது

# ஐராவதம் வரம்பெற்ற சருக்கம்.

---

## வேறு.

நாகிளம்பிறைநான்மருப்புப்பொருப்
பேகனைப்பணிந்தெய்தியசாபந்தீர்ந்
தோகைபெற்றமையோதெனச்சூதனும்
பாகுபோன்மெனப்பாங்குடன்கூறுவான். (௧)

பண்டுமேவியபாத்மகற்பத்தினி
லண்டர்கோனயிராபதமேருவிற்
கொண்டல்சூழுங்கொழுமலர்ச்சோலையுட்
டண்டொருததருக்கொடுஞ்சென்றதால். (௨)

சாந்தம்வீசித்தடஞ்சினைக்குங்குமப்
பூந்தண்சோலைபுகுந்தலைத்தாய்மல
ரேந்துகாவலந்தண்பொழிலெய்திவீழ்
சேந்ததீங்கனிச்சேதகம்பூசியே. (௩

அருவியெற்றியுமாடகத்தோடவிழ்
மருமலர்ச்சுனைவாரிகிளைத்துமீத்
தருமினானருத்தன்பிடிக்கூட்டியு
மருவுகாதலினான்மகிழ்வெய்தியே. (௪)

மையன்மும்மதவாரணமீரவே
ளெய்யும்வாளிக்கிலக்கமதாகியே
பெய்யுங்காதற்பிடியுடன்மேவித்தன்
கையினாலணைத்துக்களித்தேகிற்றே. (௫

புகிச்சண்பகவீர்ந்தண்பொழிலிடைப்
பூகவேலிபுடைசூழ்பளிக்கறைத்
தாகுமாதவிப்பந்தரினன்பொடும்
வேகமாமதவேழங்களித்ததே. (௬

அம்பொன்மேருவுருவியஞ்சாலிற்
கம்பவேழங்களித்தங்கமர்வழி
யும்பர்தானவரோடொருங்கேகியே
வெம்புபூசல்விளைப்பதற்கெண்ணினார். (௭)

உச்சயிச்சரவம்முடன்றார்த்தது
வச்சிரப்படைவாளொளிவீசிய
தச்சுநீட்டியவாழியந்தேர்ப்படை
கச்சமில்லனவெங்குழுகலித்தவே. (௮)

விண்ணுளோர்கண்மகுடமிடைந்தன
வண்ணவார்கொடியெங்குமலிந்தன
தண்ணந்தாமக்கவிகைதழைந்தன
வெண்ணில்பல்லியமெங்கணுமார்த்தவே. (௯)

வில்லும்வாளும்விலக்கருஞ்சூலமுங்
கொல்லும்வேலுங்கொலைகெழுதண்டமும்
மல்லுநண்பகலாக்குந்திகிரியுஞ்
செல்லுந்தோமரமுஞ்செறிந்திட்டவே. (௧0)

அரியயாதவராளிவிளம்புநீள்
வரிகொள்கண்ணியர்மங்கலங்கூறநேர்
பரவிநின்றுபல்லாண்டிசைபாங்கரின்
விரவிநீண்முடிவிண்ணவர்வாழ்த்தவே. (௧௧)

எண்ணில்வந்தியரேத்தவரம்பையர்
தண்ணென்சாமரைசார்ந்தனர்வீசவே
தண்ணகன்றவான்காத்தருள்வாசவன்
றண்ணெனப்புறம்போந்திதுசொல்லுவான். (௧௨)

வெஞ்சரத்தின்விரைந்தடர்மும்மதக்
குஞ்சரத்தைக்கொணருமினீண்டென
மஞ்சுவாகனன்கூறலும்வாதுவர்
தஞ்சமென்றடிதாழ்ந்துசென்றார்களே. (௧௩)

சென்றவ்வாதுவர்திண்டிறல்வாரணை
நின்றகூடத்துநேடினர்கண்டிலார்
வென்றிவாசவன்முன்னர்வெருக்கொடே
யின்றுகாண்கிலமெங்குற்றதோவென்றார். (௧௪)

ஆனைகண்டிலமென்னவாகண்டல
னேனைநாளுற்றிறுதியிற்கைவிடு
ஞானமில்லவர்கட்பெனப்போரிடை
யூனயானையெங்கோடியொளித்ததே. (கரு)

என்னக்கூறியவ்விந்திரன்சிற்றமிக்
கன்னசெய்கையயிராவதத்தினை ப
பொன்னம்பூமிவிடுத்துப்புடவிமேன்
மன்னுசென்னவலிதின்வைதானரோ. (கசு)

உவத்வாறுமதித்தயிராவதம்
வெய்துயிர்த்துவெருக்கொண்டயர்வுழிக்
கைதவத்தைக்கடிந்தமகதியாழ்ச்
செய்தவப்பெரியோனவண்சேர்ந்தனன். (கஎ)

சேரலோடுமெச்சிந்தனைவாரண
நாரதப்பெரியோன்பதநாண்மல
ரோருமன்பினங்குற்றுப்பணிந்து
வீரநெஞ்சத்தவனென்றியம்புவான். (கஅ)

மதந்தணிந்தனைவாகையீற்றீர்ந்தனை
யிதந்துறந்தனையெய்தியதியாதெனக்
கதங்கடிந்தவன்கேட்டலுங்காய்கரி
பதத்தெரிந்திதுபண்ணியதாமரோ. (ககூ)

கற்பகச்செழுங்கானகக்காவலன்
முற்பகற்றனைவைதமுறைமையெலாம்
விற்பழுத்துயர்மேனிமுனிவற்
கற்புதங்கொளவோதியமைந்ததால். (உ0)

ஓதலோடுமுறுதவநாரதன்
போதகந்தனைநோக்கிப்புகலுவா
னேதமிக்கவிடர்க்கடனின்றனைத்
தீதிற்றீர்த்தெடுப்பேனெனச்செப்பினன். (உக)

மாக்கடற்புவிமேல்வரமார்பதி
நோக்கிற்காசிமுதனூற்றெட்டென்பர்
தூக்கியெட்டோடாறுபதுஞ்சொல்வராற்
றூக்கிலீரெட்டுச்சாற்றினெட்டாமென்பர். (உஉ)

அவற்றின்மூன்றதிகம்மவையாவெனிற்
சுவை தமிழ்பெறுந்தொன்மதுராபுரி
தவத்தின்மிக்கவர்தங்குமாலூர்கடற்
புவிக்கண்பாரும்புகழுநல்லூரென்பார். (உக)

திருந்தமாதவர்சேருநல்லூரது
விருந்தகாவிரித்தென்கரைமேவுமா
லருத்தீஞரவாங்கெய்தியரன்பதம்
பொருந்துபூசைபுரிந்தனையுய்தியால். (உ௨)

திங்கட்கண்ணியான்சேவடிப்போதுண்டு
கொங்கவிழ்ந்தலர்கொய்ம்மலர்தானுண்டு
தங்குமைந்தெழுந்துண்டுதண்ணீருண்டா
லிங்குவாடியிருப்பதெனுங்கொலோ (உ௩)

அஞ்சலஞ்சலயிராவதமினிச்
செஞ்செவேகியச்செல்வநல்லூரெய்தி
வஞ்சிபங்கனைவந்தனைசெய்யென
விஞ்சைநாரதன்விண்ணிடையேகினன். (உ௪)

நாரதன்செலநான்மருப்பியானையும்
பாரில்வந்துபழங்காவிரித்தென்பா
னேரிலாதநல்லூரைநெறியினு
லாருமாசைமீக்கூரவடுத்ததால். (உ௫)

அடுத்தகுஞ்சரமம்புயத்தோன்கண்ட
மடுத்துளைந்தெழுவாரியின்மூழ்கியே
படுத்ததேகளிப்பாசாங்குசனெனுங்
கடுத்ததும்பியகண்டனைப்போற்றியே. (உ௬)

அஞ்சிலோதியணங்குமைசேறடிக்
கஞ்சநாண்மலர்கைதொழுதன்பினுல்
விஞ்சுதெய்வதமேனவும்வேண்டுபு
குஞ்சரம்பரமன்னருள்கொண்டரோ. (உ௭)

மங்கைபங்கர்க்குவாயுகோணத்தினி
லங்கணைக்கிடையெல்லையதனிடைத்
தங்கலிங்கமுந்தீர்த்தமுந்தாபித்துத்
துங்கவேழந்தொழுதவணுற்றதால். (௩0)

இனையவண்ணம்பருவமிராறுநீர்க்
கனைகடற்கவுண்டருள்கண்ணுத
லனையருச்சிப்பத்தந்தாவளத்தெதிர்
துனைவெள்ளேற்றின்மேற்றோன்றுந்தோன்றினன். (௯௧)

தோன்றிநிற்றலுந்துங்கவெள்ளானைப்
மூன்றுகண்ணுடைமுன்னவன்சேவடி
யூன்றுபோன்புவட்டெடுத்தோட்டவே
யேன்றுபோற்றியிறைஞ்சியெழுந்ததால். (௯௨)

எழுதலேர்டும்பந்தனைநோக்கியே
வழுவிலாவுனபூசைமகிழ்ந்தனை
முழுதுநல்குதுமுன்னியதியாதெனக்
குழகன்கூறலுங்குஞ்சரங்கூறுமால். (௯௩)

புல்லிதாயவென்பூசனைதன்னையும்
வல்லிபாகமகிழ்ந்தனையாதலாற்
சொல்லுநல்வரம்யாதுன்றனையடி
யல்லிதாண்மலரன்பொன்றுமலால். (௯௪)

காதளந்துகணைபுறங்கண்டகண்
மாதுபாகவரமதுவாயினுந்
தீதிலிந்திரன்செப்பியசாபந்தீர்ந்
தேதமின்றிவிண்ணெய்துதல்வேண்டுமால். (௯௫)

அன்னணுமமயிராவதேசனென்
றுன்னயந்துலகோதுதல்வேண்டுமோ
வென்னுநல்வரமீதெனவீசனுந்
திண்ணமாகவருளிச்சென்றனரோ. (௯௬)

வெள்ளையானைவிடைகொண்டுமேவரியந்
தள்ளுலாமலர்க்கற்பகக்காவில்வா
ழெள்ளரும்புலவோர்க்கிறையாகிய
வள்ளலூர்தியதாகிமலிந்ததால். (௯௭)

அன்பினாலவ்வயிராபதங்கண்ட
கன்குலாவுகன்னீர்த்தடமூழ்கியே
பின்புகூரவ்விலிங்கத்தைப்போற்றினர்
வன்கட்டவினையாவையுமாய்ப்ப (௯௮)

சொன்னவிக்கதைசொல்லுநர்கேட்குநர்
மன்னயங்கொடெழுதுநலத்தினோர்
பின்னல்வெண்டிரைப்பேருலகாண்டபின்
பொன்னினுடுமுழுதும்புரப்பரால். (௬௬)

ஐராவதம் வரம்பெற்ற சருக்கம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—௬௬௬.

---

## பதின்மூன்றாவது

## சுமதி காந்தனையடைந்த சருக்கம்.

---

*வேறு.

வரியுடனாகக்கன்னிகையொருத்திவந்துநல்லூரான்பாதம்
விரிமலர்தூவிவணங்கியாங்கதனால்*விழைவுகூர்காந்தனையடைந்த
வீரியமாக்காதைபுகலெனவுறுவரறைதலுஞ்சூதமாமுனியுந்
தெரிவுறநோக்கிப்பரசிவனருளாற்றேறலுமுவட்டநன்குரைப்பான் (௧

உரைபெறாதந்தரகற்பமதனி லூற்றிடுமோதிநல்லுகந்திற்,றரையசமுழு
தும்பணத்தின்மீப்பரிக்குஞ்சர்ப்பவேந்தன்புரிதவத்தால், வருமெழிற்கன்னி
சுமதியென்றொருபேர்வாய்ந்துளாண் மலர்ப்பொகுட்டிருக்குந், திருவை
யும்வனப்பால்வென்றவ ளனங்கதிலகமேயனையமாட்சியினாள் (௨)

புயலெனக்கறுத்துக்காவெனத்தழைத்துப்பூம்புகையுண்டுபூரிக்கு
மியனெடுங்கோதைபெற்றுளாள்வானத்திளம்பிறையனையவாணுதலாள்
கயலினைப்பழித்துவாளினைமருட்டிக்கடைசிவந்தகன்றுகாதடர்ந்தே
யயிலெலாம்பழகியரிபரந்தனங்கனம்பலைத்தமர்த்தவாட்கண்ணாள். (௩

ஒழுகுபொற்குமிழ்மூக்குற்றுளாள்கபோலமொளிகெழுகண்ணடியனையா
ளழகுவீற்றிருக்குமதாஞ்செம்பவளமாயினாண்முத்தவெண்ணகையா
ணிழன்மதியனையமுகத்தினாளமிழ்தைநெட்டிலைக்கரும்புடன்பழித்த
மொழியினாள்வள்ளைவாட்டியகாதாண்முத்தணிபணிலம்போன்மிடற்று (௪

பச்சிளவேய்போற்பணைத்தமென்றோளாள்பாடல்யாழனையமுன்கையா
ளைச்சரோருகத்தாள்கெளிறுபோல்விரலாள்காதல்கூர்கிள்ளைவாயுகிராள்
செச்சையங்கலவைச்சேதகந்தினைத்துச்சீதவெண்பிறைவடந்தாங்கி
வச்சிரத்திழைத்தவார்தொலைத்தெழுந்து†மருப்புநேருருப்பிளமுலைபாள்

* 'விழவு' என்று பிரதிபேதம்.
† 'தெழுந்த' என்று பிரதிபேதம்.

அங்கைபோலுதரம்வாய்ந்துளாண்மும்மைத்தாகியவரைநிரையனையாள்
கங்கையஞ்சுழிபோலுந்தியாடடியுங்கற்பகக்கொடியுநேரிடையாள்
கொங்கரங்கனையவல்குலாளுருப்பொருகரிக்கையெனத்திகழ்ந்தாண்
மங்கலமுழந்தாளலவனைப்பொருவவரிவராலிகர்கணைக்காலாள் (௬)

பொற்றராசனையபாட்டிகுள்கமடம்புத்தகம்போற்புறவடியா
ளுற்றசெம்பவளக்கடிகைபோல்விரலாளொளிகெழுநித்திலவுகிரா
ணற்றளிரனுக்கியிலவிதழ்கவற்றிநான்கடிநடப்பினுமந்தோ
விற்றதென்றிரங்குந்தாமரைப்பதத்தாளிளம்பெடையன்னநேர்நடையாள்;

இன்னபேரழகுவாய்ந்துளாள்சுமதியென்னுமாரணங்குநல்லூரின் [ட்
முன்னவன்றனக்குப்பாவகன்றிசையின்மொழியுமைங்கணைக்கிடையதன்க
டன்னமுன்னவிர்தசேடனூர்கண்டதகைகெழுபிலத்திலுல்வந்து
பொன்னலர்தூவிச்சுந்தரேசுரனைப்பூசனையனுதினம்புரிவாள். (௮)

பாசிழைச்சுமதிகுணங்கெழுவரனைப்பாங்கிலுலடைதற்கிவ்வண்ணம்
பூசனையீசற்கியற்றியேமுன்னம்புண்ணியம்பயத்தலிலொருநாள்
வாசநாண்மலர்ப்பூஞ்சோலையினீழன்மரகதப்பாறையின்மருங்கின்
யோசனைகமழுமாதவிச்சூழலொருமயிலாடல்கண்ணுற்றாள். (௯)

புனமயிலாடல்கண்டவம்மடமான்பூந்தளிரசோகமொன்றடுத்தே
யினமலர்ப்பசும்பூங்கொடியொருகையாலியலுறப்பற்றினளேக்கி
மனமகிழ்தூங்கவிருகணுங்களிப்பவஞ்சியங்கொடியிடைதுவளத்
தனதடஞ்சுமந்தவோவியப்பாவைதன்னையொத்தொருபுடைநின்றாள். ()

வளைகடலுடையுலகெலாம்புரக்கும்வளவர்வண்குலத்திடையுதித்தோன்
றளையவிழ்பசும்பூந்தாதகிமாலைதடம்புயவரைத்தலந்தரித்தோன்
களைகணுய்ப்புடவிவெண்குடைநீழற்காத்தருள்புரியுஞ்செங்கோலா [ன்.
னுளைவயப்பரியான்கடக்களிற்றுழவனொலிகடல்பொருவுபோர்ப்படையா ()

விரவலர்மகுடகோடிகளுரிஞ்சிவிழுத்தழும்பிருந்தபூங்கழலான்
மருவலர்பகழியனங்கவேளென்னவயங்குமெய்வடிவுபெற்றுள்ளான்
றருமமேயுருவமாயதன்மையினுன்றருவெனவுதவுகைத்தலத்தா
னருளினுக்குறையுளாயினன்வென்றியரித்வசனென்னுமோர்வேந்தன். ()

கூர்த்தவாளரவால்வளைப்பினின்மிகுந்தகுணங்கெழுகன்னியைவேட்பான்
றீர்த்தயாத்திரைமேற்கொண்டகன்புவியிற்றிவ்வியகங்கையேமுதலாப்
பார்த்தினிதாடிப்பரம்பரனுறையும்பதிபலபுகுந்துசேவித்துத்
தார்த்திரயெலும்புயத்தினன்பொன்னித்தடங்கரைப்பாங்கர்வந்துற்றான்.

வெள்ளநீர்ப்புணரிவிரித்திநிதுடுக்கும்பார்மகண்மங்கலவணிபோன்
றெள்ளரும்வளங்கள்பற்பலதழைத்தேயெண்டிசைவளாகமும்போற்றப்
பிள்ளைவெண்மதியுமரவமுநதியும்பேழையஞ்சடைமுடிக்கணிந்த
வள்ளல்வீற்றிருக்குஞ்சுந்தராசலத்தின்மான்மியம்வினவியங்கடைந்தான்

சேணிடைச்சிகரங்காண்டலுந்தனதுசென்னிபார்மிசையுறவணங்கி
யாணர்நல்வளஞ்சூழ்சவுரியநகரையெய்தினன்மும்முறைசூழ்ந்து
பேணியந்தணீர்தங்குழாத்துடன்புகுந்துபிரமதீர்த்தப்புனலாடித்
தாணுவாலயத்தைவிதிமுறைசார்ந்துநாண்மலர்வந்தனைபுரிந்தே. (௧௫)

திருமலைச்சொக்கியென்னுமாதுமையின்சீரடியன்பினில்வணங்கிக்
கருமலைத்தருளுமைங்கரன்முதலகடவுளர்சரணங்கள்போற்றி
யுருமலைத்திகலும்வென்றிமால்யானையுழவனும்விழைந்தனவேண்டி
மருமலைத்தளிகள்கூட்டுணுநந்தவனத்திடைத்தனித்துவந்துற்றான். (௧௬)

மேவியங்கவனும்விழைந்தனனுலாவும்வேலையின்முன்செய்நல்வினையாற்
பாவையங்கவளைக்கண்டனன்கண்கள்படைத்ததற்குப்பயன்படைத்தான்
ஆவியஞ்சிறையவன்னமோமயிலோதொண்டைவாய்க்கிள்ளையோவணங்கி
ஞவிமற்றிதுவோகற்பகக்கொம்போவரம்பையோயாரெனவயிர்த்தான். ()

அன்னவடானுமிருகணுங்குளிரவாடவர்திலகனைக்கண்டாள்
பொன்னணிசுடர்வேன்முருகனோவல்லாற்பூங்கணைக்காமனோவானின்
மன்னவனுயிர்த்தகுமரனோவென்றுமனத்தினிலயிர்த்தனளாகித்
தன்னிலைதளர்ந்துமுகமதிகோட்டித்தமனியக்கொடியினொல்கினளால். ()

நாந்தகத்திறையுஞ்சுமதியுந்தமதுநயனபுண்டரிகநாண்மலரு
மேந்தெழிற்கண்களெனுமலர்க்குவளையிணைகளுநார்கொடுதொடுத்தார்
பூந்துணர்வாளிகாமனுந்தொடுத்தான்புயத்திலும்வனமுலைத்தடத்தும்
தாந்தரித்தனராலன்னவர்மோகசலதியார்கரைகண்டுசொல்வார். (௧௯)

ஒருவருக்கொருவர்காதலங்கடலினூடுபுக்கழுந்தினராகி
யிருவருநின்றாநிற்றலுங்காமனிவரையாணிணக்குவலென்றுப்
பருவமங்கையினெஞ்சகத்தினிற்போந்தப்பரிசெலாமுணர்ந்தும்பாங்குற்ற
திருவநீள்கழலான்சிந்தனைபுகுந்தச்செயல்கண்டுமெய்கொடிங்கிதழன்றான். ()

கருங்கண்வேலிணையென்மார்பகத்தெறிந்துகமலநாண்மலர்முகங்கோட்டி
பொருந்துறுதவர்போனிற்குமாறும்மைப்போல்பவர்தமக்கியலன்றால். [ப்
வருந்துறுதொழிவாயென்றுசெம்பவளவாய்திறந்தொருமொழிபகர்ந்தாற்
றிருந்துவாய்முத்தஞ்சிந்துமோதனிநீர்சென்றதிங்கேதெனப்பகர்ந்தான்

காமநீள்கணிச்சிநாணத்தாள்செறித்தகாண்வருநிறையெனுங்கதவைச்
சேமமற்றின்றியுடைத்தலுஞ்சுமதிசிவனருளீதெனத்தெளிந்தே
நர்மவேலிறைவன்றன்னொடொன்றுரையாணணுகினளுரைக்கவுமுறுவா
ளேமவூசலையொத்தலம்வருமனத்தாளெதிர்நின்றிங்கிவையனபகர்ந்தாள்.

நம்பனையருச்சித்திறைஞ்சுமப்பொருட்டானாகலோகத்தினைநீங்கி
யிம்பர்வந்திறுத்தேனெனதுபேர்சுமதியெந்தையும்பணிக்கிறையாமா
லும்பரார்போற்றுமீசனைப்பூசையுஞற்றியபயனுமின்றடைந்தேன்
கம்பமாகளிற்றோய்நின்குலமுறையுங்கருதியபரிசும்யாதென்றாள். (௨௩)

என்றுகட்டுரைப்பவேந்தலுங்குறுகியென்பெயராரித்விசனாகு
மன்றலஞ்செழுந்தார்வளவர்தம்மருமான்வையகமுழுவதும்புரப்பே
னென்றியவனப்பாலுயர்ந்தவோர்கன்னியுறுவதையுளத்திடைக்குறித்து
நன்றிகொடீர்த்தயாத்திரைபடர்வானணுகினனஃதுமின்றடைந்தேன். ()

ஊழினாலிவ்வாறிருவருங்கண்ணுற்றொருவழியுற்றனமிதுதான்
வீழிவாயணங்கின்பாகனதருளேவேறினியெண்ணுவதெவன்கொல்
யாழினோர்மணம்யாம்புரிகுதுமதனுக்கிடமுமீதாகுமாலென்னத்
தாழிவாய்க்குவளையுண்கணாளிசைந்துதன்னகைகோட்டினளுரைப்பாள்.

தந்திரிநல்யாழினர்மணமதுதான்சதுமறைவிதியென்பதேனு, மெந்
தைமுன்னெய்தியங்கிவேட்டுறுதலிறைவமற்றுலகியலாமாற், சிந்தைநீகவ
லேலென்றனளவனுந்தேறுதற்பொருட்டுநீண்முடிமேற், கொந்தலர்தாமங்
கழித்தனன்கொடுத்தான்கோற்றொடியவளுங்கைக்கொண்டாள். (௨௬)

நாகர்தமுலகிற்செல்லுதல்புவிமேனரர்தமக்கியலுவதன்று
லேகுமாறெவ்வாறென்றவனிசைப்பவேந்திழையிடர்ப்படாவண்ணம்
போகுதல்புரிவேனிறையருளதனாற்புலம்பனீயென்றவனோடு
மாகநீண்மதியமுடித்தவன்பாதம்வணங்கினள்விடைகொண்டுமீண்டாள்.

செல்லுமப்பிலத்தினருகடைந்தவர்க்குச்செங்கையிற்குளிகையொன்றளித்
பல்லவங்கவற்றும்பதத்தினுள்புகுந்தாள்பார்த்திபதிலகனுமாங்கு [துப்
வல்லிதிற்சென்றான்கன்னன்மூன்றதனில்வாளராவுலகினையடைந்தா [ர்.
ரெல்லொளி*யணிபூண்பாங்கியர்க்கெல்லாமிசையுமாறிசைத்தனளன்னோ

செவிலியர்க்குரைப்பவவருநற்றாய்க்குச்செப்பினர்செப்பலுமவளும்
புவியினைப்பரிக்குமுரகவேந்தனுக்குப்புகன்றனள்புகறலுமன்னோ
னவிரொளிமணிகளாயிரம்பணத்துமாயிரமாதவர்கடுப்பத்
தவிசினின்றிழிந்துவாசுகிமுதலசர்ப்பவேந்தர்கள்புடைசூழ. (௨௧)

---

*'மணிப்பூண்' என்று பிரதிபேதம்.

சென்றனன் பரிதிகுலத்தினிலுதித்ததிறல்கொள்வேந்தனையெதிர்
கொண்டா, னொன்றியவவனுமுறைபணிந்தெழுந்தானொருவருக்கொருவர்
நன்குரையா, வின்றுதானன்றேயெமக்குநன்னாளென்றிருவருமின்பெரி
ந்தழுவி, மன்றலந்தொடையனான்றதோர்பசும்பொன்மாமணிமண்டபம்
புகுந்தார். (௯௦)

அரியணையதன்மேலரசனையிருத்தியாங்குசெய்வரிசைகளியற்றிப் [ர்த்தித்
புரிகுழன்மடந்தைமணவினைமுடிப்பான்பொருந்துதன்கிளைக்கெலாமுண
திருமகடன்னைப்பாற்கடன்மேனாட்செங்கண்மாயனுக்களித்ததுபோ
லிருவருங்களித்துவாழுமினென்னாவீர்ம்புனலதனொடுங்கொடுத்தான். ()

பாயிருள்பருகிப்பகலெதிரெடுக்கும்பன்மணிப்பேழைகள்பல்வு
மேயினமணிப்பொன்மகுடமேமுதலவிலகொளிப்பணிவகையெவையுந்
தூயமென்றூசின்றொகைகளும்வாசச்சுண்ணமேமுதலியவனைத்துஞ்
சாயலினொழுகுஞ்சேடியர்பலருந்தையலுக்களித்துடன்விடுத்தான். (௧௨)

மணவினைமுடித்துப்பின்னர்காலிரண்டுவைகலுமனமகிழ்தூங்கப்
பணமணிநாகருலகினில்வதிந்தார்பாரினேகுதுமினியென்ன
நிணமலிவேழ்கைநிருபனுமுரைப்பநீளராவேந்தனுமிசைந்து
குணமிகுவரிசையாவையும்புரிந்துகுளிகையுமொன்றுகைக்கொடுத்தான்.

கொடுத்தவன்விடுப்பவிருவருமராபாற்குரவனைப்பணிந்தனர்விடைகொண்
டடுத்தவப்பிலத்தின்வழியினானல்லூரடைந்தையன்சேவடிபணிந்தார்
கடுத்ததும்பியமைக்கண்டனுமவர்க்குக்கருணைபூத்தனன்கயிங்கரியந் [ன்.
தொடுத்தான்கோயில்புதுக்குவனென்னத்தொடுகழல்வேந்தனுங்குறித்தா

நாவலம்பொன்னாற்கிளிச்சிறையதனாலங்கெழுமாழையொண்பொலனா
மேருமொளிசேராடகமதனால்விளங்கியநவமணியவற்றாற் [ன்
றூவியேமுதலவாகியடணிகள்சுந்தரநாயகர்க்கியற்றிக்
காவலன்றன்பேர்பொறித்ததோர்தரணிகருணைகூர்நடேசனுக்களித்தான்.

பொன்விளைகழனியூர்பலசேர்த்துப்பொழியும்பார்குடம்புரைசெருத்த
னன்னிறக்கபிலையாயிரமுதவிநாடகக்கணிகையரனேகர்
சன்னிதிசிறப்பமகிழ்ந்தனனருளித்தாழ்விலாவகைவிதிமுறையான்
மன்னியபூசையியற்றுபுவிசேடவகைமுறைதிருவிழாநடாத்தி. (௧௬)

எந்தையெம்பெருமான்சுந்தரநாதனிணையடியிறைஞ்சிவேல்வேந்த
னந்தமிலன்பாலப்பதியதன்கணரசவீற்றிருந்தனனவளுஞ் [ழுதந்
சிந்தையன்புடன்மூன்றம்பிகைடயிறைக்குத்தென்றிசைமருங்கினோர்தீர்த்
தந்தனள்புரிந்துமகிழ்ந்தனளாகித்தன்பதியகனொடுமமர்ந்தாள். (௧௭)

அந்நகர் தன்னிலூழியல்காலமகமகிழ்ந்திருவருமமர்ந்து
பொன்னகரதனிற்கற்பமோரயுதம்புரந்தரசெல்வமுற்றுறைந்தே
பின்னலஞ்சடிலத்திறையருளதனூற்பேரின்பவீட்டிலெய்தி
மன்னிவீற்றிருந்தாரன்னவர்பெருமைவகுத்துரைப்பதனையார்வல்லார். ()

மேவுகார்த்திகைநற்றிங்களின்வெள்ளிவிரும்புவாரத்தினச்சுமதி
யாவலாற்கண்டகன்னிகாதீர்த்தந்தாடுநோற்றினைந்தவையெல்லாந்
தாவிலாதடைந்துதராதலமுழுதுந்தன்குடைநீழலிற்புரந்தே
யோவிலாமரபாற்கற்பகநீழலுற்றுவீற்றிருப்பதுசாதம். (௩௧)

சொற்றவிக்கதைதையெழுதுநர்கேட்போர்தொல்லைவல்வினைச்சிமிழ்ப்பொரு [விக்
கற்றையஞ்சடிலத்தெம்பிரானுறையுங்கயிலையங்கிரியில்வீற்றிருப்பார்
பொற்றளிர்கவற்றியணிச்சமென்போதைப்புறங்கண்டதாவிபோன்றுள்ள
சிற்றடியுமையாள்பங்கினனல்லூர்சேர்ந்துளார்பெருமையாருரைப்பார். ()

சுமதி காந்தனையடைந்த சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்–எ0௩.

---

பதினான்காவது

## சங்குகன்னச்சருக்கம்.

---

வேறு.

வில்லெயினர்தங்கள்விறல்வேந்தனிறையோனை
வல்லியுமைநங்கையுடன்வந்தனைபுரிந்தே
நல்லருணமக்கள்பெறுநற்கதையைமேலோர்
சொல்லுகென்னலும்பெரியசூதமுனிசொல்வான். (௧)

நாளவனசத்திருநயந்தினிதுவைகு
மாளவமெனும்பெரியமாநகரியாள்வோன்
மீளிவிறலானடல்செய்வேடர்குலவேந்தீ
ஞாளியுனையானடையலாரையமர்வென்றான். (௨)

பன்னகமெடுத்தபுவிபாங்கொடுபரிக்கும்
பொன்னணிவயங்குபுயபூதரனடங்கு
மின்னவிரும்வாளுழவன்மேதகையசங்கு
கன்னனெனுநாமனெழில்காமனைநிகர்த்தான். (௩)

புத்திரர்நிமித்தம்வளர்பூவையர்கண்மூவர்
முத்தகமுழிஞ்சுமுலைமொய்குழலினல்லா
ருத்தமமணத்தொழிலுவப்புடன்முடித்தா
னத்தகைபுரிந்துமகவின்றியமர்கின்றான். (௪)

அந்தணர்தயக்கும்வருமாதுலர்தமக்குஞ்
சிந்தனைமகிழ்ந்துநிதிசிந்தியுலகின்க
ணிந்திரதருத்தனையுமீகையினில்வென்றே
முந்துமுயர்தானவகைமுற்றவுமுடித்தான். (௫)

கங்கைமுதலாயநதிகாதலுடனாடி
யெங்கள்பெருமானுறையுமெப்பதியுநாடிப்
பங்கயமலர்க்கழல்பணிந்துசெலுநாளின்
மங்கலநல்யாழ்மகதிமாமுனியெதிர்ந்தான். (௬)

கானவர்குலக்குரிசில்காளமுனிவன்று
றேனமதிலாதவகையுற்றுடன்வணங்கி
வானமுனிவோர்தலைவமக்களையிலாவென்
னீனமதுதீரவினியின்றருள்செயென்றான். (௭)

நாரதனுமவ்வுரைநயந்துமகிழ்வெய்தி
வீரமிகுவேடர்குலவேந்தவிதுகேளா
யோரின்முனநீபனவனோர்பசுவைமேனு
வீரமதிலாதுகழையேந்தினையொறுத்தாய். (௮)

அன்னபரிசாலெயினராதிபதியானாய்
பின்னருமவ்வானினதுபெற்றகுழக்கன்றுக்
கின்னலுறப்பால்விடுதலின்றிநனிகொண்டாய்
மன்னவதனான்மகவிலாதவகைகண்டாய். (௯)

அவ்வகையதீவினையகற்றியினிதுய்யச்
செவ்வியவுபாயமதுசெப்புதுமுவப்பா
லெவ்வமதிலாதவ்வகைகேட்டிடுதியென்ன
மவ்வனசைபங்கனைவணங்கிமொழிகின்றான். (௧௦)

வேறு.

பரவுதீம்புனற்காவிரித்தென்கரைப்பாங்கி
னரவுநீண்முடியும்பர்கோனமர்ந்தினிதுறையக்
குரவுபாடலங்குங்குமஞ்சாந்தமுங்குலவி
விரவுசோலைசூழ்சவுமியநகரொன்றுவிளங்கும். (௧௧)

அத்தலத்தினைச்சென்றுநீயன்பொடும்வணங்கி
முத்தவண்டுறைப்பிரமகுண்டத்தினின்மூழ்கி
நித்தன்சேவடிநேரிழைதன்னொடும்பணிந்தே
புத்தமக்குலத்தோர்க்கொருநூறுகோவுதவில். (௧௨)

புரிந்ததீவினைதவிருநீபுத்திரர்ப்பெறுவை
விரைந்துசெல்கெனநாரதன்விடுத்தயல்சென்று
னரந்தநாறுபூங்குஞ்சியானத்தலநாடி
யிரங்குவார்கழலெயினரொடாங்குவந்திறுத்தான். (௧௩)

வந்தவேட்டுவத்தலைவனும்வளங்கெழுநல்லூ
ரந்தமில்புகழ்ப்பிரமகுண்டத்தினிலாடி
யெந்தையெம்பிரான்சேவடிக்கமலங்களிறைஞ்சி
முந்தைவேதியர்க்கான்பலமுறையினிற்கொடுத்தான். (௧௪)

மாதமொன்றவணுண்டிநீத்தப்பதிவைகித்
தாதகித்தொடைசூடியசவுமியநாதர்க்
கேதமின்றியவன்பினாற்பணிபலவியற்றி
வேதநாதனைவிடைகொண்டுதன்பதிமீண்டான். (௧௫)

மீண்டுதன்பதிவந்தருள்வேடர்தம்பெருமா
ணண்டொரொல்லையின்மனைவியர்மூவர்க்குமன்பாற்
றூண்டுதீபமொத்தொளிதருதோன்றலார்மூவ
ரீண்டுதன்குலச்செல்வமேயென்னவீன்றெடுத்தான். (௧௬)

ஆளிமொய்ம்பினனிவனெனவகலிடம்புகலக்
காளனென்றபிதானமோர்மதலைக்குக்கணித்தான்
மீளியேனையர்தமைவிடதரனென்றும்வென்றிக்
கோளிலாக்குண*நீடனென்றுஞ்சொலக்குணித்தான். (௧௭)

திங்களங்கொழுந்தாமெனச்சிறுவர்கள்வளர்நாண்
மங்கைபங்கனதடியிணைவந்தனைபுரிவான்
வெங்கள்விட்டலர்சோலைநல்லூரினைவிரும்பி
யங்கண்மைந்தர்களொடு†மவண்மீளவுமடைந்தான். (௧௮)

* 'நீல' னென்று பிரதிபேதம்.
† 'மவண்' என்று பிரதிபேதம்.

அடைந்தவேடர்களதிபதிபிரமகுண்டத்திற்
குடைந்துமூழ்கியேயானடிகுடந்தம்பட்டேத்தி
யடைந்தவேட்டுவப்பிறக்கைதபோம்விழுந்தகுபரிசா
லிடங்கொளந்நகரிருந்தனன்யாண்டுமூன்றெல்லை. (க௯)

சாந்திராயணவிரதமேமுதலியவங்கள்
போந்தவேட்டுவத்தலைவனும்புரிந்தனனாகி
யேந்துபூணமுலைபங்கினனின்னருளதனாற்
காந்திகூர்தருகயிலைமால்வரையினையடைந்தான். (௨0)

அடைந்தவேடுமெச்சிறுவருமையனதருளா
லுடையதம்பதிக்கெய்தியேயுரிமைபூண்டுயர்ந்தார்
விடையுயர்த்தவனருளினால்வேடர்தம்பதியுந்
தடையிலாதொருகற்பமக்கயிலைசார்ந்திருந்தான். (௨க)

பின்னர்வேட்டுவத்தலைவனும்பிறங்குநல்லூரிற்
பன்னவக்குலந்தவதரித்தெழுகடற்படிந்தே
முன்னவன்கழன்முறைமையின்வணங்கியாங்குறைந்து
தன்னையொப்பதோர்சிவகதிசார்ந்துவீற்றிருந்தான். (௨௨)

கூறுமிக்கதைசொல்லுநர்கேட்குநர்குறிக்கொண்
டூறிலன்பினலெழுதுநரிப்புவிபுரந்தே
யாறுசூடியவண்ணலதருளினலழியாப்
பேறுபெற்றிடுவாரிதுசரதமேபெறுதும். (௨௩)

சங்குகன்னச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—எ௨௩.

---

## பதினைந்தாவது

## இராதமோட்சச்சருக்கம்.

---

வேறு.

மாதபோதனர்வள்ளலையேத்தியே
யோதநீருலகத்திலொர்வேட்டுவன்
றீதிலாக்கதிசேர்ந்தமைசெப்பெனச்
சூதமாமுனிசொல்லத்தொடங்கினன். (க)

கவுடதேசத்தொர்காண்டகுமந்தண
னவணிபோற்றுமரிதகுலத்தினன்
றவறிலக்கினிசாலைவளம்பதி
யுவகைகூரவுவந்தனன்வாழுநாள். (௨)

தெண்புலத்தவர்க்கூட்டுந்திரவியந
தன்கணாசையினாற்றவுருகியே
வண்கணாற்பெருமாமறையோனில்லந்
தின்கணேகியெல்லாங்கவர்ந்தேகினான். (௩)

உழுந்துந்தேனுமுணக்குந்துவரையுஞ்
செழுந்துப்போடுதிலமும்பாற்சாடியு
மழுந்துமின்னவையாதிகவர்ந்துதீக்
கொழுந்துபோற்றுய்ந்துக்கூற்றுலகெய்தினான். (௪)

எய்தியோராயுதம்மெரிமூண்டெழும்
வெய்யதீநரகத்திடைவீழ்ந்தவ
னுய்திபெற்றிவ்வுலகத்தருந்தெழு
மையல்வேடர்மரபினுட்டோன்றினான். (௫)

இல்லத்தங்கியிடுபவன்றீவிடங்
கொல்லவுய்க்குங்குணமிலிநான்மறை
வல்லவர்க்குவழிபிழைக்கின்றவன்
வெல்லும்வாட்படையேந்தியவேதியன். (௬)

அன்னம்விற்குமறிவிலிநான்மறை
சொன்னம்வாங்கிக்கொடுக்குஞ்சுமடனீண்
டின்னதீயென்றிசைவுகொண்டாதிநூ
றன்னையோதுவிக்கின்றதகவிலி. (௭)

அந்தணாளரைநிந்தித்துரைபவன்
சந்தமாமறைதன்னைப்பழிப்பவன்
முந்துதாய்தந்தைதம்மைமுனிபவன்
வந்துதானங்கொடாவகைமாற்றுவோன். (௮)

அறங்கெடுப்பவனாய்மலர்த்தோட்டத்தோ
டிறங்குநீர்க்குளமீடழிக்கின்றவன்
மறங்கொணெஞ்சின்மரங்குறைத்திட்டவ
னுறுந்தண்ணீர்ப்பந்தரூறுபடுத்தினோன். (௯)

தேவகோட்டஞ்சிதைக்கும்பொறியிலி
மேவுநல்விழாவீட்டும்விரகிலி
யேவவெள்ளுக்கொண்டெந்திரந்நாட்டிய
பாவகாரிப்பனவன்படிற்றினன். (௧௦)

ஆற்றுமௌபாசனமிழியந்தணன்
மாற்றுவேந்து*வசியஞ்சுகிற்பவன்
போற்றுகந்தங்கவருமப்புன்கணன்
கோற்றொடிக்குருபன்னியைக்கூடினேன். (௧௧)

தாரந்தன்னைத்தணந்துபிறனுக்கு
வாரம்பூண்டவன்மாமணையில்வேண்டினேன்
பேருமன்பிற்பிதிர்க்கடனாற்றிலான்
பாரிற்றீர்த்தம்படிதற்கெய்தாதவன். (௧௨)

ஆனினங்களுக்கல்லலிழைப்பவ
னீனமில்குடித்தோன்றியிழிந்துளோ
னூனமில்விரதங்களுமாற்றுபு
தான்முடித்தல்செய்யாதுதவறினேன். (௧௩)

பிறர்தொடுத்தவிரதம்பெயர்ப்பவ
னிறைவனல்விழாவெய்திப்பணிந்திலா
னறைகடற்புவிமேவிசோதியோர்
தறுகண்வேட்டுவராகிச்†சதிப்பரால். (௧௪)

ஆதலாலவ்வறிவறைபோகிய
வேதபாரகன்வேட்டுவனாகியே
மாதர்மக்கடம்வன்பசியாற்றுவான்
கானன்மிக்குக்களவுகொண்டுய்க்குநாள். (௧௫)

முன்னராற்றியநல்வினைமூண்டெழ
வன்னவேட்டுவனந்தணவேடங்கொண்
டுன்னுதீர்த்தங்களாடற்குகந்துளோர்
பின்னொடேகிப்பிறன்பொருள்வவ்வுவான். (௧௬)

சேர்ச்சிபார்த்துத்தொடர்ந்தவர்தம்முடன்
றீர்த்தயாத்திரைசெல்பவன்போலவன்
கார்த்தும்பியகண்டனைக்காஞ்சியில்
வார்த்தடங்கொங்கைமாதுடன்சேவித்தே. (௧௭)

---

* 'வசியஞ்சிகிற்பவன்' என்றும், 'வசியஞ்செய்கிற்பவன்' என்றும் பிரதிபேதம்.

† 'சனிப்பரால்' என்று பிரதிபேதம்.

பாலின்மாதியாடிப்பரம்பர
னாலுங்கூத்துடையம்பலஞ்சேவித்தே
சேலுலாம்பொன்னித்தீர்த்தம்படிந்துராய்
ஞாலம்போற்றுநல்லூரைவந்தெய்தினான். (௧௮)

ஆதியாதிரைநாளஃதாதலால்
வேதவேதியர்மிக்கொருங்கெய்தினா
ரோதமின்றியற்றுந்திறமியாவையும்
போதமொன்றிலான்றானும்புரிந்தரோ. (௧௯)

கோயிலெய்திக்குடந்தம்பட்டெம்பிரான
மேயசன்னிதிவேட்டவன்சார்ந்துபுக்
காயமூலபிலத்துடனண்ணலை
நேயமுற்றவர்போலின்றுநோக்கினான். (௨0)

நோக்கியங்கணுவலரும்வைபவம்
பாக்கியம்மிதுவென்றவன்பார்த்தொரு
தாக்குங்கன்னறணைப்பிலனாகிநின்
றோக்கமுத்தொடவ்வெல்லையினீங்கினான். (௨௧)

நீங்கிமூன்றுதிவசமந்நீணகர்ப்
பாங்கில்வைகியப்பட்டிமவேடத்தான்
றாங்குதன்னுடறான்விடுத்தான்விட
வாங்குநண்ணியவன்செவியூடரோ. (௨௨)

நாதன்றிவ்வியமந்திரகன்குற
வோதல்செய்தனனோதலுமற்றவ
னேதநீங்கும்விமானம்வந்தெய்தலு
மீதிவர்ந்துயர்வெள்ளிவெற்பெய்தினான். (௨௩)

இயக்கர்கின்னரர்யாழிசைவல்லவர்
மயக்கமின்றியவானவர்தானவர்
புயற்குநேர்பவன்புண்டரிகத்தினோன்
கயற்கண்மாதுமையாவருங்காணவே. (௨௪)

ஐயனெய்தியவன்னவன்சென்னிமேற்
செய்யகைத்தலஞ்சேர்த்திக்கருணைபூத்
துய்யுமாறுகணுதிபனையுறு
கையொணாதபதவியுநல்கியே. (௨௫)

கன்னயங்கள்பலவுநவிற்றுபு
பின்னுஞானதரிசியென்றேபெய
ரன்னவற்குக்கொடுத்தனனங்கது
தன்னைநோக்கியுமையவள்சாற்றுவாள். (௨௬)

இத்திறம்பெற்றதின்னவன்செய்திடு
மத்திறம்பகர்கென்னலுமண்ணரான்
முத்தமென்முலைமொய்குழல்கேட்டியாற்
பத்தருள்ளியன்போலெவர்பாரின்மேல். (௨௭)

உற்றவாதிரைநாளினுவந்தநா
முற்றவாழ்முடிவினல்லூர்வயின்
மற்றிரேனெய்திமாலயன்காணொணாப்
பெற்றிசேரெமைமூலபிலத்தொடு. (௨௮)

கண்டுசேவித்துக்காயமுமவ்வுழி
விண்டுநீக்கினன்வேறெவன்வேண்டுமால்
வண்டுலாய்குழலாயந்தவாய்மையா
லண்டர்போற்றவிவ்வாறளித்தாமரோ. (௨௯)

மூர்க்கரேனுநம்மூலபிலத்தொடு
கூர்க்குஞ்சோதிகுலவியலிங்கத்தைச்
சேர்க்குநல்வளச்செல்வநல்லூரெய்திப்
பார்க்கிலின்னபரிசளிப்போமென்றான். (௩0)

அனையதன்மையையாமேயறிகுவம்
வனைகருங்குழன்மாதுகேண்மோவென
முனையவன்கூறலுமுற்றிழைநங்கையுந்
தனையொப்பாமவன்றண்ணளிவாழ்த்தினாள். (௩௧)

கற்பமொன்றுகயிலையினற்றவன்
பொற்பவீற்றிருந்தப்புறம்பொய்யிலாத்
தற்பதப்பொருளாயவன்றண்மலர்
நற்பதத்தினைநண்ணியுற்றனரோ. (௩௨)

தெரித்தவிக்கதைசெப்புநர்கேட்குநர்
பரித்தபாதகம்யாவையும்பாழ்பட
முரித்துமூவுலகாண்டுமுறைமையா
லருத்திகூர்சிவரூபமடைவரால். (௩௩)

கிராதமோட்சசருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௭௩.

பதினாறாவது

# தருமசேனச்சருக்கம்.

வேறு.

அரியமாதவரண்ணல்சேவடி
தருமசேனன்முன்றாழ்ந்துவாழ்த்தியே
புரவிமாமகம்புதல்வரோடுறும்
பரிசுசொல்லெனச்சூதன்பன்னுவான். (௧)

விரைசெறித்தசந்தனமும்வேழமுங்
கரைதிரைத்தெறிகௌதமிக்கரைப்
*புரையிலாதமர்புரத்தில்வாழர
சரைசர்தம்பிரானவனிகாவலன். (௨)

செய்யகோலினன்சிறந்தவெண்குடை
வையமெங்கணுங்கவித்தமாண்பினன்
பெய்யுமாரியேயனையபெற்றிசால்
கையினன்சிலைக்காமனேயனன். (௩)

அறத்தின்வேலியாயருளினூழியாய்
மறத்தின்கூற்றமாய்வாய்மைக்கெல்லையாய்த்
திறத்தின்வெள்ளிலைச்செய்யவேலனாய்ப்
பொறைக்குப்பூமியாய்ப்பொலியும்பொற்பினன். (௪)

எண்ணலார்முடியிடறுந்தாளினன்
பண்ணமாலைசூழ்வாகைவாளினா
னண்ணல்யானைபோலமர்செய்தோளினன்
றண்ணந்தாரினன்றருமசேனனே. (௫)

வார்கடற்புவிமுற்றுமற்றவ
னேருமாழியொன்றுருட்டியாளுநா
ளேருங்கோதமுனீத்தமாதவ
னாரதப்பெயர்முனியண்ணினன். (௬)

வந்தயாழ்முனிமகிழுமாண்பினற்
சிந்தையன்பொடுஞ்சென்றுதாழ்ந்தவன்
முந்துமர்க்கியமுதலயாவையுந்
தநதொராசனந்தழையவேற்றினன். (௭)

---

* 'புரையிலாதமாபுரத்தில்' என்று பிரதிபேதம்.

இன்றிவையான்செய்மாதவ
மொன்றுசாலுமோவூழியூழியுந்
துன்றுமென்குலத்தொல்லையோரெலா
நின்றுசெய்தவநிலைமையாகுமால். (௮)

இனையநன்னயக்கிளவியெண்ணில
கலைக்கருங்கழற்காவன்மன்னவ
னனைத்துளிததெனநவிலநாரத
னினைவியாதெனுநீசொல்கென்றனன். (௯)

வீணைமாமுனிதாளைமீளவும்
யாணர்வைப்பினனிறைஞ்சியேத்தியே
கோணையாம்பரிவேள்விகோலுகே
னாணைநீயதற்கருள்வேண்டுமால். (௧௦)

வேந்தனித்திறங்கூறவீணைகை
யேந்துமாதவனிஃதியம்பினன்
மாந்தர்நாதநின்மைந்தரான்மகம்
போந்தவாமுடித்திடுதிபோலுமால். (௧௧)

என்னநாரதன்சொல்லுமெல்லையின்
மன்னர்மன்னவன்மதிமயங்கியே
பொன்னலங்கொளும்புதல்வரின்மையேற்
கன்னமாமகமாற்றல்யாண்டென்றான். (௧௨)

மைந்தநீபெறும்வாய்மைசொல்லுகேஞ்
சிந்தைநீங்கெனத்தெருட்டிக்கூறிமற்
றந்தமில்புகழரசரேறனாற்
கெந்தைபின்னருமிவையியம்புவான். (௧௩)

சிந்துநீள்கதிர்தீர்ந்தவானமு
மிந்துமண்டிலமிழந்தமீனமு
முந்துசீற்றத்தோனுற்றஞானமு
மைந்தரில்லவர்மனையுமானுமே. (௧௪)

பொற்றதாமரைதுறந்தபொய்கையுங்
கற்றுளோரிலாக்கழகமும்பொரும்
வெற்றியொன்றிலாவேலும்பாலரைப்
பெற்றுறாதவர்வீடுமொக்குமே. (௧௫)

மிக்கநீரிலாவெறியபூமியுந்
தொக்கபோதிலாச்சோலைச்சூழலு
மிக்குநெல்விளைவிகந்தசெய்களு
மக்களையிலாமனையுமாளுமே. (௧௬)

அங்கிவேட்டுணவந்தணாளரு
மங்கலத்திருவாங்குமாதருந்
தங்குநீதியிற்றவறும்வேந்தருஞ்
செங்கைச்சேயுறார்திருவுமாளுமே. (௧௭)

ஆதலான்மகவடைந்துறுதவர்
பூதலத்திடைப்புன்கணாளரே
யேதநீங்கநின்னெண்ணமுற்றுமா
றோதுவாமெனவுறுதியோதுவான். (௧௮)

பொன்னிமாநதிப்பொருதென்கூலத்திற்
றுன்னுசோதிகூர்சுந்தராசல
மன்னுமாங்கதன்மருங்கிற்றூயன
பன்னுதீர்த்தங்கள்பலவுமுண்டரோ. (௧௯)

ஐந்துவண்ணமாமரியலிங்கமொன்
றிந்தமாநிலமேத்தவைகுமான்
முந்துலிங்கத்தின்மூலவான்பிலம்
பந்திபந்தியாய்பாங்கிற்றோன்றுமால். (உ0)

அந்தமூலவான்பிலத்தையன்பினு
லெந்தைதன்னொடுமிறைஞ்சியேத்துவோர்
முந்துசித்திகண்முறையினெய்தியே
யந்தமின்றியபதமுஞ்சேர்வரால். (உ௧)

சந்தசாகரந்தனக்குப்பாவகன்
வித்தகத்திசையதன்கண்வெய்யவ
னுத்தமத்தடமொன்றுண்டாலதின்
மத்தயானையாய்மனைவிதன்னொடும். (உஉ)

பூசநாள்வரும்பூரணைதனி
னேசமாகநீகெறியின்மூழ்கியே
* மாசையீந்துராய்மத்தியானத்திற்
காசில்வேதபுட்கரிணியாடியே. (உ௩)

* 'மாசவித்துராய்' என்று பிரதிபேதம்.

கன்னியுந் தடத்தோடுங்காதலான்
மன்னுங்கோயின்மூவலஞ்செய்துட்புகுந்
தன்னைமாதுமையணங்கொடையனைப்
பொன்னின்மாமலர்பொழிந்துபோற்றியே. (௨௪)

மூலவான்பிலமதனைமூந்துறக்
கோலக்கண்மலர்குளிரநோக்கியே
யேலவார்குழலிறைவிதன்னைவை ∵
வேலின்மன்னவமீண்டும்போற்றியே. (௨௫)

பிறைமுடிந்தபெம்மானுக்கன்பினாற்
றிறல்கொள்வேந்தசிறப்புஞ்செய்தியே
லிறைவனுண்மகிழ்ந்திலவச்செய்யவாய்
முறையின்மக்கண்மூவரையளிப்பனால். (௨௬)

அந்தமைந்தராலசுவமேதமுஞ்
சிந்தையன்புறச்செய்துமுற்றுவாய்
மைந்தனேயெனவகுத்துமாதவன்
புந்தியார்தரப்புசித்துப்போயினான். (௨௭)

வீணைமாமுனிவிடுத்துப்போயபின்
கோணைமாகளிற்றுழுவன்கோற்றொடி
மாணலந்தருமனைவிதன்னொடும்
பூணுநூற்புரோகிதரும்போதவே. (௨௮)

சோணைமாநதிமுதலதாநதி
யாணர்வண்புனலெவையுமாடிப்போய்த்
தாணுவங்கியஞ்சையமேத்துபு
கோணிலாமுதுகுன்றம்போற்றியே. (௨௯)

தடங்கொள்காவிரிதன்னிலாடிவண்
குடந்தைமாநகர்கும்பிட்டேத்தியே
மடந்தைபங்கினன்வாழுஞ்சுந்தரத்
தடங்கொள்வெற்பணித்தாகச்சார்ந்தனன். (௩0)

சார்ந்துமன்னவன்றலையினாற்பணிந்
தார்ந்தசிந்தையினன்புவட்டெழுச்
சேர்ந்துசூரியதீர்த்தமூழ்கினான்
வார்ந்தகூந்தலின்மனைவியோடுமே. (௩௧)

∵ 'இறைவிதன்னையும்' என்று பிரதிபேதம்.

அந்தணாளருக்களவிலாநிதி
சிந்தியத்தடந்தீர்த்தப்பாங்கரிற்
பந்தரோடுநீள்பன்னசாலையுந்
தந்துதீயையுந்தாபித்தானரோ. (௯௨)

பின்னையன்னவன்பிரமதீர்த்தத்திற்
பன்னிதன்னொடும்பனவர்தம்மொடுந்
துன்னியாடுபுதூயவன்சொலு
மன்னவாறெலாமடைவினாற்றினான். (௯௩)

அரசனாற்றலுமரவுந்திங்களும்
விரவிச்சூடியவேணிநாயகன்
கருணைகூர்ந்துமுக்காதன்மக்களை
யொருவயிற்றொருங்குயிர்ப்பநல்கினான். (௯௪)

அண்ணல்பாலனையாளன்புமீக்கொள
வெண்மெணப்நல்விராவினிதியற்றுபு
நண்ணுமேனைபசடங்குநன்குறப்
பண்ணிநம்பனைப்பணிந்துபோற்றியே. (௯௫)

உறுதியக்கினிவண்ணனாழிய
மிறுதியினறியவேமவண்ணனோர்
மறுவில்ரத்தினவண்ணனென்றுபேர்
சிறுவர்மூவர்க்குஞ்செப்பினானரோ. (௯௬)

செப்பிவேந்தனுந்தெரிவைபங்கினற்
கொப்பிலாதனசிறப்புமாற்றியே
யிப்பெருமபுவியினிதினேத்துமா
றப்பதிக்கணுற்றமர்ந்திட்டானரோ. (௯௭)

அரசன்சில்பகல்செல்லவன்பினாற்
புரவிமாமகம்புதல்வர்தம்மொடும்
விரைவினாற்றுவான்வேதவேதியர்க்
குரைசெய்தன்னவரோடுமுற்றினான். (௯௮)

சுரபிகோடிகள்சுருதிவாணருக்
காரனல்கியேயமலர்கன்பினாற்
பரவுபன்னிருபதிகொடுத்தொளி
விரவுபொற்பணிவிழைவினுய்த்தரோ. (௯௯)

முத்தமாலையும்முழுத்தசோதிய
வித்துருமத்தால்விளைத்தமாலையும்
பத்திபத்திசேர்பதுமராகத்தின்
கொத்துமாலையுங்கொடுத்துக்காவலன். (௫0)

பொன்னந்தானையும்பூம்பட்டாடையு
மின்னுநித்திலம்விளிம்புபோக்கிய
வன்னச்சேலையும்வகைவகைபெறப்
பன்னுசித்திரப்படமுமீந்தரோ. (௫௧)

செம்பொன்வள்ளமுஞ்சிறந்தவெள்ளியி
னம்பொன்வள்ளமுமனையவேனவும்
பைம்பொன்வாகனம்பலவும்பாங்கினு
லும்பரும்பருக்குதவிப்பார்த்திபன். (௫௨)

அண்ணலார்தமக்கன்புமீக்கொள
வெண்ணிலாப்பணியின்னவாறுசெய்
துண்ணயந்துநல்விழவுமுய்த்தவன்
விண்ணவற்குத்தென்மேற்குத்திக்கினில். (௫௩)

செருவவாலிமூன்றிடையிற்றிய்விய
வுருவிலிங்கமாங்கொன்றுதாபித்துத்
தருமதீர்த்தமென்றொருதடாகமுந்
சுருதிவாய்மையாற்றொட்டிட்டானரோ. (௫௪)

மகரத்திங்களில்வாய்ந்தபூசநாட்
பகருமற்றவப்படிந்தமேலவர்
புகரனைத்தையும்போக்கிப்பொன்றொணு
நிகரின்மேற்கதிநெறியினெய்துவார். (௫௫)

மிக்கசெம்பொனும்வீறுவெண்பொனு
மக்குளப்படிந்தறிஞராக்கீந்துளோர்
தொக்கவங்கிளிட்டோமமேதகு
தக்கவான்பயன்றனையுமெய்துவார். (௫௬)

இடபத்திங்களினெய்துபூரணை
தடமதிற்படிந்தாங்குத்தாபித்த
கடவுளைவலங்கணிவிற்சூழ்வந்தோர்
புடவிசூழ்பயன்பொருந்தவாழ்வரால். (௫௭)

கேசமுற்றியாணினைந்துபற்பல
பேசலென்கொலாம்பின்னுகன்னுறை
மாசில்சுந்தரசயிலம்வாரிசூழ்
காசினிக்குள்வண்கயிலையாகுமால். (௪அ)

விளம்புமிக்கதைபகருமேலவ,
ருளங்கனிந்துகேட்டுருகுந்தூயவர்
வளங்கொள்பூதலமரபினுண்டுபின்
களங்கனிக்கனன்கயிலைசேர்வரால். (௪௯)

தர்மசேனச்சருக்கம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-அ௧௧.

பதினேழாவது

## தீர்க்கதுண்டச் சருக்கம்.

வேறு.

அலகில்கேள்வியருந்தவரன்பினு
லுலகமேந்துமுறுதவச்சூதனைத்
திலகமாகியதீர்க்கதுண்டன்செயற்
குலவுமாக்கதைகூறெனக்கூறுவான். (௧)

அளக்கருண்டவருந்தவன்கற்பினிற்
றுளக்கமின்றியதூமொழிதன்னுடன்
களக்கனிக்களத்தானுக்கீசானத்தின்
விளக்கமெய்தியவேதியர்சூழவே. (௨)

பன்னசாலையமைத்துப்பரிவினு
லன்னநல்லூரமர்ந்தனனந்தநாட்
டின்னுதிங்கள்சுடரவரேடெய்தி
மன்னுவைகலின்வாயதவான்பலி. (௩)

இடுதலேக்கிருந்தொர்வாயதஞ்
செடிகொண்மென்சிறைத்தீர்க்கதுண்டன்னெனப்
படியிற்பேர்பெறும்பான்மையதப்பலி
கடிதின்வவ்விக்ககனத்தெழுந்ததால். (௪)

எழுந்துதென்றிசையேயேகலு
மழுந்தவவ்வியவப்பலிதன்னையோர்
செழுஞ்சிறைக்கொடிசென்றுதொடர்ந்திடப்
புழுங்கிவீழ்த்திப்புறம்புக்கதாமரோ. (௫)

வீழுமப்பலிவீதியினெய்திய
தாழுமூப்பிற்றளர்ந்தவொராதுலன்
கீழிலாதகடிஞைக்கலத்தினி
லூழின்வீழ்ந்ததுவீழவுவந்தவன். (௬)

எந்தைநல்லருளாலிஃதெய்திய
துய்ந்தனம்மினியென்னவொருங்குட
னந்தவன்னத்தையாழ்புனலோடளாய்ச்
சிந்துருதருந்திப்பசிதீர்ந்தனன். (௭)

பலியைவீழ்த்திப்பறந்தப்புறஞ்செலு
மொலிசெய்காகத்தையுற்றவொர்வேட்டுவன்
வலிதினெய்தனனெய்தலுமற்றது
மெலியமண்ணிடைவீழ்ந்ததுவாமரோ. (௮)

வெள்ளையானைவிதிமுறைதாபித்த
தெள்ளுசோதிச்சிவலிங்கமேற்றிசைத்
துள்ளியாருயிர்சோர்ந்ததுசோர்தலு
மெள்ளொணாதவிமானம்வந்தெய்திற்றால். (௯)

மூந்தநீள்வடந்தூக்கிமுறைமையால்
வித்துரும்மவியன்காணிறுவிய
தத்துசோதியத்தாவில்விமானத்தின்
வித்தகத்திமையோர்புடைமேவவே. (௧௦)

வீசுசாமரைவிண்ணகமாதரார்
நேசமாகநெறியினிரட்டினார்
வாசமாமலர்தூவிமணிமுடித்
தேசுலாமிமையோர்திசைபோற்றவே. (௧௧)

தீர்க்கதுண்டன்சிறந்தமெய்த்தேவனாய்
மேற்கொள்சோதிவிமானத்தின்மீதிவர்ந்
தேற்கும்விண்ணிருங்கயிலைப்புறம்
பார்க்கணங்கொணர்ந்தேகப்படர்ந்ததே. (௧௨)

படர்ந்துசென்றுபரன்பதம்போற்றுபு
திடங்கொள்காகஞ்சிறந்தயனிற்றனு
*நடங்கொணாதனயப்புடனோக்கியே
தொடர்ந்தகாதலினின்னணஞ்சொல்கின்றான். (கங)

பொன்னுலாகம்பொருவினல்லூரினீ
யன்னதானமியற்றுமமைதியான்
மன்னுகின்றகணங்கட்குமன்னனாய்த்
துன்னிவாழ்கெனச்சொற்றனன்சொற்றலும். (கச)

அம்பொற்சேவடிபோற்றியவணின்ற
வும்பராரையவோதுகவத்திற
மிம்பர்காட்டிவிதுசெய்தவாறென
நம்பனோக்கிநகைத்ததுசொல்லுவான். (கரு)

பலிகவர்ந்துபடரவொர்வாயத
மெலிவுசெய்தலும்வீழ்ந்தவியன்பலி
கலியினானொர்கடிஞைக்கலத்தினி
னலியுமாறின்றிநன்குறவுற்றதே. (கசு)

உற்றபிண்டத்தையுண்டவன்றீப்பசி
முற்றுநீங்குமுறைமையினாலிந்தப்
பெற்றியெய்தியதாலெனப்பினாகன்
சொற்றலோடுந்தொழுதுவியந்தனர். (கஎ)

ஆதலாற்பரனல்லூரதன்கயிற்
காதலாலன்னங்காண்வரவீந்துளோர்
கோதிலாப்பயனைக்குறித்துன்னியா
னோதுமாறெளிதோவெனவோதுவான். (கஅ)

தந்திபோற்றியதானுவின்சன்னிதி
முந்துறக்கொடிவீழ்ந்தமுறைமையா
லந்தத்தானமகன்றடமாகுபு
சிந்துசூழ்புவிபோற்றச்சிறந்ததே. (ககூ)

தேவனாய்க்கொடிசென்றதிறத்தினான்
மேவுமத்தடமேதினிமேலென்று
மோவில்கேள்வியுறுதவத்தந்தணீர்
தாவிறேவதீர்த்தமெனச்சாற்றுவார். (உ0)

* 'அடங்கொணாதவசிப்புடனோக்கியே' என்று பிரதிபேதம்.

ஆண்டோறுமதிலெய்தியன்பிறைச்
சேண்டலம்புகழ்தீர்க்கதுண்டன்படிக்
தீண்டுதர்ப்பணமாதியெல்லைவகளுங்
காண்டகுந்திறஞ்செய்துகளிந்தரோ. (உக)

ஐயனோங்கெழுத்தோதியவணமர்ந்
துய்யும்வண்ணமுவப்புடன்போற்றியே
செய்யசோதிவிமானத்துச்சென்றுமான்
கையன்வாழுங்கயிலையைச்சேர்வனால். (உஉ)

மருவுறையமாவாசையினத்தடத்
திருதுமன்பினுவப்புடனுடியே
பொருவிலாதன்னதானம்புரிந்துளோர்
தெரிவைபாகன்கயிலையைச்சேர்வரால். (உரு)

சொற்றவைகலிற்றூய்தடமாடுபு
கற்றையேவேணிக்கசேசுரன்சன்னிதிக்
குற்றுத்தீபவுகளங்களேற்றினோர்
மற்றவானவன்வான்பதஞ்சேர்வரால். (உச)

இப்பெருங்கதைகேட்குமியல்பினோர்
மெசப்புகின்றதிறனுடைமேலவை
ரொப்பில்போகமுலப்பிலவெய்திப்பி
னப்புலாஞ்சடையானடிசேர்வரால். (உரு)

தீர்க்கதுண்டச்சருக்கம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-அகசு.

## பதினெட்டாவது

## எக்கியகுத்தச்சருக்கம்.

### வேறு.

சொற்றவத்தீர்க்கதுண்டன்றேமிலாக்காதைகேட்டோர்
நற்றவவணிகனுய்ந்தநாடருஞ்சரிதையிப்பா
லுற்றுநீகூறுகென்னவுறுதவர்வினவலோடுந்
தெற்றெனச்சூதனுய்ந்துசிந்தையன்பொழுகச்சொல்வான். (க)

சுந்தரகிரிக்கீசானத்தாயநற்றிசையினங்கண்
கந்தமாபுரமதென்னக்காவிரிவடக்கதாக
வந்தமில்பதியொன்றுண்டிங்குமப்பதிமேன்மைதன்னை
யெந்தையேயுரைப்பதல்லால்யாவரேயுரைக்கவல்லார். (உ)

அந்தநகைநகரினங்கணவுணரையடர்ந்தவேலோற்
குத்தரதிசையிற்கூபமொன்றுளததனிலாடிற்
குத்திரமெவையுநீங்குங்குமரகண்டமும்போமாங்கே
சத்தியவிரதன்சித்திசார்ந்ததோர்தடமுமுண்டால். (ங)

பாவகன்றிசையிலோர்வண்பலாசின்கீழ்ப் *பிரமதீர்த்த
மேவரவ்வளங்குமந்தமேதகுபதியின்வாழ்வோன்
றூவிலாவணிகர்கோமான்றனபதியனையசெல்வ
னேவுமாறெக்யருந்தனெனுமபிதானமுற்றோன். (ச)

பரமனுதிரைநன்னுளிற்பண்டங்களெவையுங்கொண்டு
மருவியநல்லூரெய்திவாணிகஞ்செய்வானெண்ணிப்
பிரமதீர்த்தத்தின்கீழ்பாற்பிறங்குமப்பண்டமெல்லா
மொருமையிலுய்த்துக்காவலோம்பினனுவகைபூப்ப. (ரு)

விடர்பலரோடுங்கூடிவினோதங்களெவையுஞ்செய்து
மடநடைமடக்கைநல்லார்வனமுலைப்போகம்வேண்டி
நடனமூர்த்திக்குமுன்செய்நாடகம்பார்க்கச்செல்வான்
றடவரையுயிர்த்தபாவைசன்னிதிசாரவந்தான். (சு)

வந்தவனுங்குவிஞ்சைமாதவர்பலருங்கூடிச்
சிந்தனைசெய்துகூறுந்தீர்க்கதுண்டன்புராணம்
புந்தியின்மகிழ்ச்சிகூறப்பொருள்சிலவினவியன்றே
னந்தமிலந்தனுளரடிதொழுதகன்றுமீண்டான். (எ)

படங்குடிலதனுட்புக்குப்பண்டங்கள்பலவுநோக்கி
யிடம்பெறுகலத்தினேந்துமினியபாலடிசிலுண்ண
வடைந்தனனயிலுங்காலையன்னமன்னவன்கண்டத்தின்
மிடைந்திடவுடலஞ்சோர்ந்துவீந்தனனகணத்துமாதோ. (அ)

வீதலுஞ்சிவகணங்கள்விமானத்தினவனையேற்றிப்
பூதலத்தெவரும்போற்றப்பொன்னகரிமையோர்சூழ
நாதன்வாழ்கயிலைவெற்பினண்ணினர்நண்ணக்கால
தூதருமதனைநோக்கித்தொழுதுதம்பினறக்குச்சொற்றார். (கூ)

* 'பரமதீர்த்தம்' என்று பிரதிபேதம்.

சொற்றலுங்கூற்றுமஞ்சிந்துணுக்கமுற்றமலனுற்றும்
பெற்றியாரறிவரென்றுப்பேசித்தன்னகரமுற்றான்
மற்றவன்றன்னையீசன்வருகெனவருளித்தன்போ
லுற்றதோருருவமன்னோற்குதவினனுவகைபூத்தான். (௩0)

பண்டங்கள்பகரவந்தோன்பண்ணவன்சரிதைகேட்டுக்
கொண்டனன்வடிவமம்மாகுழகன்போலென்றுசொன்னாற்
றொண்டர்தஞ்செயலுநல்லூர்த்துளக்கின்மேன்மையுமெங்கோமான்
றண்டலிலருளும்யாரேசாற்றுதல்புரியவல்லார். (கக)

ஆதலாலினையகாதையன்புடன்வினவுநல்லோ
ரோதநீர்க்கடலந்தானையுலகெலாமினிதிராண்டு
வேதனுமுகுந்தன்றானும்விண்ணவரெவரும்போற்ற*
நாதனார்தாளினீழனண்ணிவீற்றிருப்பர்திண்ணம். (கஉ)

எக்கியகுத்தச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—அ௯அ.

பத்தோன்பதாவது

## கோவிதாரத்துவசச்சருக்கம்.

வேறு.

முண்டகத்தவிசின்விரிஞ்சனையனையமூதுணர்மாதவரெவரு
மெண்டிசைவளாகமுழுவதும்புரப்போனியற்றமிழ்நாட்டினுக்கிறைவன்
றண்டமிழ்முனிவன்வைதவச்சாபந்தணந்தமைசாற்றுகவெனலுந்
துண்டமாமதியமுடித்தவன்பாதந்தொழுதுசூதனுந்தொகுத்துரைப்பான்

சீலமாதவந்தானந்தழனுப்பட்சேர்ந்துசெய்கொள்கைபெற்றுள்ளோன்
காலவனென்னும்பெயரினான்செழுநீர்க்கவுதமிக்கரையினிலுறைவோ
னேலவார்கூந்தன்மனையொடுமேழ்மைவியில்லறமியற்றுமக்காலை
ஞாலமுற்றேகிவருந்தெய்வத்தியாகாமனோர்முனிவனங்குற்றான். (உ)

உற்றமாமுனியையெதிர்ந்துமற்றன்னோனுவப்பினாற்பாத்தியமுதல
பெற்றியினுதவியாசனத்திருத்திப்பிறங்குமாதித்தியம்புரிந்து
கற்றவரிருவரளவளாயுறையுங்காலையில்யாங்குச்சென்றுற்றாய் [ல்,(௩)
தெற்றெனப்பகர்தியென்றவனுரைப்பத்திகழ்தெய்வத்துதியுஞ்செப்புவினு

* 'போற்று' என்று பிரதிபேதம்.

வடாதுகேதாரந்தொடங்கியெம்பெருமான்வாழுமெய்த்தலமுமத்தலத்திற்
றடாகமும்நதியுமோடையுமுதலாதண்புனற்றீர்த்தங்களேவையும்
விடாதுசென்றாடிமீண்டனனென்னமேதகுகாலவனோக்கிக்
கடாவுதல்புரிநதானப்பெருங்காதைகட்டுரைசெய்கெனமாதோ (௪)

போற்றுகேதாரத்திருமலையதனிற்புட்கரங்காசிமாநகரி
னேற்றுயர்கொடியோனருளெனவிளங்குமியன்மணிகன்னிகைதீர்த்த
நாற்றிசைபகரும் ப்ரயாகையினதன்கணளிர்புனற்றிரிவேணிதீர்த்த
மாற்றல்சால்கயையிற்றென்புலவாணருப்புனற்றீர்த்தமதாகுமால். (௫)

வயநல்ம்பத்தினவன்னிநற்றீர்த்தமணிகூடமென்னுமத்தலத்தி
னயங்கெழுதிரிபுட்கரச்செழுந்தீர்த்தநாடசத்தாரணியத்திற்
பயங்கெழுபிரமதீர்த்தம்பொன்முகரிபரவுகாளத்திமால்வரையின்
வியர்திடவளங்கூர்ப்ரபாசமற்றதன்கண்மேதகுவருணமெய்த்தீர்த்தம். ()

மாளவமதனிற்சூரியதீர்த்தம்வடாரணியத்தலமதன்கட்
கோளுலாங்கதிர்வேற்குகனெடுந்தீர்த்தங்குலவுசீர்க்காஞ்சிமாநகரிற்
றுளதாமரைகளேடவிழ்த்தலருஞ்சருவதீர்த்தஞ்சிதம்பரத்திற்
பூவேணியன்றனருளெனப்பொலியும்புகழ்ச்சிவகங்கையாந்தீர்த்தம். ()

பரவுவெண்காட்டின்முக்குளதீர்த்தம்பரமன்சாயாவனமதன்க
ணுரவுநீர்ப்பொன்னிதடங்கடலதனுளுற்றிடுஞ்சங்கமதீர்த்தங்
கருவினையகற்றுமிடைமருததன்கட்காருண்யாமிர்தநற்றீர்த்தந்
தரைபுகழ்கும்பகோணமற்றதன்கட்டண்புனன்மாமகதீர்த்தம். (௮)

மதுரையிற்பொற்றாமரைராமேச்சரத்தின்மறிகடற்பொருதனுக்கோடி
முதுதமிழ்மலயத்தடவரையதன்கண்முற்றெறிதரங்கநீர்ப்பொருநை
புதுமலர்ச்சோலையவ்வரைப்பாங்கிற்பொழிபுனலத்திமாதீர்த்தங்
கதிர்விடுஞ்சுடர்வேற்செழியனன்னாட்டிற்கரைபொருவைகைமாநதியே. ()

வஞ்சுளேசுரத்தின்மேற்றிசையதனில்வயங்கொளிக்கர்க்கநாமமதி
னெஞ்சலில்புகழ்கூரப்புரமதன்கணீர்ம்புனர்க்கர்க்கவான்குண்ட
மஞ்சனமிடற்றுனருளிஞனினைந்தேனுழ்நீர்காவிரிநாட்டிற்
பிஞ்சுமாமதிதோய்சுந்தராசலத்திற்பிரமநற்றீர்த்தமொன்றுளதால். (௧0)

அப்பெருந்தீர்த்தத்தங்கியந்திசையினலர்கதிர்த்தீர்த்தமொன்றுளதா
லிப்பெரும்புவனமுழுவதும்போற்றுமியல்பினதத்தடந்தீரத்
தொப்பருமுவப்பான்மூன்றுநாள்வதிந்தேனுற்றதோரதிசயங்கண்டேன்
கைப்பறுமனத்தாயன்னதுபுகல்வேன்காதலீர்நீர்கேண்மதியென்றான் (௧௧)

---

'பிராகையின்' என்று பிரதிபேதம்.

தாளதாமரையின் *வனமுலைத்தெற்றித்தடஞ்சினைவருக்கைமேற்றுவி
நாளிகேரத்தின்முப்புடைக்குடக்காய்நளிர்புனல்வீழ்ந்துகப்புடைத்து
வாளைபாய்ந்துழக்கும்வைகையந்துறைவன்வளங்கெழுவிசாலையந்நகரான்
கோளுலாமாளியனையதிண்டிறலான்கோவிதாரதவசனென்போன். (கஉ)

வளவர்தம்பெருமான்றன்னொடும்பொருதுவாகைகொண்டவன்மணித்
களபவாசனைதோய்தாதகிமாலைகவர்ந்துதன்கயனெடுங்கொடியி[தோளிற்
னுளமகிழ்வெய்தவெழுதிமேலுயர்த்தேயொன்னலர்க்கடந்துவாழ்நாளிற்
றளவவாணகையாள்பாகனேயனையதமிழ்முனியவன்மருங்குற்றான். (கங)

மேலைநாட்புரிந்ததீவினையுருப்பமெய்த்தவன்றனக்குபசார
மாலைவேலுழவனிழைத்திலனாகிமதித்திடாதிருத்தலைநோக்கி
நீலமாக்கடலையருந்தியோன்றன்பானின்றமானுக்கனைநோக்கி
யாலமேயனையசெயலுடையிவனையழன்றுநீவைதியென்றறைந்தான். (கச)

கும்பமாமுனிவனுணையாலவனுங்கொதித்தடனெதிர்ந்துவெய்துயிர்த்து
வெம்பிநின்னுடலமுழுவதுங்குட்டவியாதியிற்குளித்தியென்றுரைத்தா
னிம்பமாலிகையோனடுக்குற்றுநின்றனனிற்றலும்விரைவி
னிம்பரார்நகைத்துக்கண்புதைத்தகலவெய்தியதப்பிணிமாதோ. (கரு)

தேசுடைப்பசும்பொனொளிதவிர்ந்தன்றோன்றிவ்வியவுருவமுங்கருகி
மாசுடைத்தொழுநோய்வலியினாலழுங்கிமனந்தளர்ந்திரங்கிமாழாந்து
நேசமுந்திறலுமுலகெலாஞ்செலுத்துநிகரில்செங்கோலும்வெண்குடையு
நாசமாயினவாற்சிறுவருமின்றுனன்றுநன்றாழ்வினையென்றான். (கசு)

விரிதலைப்பசும்பொனுலகொருங்காளும்வேந்தனும்வேற்றுருவடைந்தான்
குரைகடன்முழுதாணிருபரிலொருவன்கொலைத்தொழிற்புலையனையானு
வரையினையெடுத்தவிலங்கையரிறையுமவுலிபத்திழந்துமாய்ந்தனனாற்[ன்
பெரியவர்தம்மையவமதித்தொழுகும்பேதைய†ருயர்தன்மற்றுளதோ. ()

சிறியவர்பிழைத்தல்பொறுத்திடல்பெரியோர்செய்தியென்பதுதிண்ணமா
லுறுதவனவனைக்குறுகிநாம்வணங்கியுய்வகைபுரிதியென்றிரப்பின் [மா
மறைவலானவனேவீங்குமிப்பிணிக்குமாற்றுமின்றுரைப்பனென்றடுத்து
நறுமலர்தூவியடிபணிந்திடலுநற்றவன்றண்ணளிசுரந்தே. (கஅ)

பொன்னிமாநதிக்குத்தென்கரையதன்கட்பொருந்தியசுந்தராசலத்திற்
றுன்னியசோதிக்கதிரவன்றீர்த்தந்துலங்கியதத்தடமதனின்
மன்னிநீமூழ்கியிறைவனைப்போற்றின்மாசெலாந்தவிர்ந்துறுநோயு
மின்னைவிட்டகலுமேனியும்பசும்பொனிறமுடன்போல்வருமன்றே. (க௯)

---

* 'வனமலைதமெத்தற்றி' என்று பிரதிபேதம்.

† 'உய்தல்' என்று பிரதிபேதம்.

என்றவனியம்பவரசனும்வணங்கியேந்தலைவிடைகொண்டவ்வாறு
சென்றனனிரவிதீர்த்தநீர்ப்படிந்துசிற்பரனருளினைப்போற்றி
நின்றனனிற்பநிருமலனருளினின்னுடைமாசெலாந்தவிர்த்தேய
பொன்றுதலிகந்தகாஞ்சனமென்னப்பொலிகநின்னுடலெனப்புகன்றான்.

தம்பிரான்புகலுமக்கணமன்னோன் சார்ந்தவன்பிணியெலாநீங்கி
யும்பரார்போற்றுமுருவமாங்கெய்தியுய்ந்தனனத்தலம்போல
விம்பர்மீதுளதோவிரவிபுட்கரிணியென்னவோர்தீர்த்தமீவறுளதோ
நம்பனார்கருணையளவையாருரைப்பார்நான்முகற்குஞ்சொலவரிதால். ()

இன்னணந்தெய்வத்துதிதுதித்திரவியீர்ம்புனற்றீர்த்தமாக்கானை
தன்னிகர்தவத்துக்காலவற்குரைத்தான்சாந்தமாரம்முனிவரனும்
பின்னவஞ்சடிலத்திறையவனருளின்பெற்றியைநினைந்தகமலர்ந்தான்
பன்னுமிச்சரிதங்கேட்பினுமந்நீர்ப்படிந்துளோர்பலன்பெறுகுவரால். (உஉ)

கோவிதாரத்துவசச்சருக்கம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்--அஎ0

---

## இருபதாவது

## பிரமதேவர் நாரதர்க்குத் தலவிசிட்டமுரைத்த சருக்கம்.

---

வேறு.

பண்டைச்சதுமறையோரிசைபயினாரதமுனிவற்
கண்டர்க்கிறைநல்லூரியலயனோதியசரிதங்
கொண்டிப்பொழுதுரைசெய்கெனக்கோதந்தவிர்சூதன்
றண்டப்பிறைமுடியானடிதொழுதன்பொடுசொல்வான். (க)

விண்ணம்புவிமுதலெங்கணுமேவுந்தவமுனிவ
னண்ணுந்தலகதியாதியநாடித்தொழுதாடி
யெண்ணந்தகுமிறும்பூதொன்றுகண்டீதெனத்தேர்வான்
றண்ணங்கமலத்தோனடிசார்ந்தானெறிசேர்ந்தான். (உ)

வீணைத்தவமுனிவேதியன்வேரிக்கமலத்தாள்
யாணர்க்கொழுமலர்தூவியிறைஞ்சிப்புகழேத்திச்
சேணிற்பொலிபொன்னிக்கரைத்தென்பாங்கரின்வரையொன்
றணிக்கனகச்சோதியதாகிப்பொலிதருமால். (௩)

# பிரமதேவர்நாரதர்க்குத்தலவிசிட்டமுரைத்தசருக்கம்.

அதன்மீதொருலிங்கஞ்சுவையமுதத்துருவாகி
விதமைந்துடைநிறமொன்றிவிளங்கித்தனிவைகும்
புதுவேரிமணக்குந்தெளிபுனல்வாவியுமொன்று
முதுவானவவுளதாலதின்மூழ்கிச்சிலதூயோர். (ச)

மன்னுஞ்சிவக்குறியொன்றினைவலம்வந்திசைபாடித்
துன்னும்படிவத்தோடுதுறக்கம்புகுகின்றார்
பொன்னினங்கமலத்தோயிறும்பூதங்கதுபுகல்வா
யென்னும்பொழுதவனபபதியியல்கேளெனவிசைப்பான். (ரு)

விம்மாவிகல்புரியாவரும்விறல்வாட்படையவுணர்
தம்மோடமர்மலைந்தேவலிசாய்ந்தோடியவரன்றே
ரெம்மாதிரமும்போயெமையெய்திக்குறையிரப்ப
வம்மாமுடியிமையோரொடுமெரிதன்னுலகடைந்தேம். (சு)

வேறு.

நஞ்சாரவணையிற்றீம்பானளிகடனுப்பணீடும்
விஞ்சுபேருலகமீன்றமேதகுநாபியோடுந்
தஞ்சம்யாவர்க்குமாகுந்தாளுங்கைத்தலமுங்கண்ணுங்
கஞ்சநாட்போதுபூத்தகருங்கடறன்னைக்கண்டேம். (எ)

காண்டலும்வணங்கிப்போற்றிக்கரகமலங்கள்கூப்பி
வேண்டியா*நிற்குமெல்லைவெள்வளையேந்துமாய
னீண்டுவந்தடுத்ததென்கொலிமையவர்யாருமென்று
பூண்டவான்கருணைதன்னுன்மொழிந்தனன்மொழிதலோடும். (அ)

வண்ணவான்பவளச்செவ்வாய்வார்கடல்வயிறுவாய்த்த
பெண்ணமுதுகந்தமாயன்பேருண்முகத்தைநோக்கி
விண்ணவர்குழாங்களெல்லாம்வெய்யகாரவுணர்போரிற்
றண்ணெனவுடைந்தார்வெல்லுஞ்சூழ்ச்சிநீசொல்வாயென்றேம். ()

நிலம்புகழ்பொன்னித்தென்பானீள்வளங்கனிந்துமல்கும்
வலஞ்சுழியதற்குக்கன்னிவான்றிசைமருங்கினுக
நலந்தருகாசியென்றோர்நற்றலமதன்கணுற்றோர்
சிலம்புளதாகுங்கேண்மின்றெக்கிணகயிலையென்றே. (கo)

காசியேயனைத்துநல்குங்கயிலையுமவணேயாகிற்
பேசுவதெவன்கொலெல்லாப்பேறுநீர்பெறுதறிண்ண
மாசினையெவர்க்குந்தீர்க்கும்வகையினுலெங்கோனுங்குத்
தேசுடையிலிங்கமாகிச்சேர்ந்தினிதுறைவனன்றே. (கக)

---

* 'நிற்குமெல்லை' என்று பிரதிபேதம்.

மரணகாலத்திறுங்குவைகுமன்னுயிர்கட்கெல்லாம்
பிரணவமனுவையையன்பெற்றியினுபதேசிப்பன்
றிரமதுவாகையாலேசெய்தவர்பலருமந்தப்
புரமதிலுற்றுவாழ்வர்புகலுவதினிமற்றுண்டோ. (கஉ)

வெய்யபோரிரணியன்றன்வெற்றியைவேண்டியாமங்
கையினைவணங்கிப்போற்றியாற்றல்பெற்றவனைவென்றே
முப்புமாறும்பர்நீருமொருங்குகாவிரியின்மூழ்கித்
துய்யவத்தலத்தின்மேவித்தோன்றலையருச்சித்தேத்தி. (கங)

மும்முறைவலங்கொண்டையன்முளரியங்கழல்சேவித்துச்
செம்மையினந்திமுன்னர்ச்சேர்ந்தெழுத்தைந்துமோதி
னும்மனத்துவந்தவெல்லாநொடிவரையடைவிரென்ன
வெம்மையின்றெடுத்தோன்கூறியினையனபிறவுஞ்சொற்றான். (கச)

வாகையுந்திருவும்வேண்டின்மாயாபீசத்திறேடு
மோகைகூர்வசியம்வேண்டினுறுங்காமபீசத்தோடு
மோகந்தீரவிஞ்சைவேண்டின்மொழியும்வாங்மயபீசத்தோ
டேகமானதரேயாகியியம்புமைந்தெழுதலைதயென்றான். (கரு)

என்றவன்பகரயாமுமிமையவரோடுமீண்டு
நன்றறிபுலவிர்நல்லூர்நாதனைவணங்கியேத்திக்
குன்றெனத்திரண்டதிண்டோட்கொலைத்தொழிலவுணர்தம்மை
வென்றுநீர்வாழ்திரென்றேம்விண்ணவர்விடைகொண்டாரால். ()

மணமலிசோலைசூழ்ந்தவளங்கெழுநல்லூரெய்திக்
கணமலைபரசன்பாவைகணவனைத்தொழுதுபோற்றி
யிணையெறியிமையோரெல்லாமீண்டுமோரவுணர்தம்மை
நிணமலிபடையால்வென்றுநிகரிலாச்செல்வமுற்றார். (கஎ)

இன்னனதிறங்களெல்லாமெய்துமத்தலத்தின்மேன்மை
முன்னவனன்றியாரேமொழிவாரத்தலத்தினங்கண்
மன்னியதீர்த்தமாடிவள்ளலைவணங்குமாந்தர்
பொன்னுலகெய்துமாறுபுதுமைத்தோபுகழ்மைத்தன்றால். (கஅ)

மலர்மிசையுறைவோனேந்துமகதியாழ்முனிவற்கிவ்வா
றலர்தருகருணைதன்னாலடைவுறப்பகர்ந்தானன்றேன்
றலமுழுதளித்தோன்செய்யசரணபங்கயங்கள்போற்றி
யிலவவாயுமைபாள்பங்கனின்னருள்வியந்துசென்றான். (ககூ)

படித்தவிச்சரிதந் தன்னைப்பகர்ந்துளோரிருந்துகேட்டோ
*ரெடுத்தபேரன்பினாலேயேட்டினில்வரைதல்செய்வோர்
கொடைத்திறலரசராகிக்குவலயமுழுதுங்காத்துச்
சுடர்ப்படைக்குலிசன்போலத்துறக்கநாடாள்வரன்றே. (௨0)

## பிரமதேவர் நாரதர்க்குத் தலவிசிட்டமுரைத்த சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-அ௬0.

---

## இருபத்தோன்றாவது

## மாயவனருச்சனைச் சருக்கம்.

---

வேறு.

வேதன்றனையருண்மலர்நாபியனடல்விறல்கூருங்
கோதந்தருமிரணியனைப்பொருது†குமைத்தெற்ற
நாதன்பதமலர்பரவுஞ்‡சரிதநவில்கென்னச்
சூதன்படிமையர்மகிழும்படியதுசொல்கின்றான். (௧)

கடல்சுற்றியநிலவலயமுமலர்கற்பகநாடு
முடன்மொய்த்தடிதொழவமரிற்பகைஞருடைந்தோடச்
சுடர்விட்டெறிமணிமவுலிக்கடவுளர்தொழுநாளு
மடல்பெற்றிகல்புரியிரணியனென்றோரசுரேசன். (௨)

மறையிற்புகழருமலனைவெத்துணையுமறந்தேதகப்
பறையிற்றனதுயர்நாமமதொன்றேபகர்கென்ன
முறையிட்டறநெறியின்றிக்குவலயமூன்றுந்தாந்
திறையிட்டவம்வரநெடிதுகொடுங்கோல்செயுநாளில். (௩)

வேறு.

நிரந்தரமவுணர்தம்மானிலைதளர்ந்திடுக்கணெய்திப்
புரந்தரன்முதலதேவர்புலம்பிநொந்திரங்கியேங்கி
யரந்தைதவோரகழ்ந்துபோக்கியஞ்சலென்றுலகங்காக்கும்
வரந்தருமாயன்முன்னர்வந்தனர்வருதலோடும். (௪)

---

* 'அடுத்தபேரன்பினாலேயலேகத்தில்வரைதல்செய்வோர்' என்று பிரதிபேதம்.

† 'குமைத்தேற' என்று பிரதிபேதம்.

‡ 'சாதம்' என்று பிரதிபேதம்.

செங்கண்மாலருளினோக்கி* த்தேவரைவருகவென்னா
விங்குநீர்வந்ததென்கொலியம்புமினென்றுகூற
வங்கண்வானுலகமாதியுலகங்களனைத்துமாலம்
பொங்கிமீதெழுந்தாலென்னப்பொருதிரணியன்கைக்கொண்டான். (ரு)

வெய்யபோரவுணனுமல்லதுவேறுநாங்க
ளையவோதுதலுக்கஞ்சியலம்வந்துதிரிந்தோமென்றார்
பையராவணையிற்றுஞ்சும்பண்ணவவெண்ணில்கால
நையுமாறவன்செய்தீமைநாவினானவிலற்பாற்றோ. (சு)

விண்ணுலகிழந்துநாங்கண்மெலிந்திடுமிடும்பைதீர
வண்ணலங்கலுழப்பாகவருள்சுரந்தளிக்கவென்னாப்
பண்ணவர்மவுலிசாய்த்துப்பதயுகம்வணங்கிப்போற்ற
வண்ணப்பூந்துளபத்தார்மன்வாய்மலர்ந்தினையசொன்னான். (எ)

பரசிவனருளினாலேபண்ணவர்கேண்மினின்னே
நரசிங்கரூபமெய்திநாமவன்றன்னைவீட்டி
விரைசெறிதருவினீழன்மேவிநீர்மெலிவொன்றின்றி
யரசுவீற்றிருக்கும்வண்ணமருளுதுமஞ்சலென்றான். (அ)

என்றலுமிமையோரெல்லாமிணையடிக்கமலம்போற்றி
மன்றலந்துளபத்தண்டார்மாயனைவணங்கிச்சென்றார்
பொன்றிகழாகத்தானும்புராந்தகனருளினாலே
வென்றிகொண்டிடுவனென்னாவிளங்குநல்லூரில்வந்தான். (கூ)

வந்தமால்பிரமதீர்த்தவண்புனலதனின்மூழ்கிச்
சுந்தரேசனைவந்தித்துச்சுருதிநூல்சொன்னவாற்றாற்
புந்தியின்மகிழ்ச்சிபொங்கப்பூசனைத்தேவயாண்டி
லந்தமில்பத்துநூறாண்டருச்சனைபுரிந்தான்மன்னோ. (க0)

அருச்சனைபுரியுங்காலையங்கணன்விடைமேற்றோன்ற
வரிச்சிறைத்தும்பிபாடும்வண்டுழாய்முகுந்தனோக்கிப்
பொருப்புவிற்குழைத்துவெய்யபுரம்பொடித்துலகங்காத்த
மருப்பொலிகொன்றைவேணிவானவபோற்றியென்றே. (கக)

செய்யபூங்கமலத்தாள்கள்சென்னியால்வணங்கிநிற்ப
வையனுமின்றுநீசெய்யருச்சனைக்குகந்தோம்வேண்டுந்
துய்யநல்வரங்கள்கேண்மோவென்றலுஞ்சுருதிபோற்று
மெய்யநின்னன்பேயல்லால்வேண்டுவபிறிதுமுண்டோ. (கஉ)

* 'அருளினோக்கி' என்று பிரதிபேதம்.

ஆயினுமண்டவாணர்க்கருந்துயரியற்றுந்தீர்க்குந்
தீயினும்வெய்யவெம்போர்த்* திறலிரணியனைவெல்ல
காயகநமியேற்காற்றனரசிங்கரூபநல்கி
யேயுநீருகிர்வாளாகவின்றுந்தந்தருளல்வேண்டும். (௧௩)

மிக்கவித்தீர்த்தநாமமேதினியோர்களெல்லாஞ்
சக்கரதீர்த்தமென்றேசாற்றுதல்வேண்டுமீண்டு
மிக்குளப்புனலின்மூழ்கியத்தலத்தைப்பாடியென்றன்னைத்
தொக்கவன்பொடுசேவித்தோர்துயர்களைந்திடுதல்வேண்டும். (௧௪)

என்றலுஞ்செங்கண்மாயனியப்பிவரங்களெல்லாங்
குன்றவிற்குழைத்தபெம்மான்குறைவிலாமகிழ்ச்சியுற்று
நன்றுநன்றென்றுநல்கிநலங்கெழுமிலிங்கத்தூடு
சென்றனன்பரனைப்போற்றித்திகிரிமாயவனுஞ்சென்றான். (௧௫)

சீற்றமுற்றெழுந்துவெய்யசெற்றுவெந்தானவர்தம்மை
யாற்றல்சாலிரணியப்பேரசுரனையாக்கையாற்றக்
கூற்றெனவுரைக்குமாறுகூருகிரான்றுகொன்ற
முற்றிசைப்புவிபுகோருமவிழ்ந்திடுமின்பமுற்றார். (௧௬)

மையபுரித்தடக்கைமாலும்வளங்கெழுநல்லூர்தன்னில்
மொளங்குழைபாகனுக்குப்பொருந்துபோற்றிசைப்பினாக
ளைலங்கொளும்விமானத்தன்னினரசிங்கரூபமாகிப்
பலங்கொடுத்துறைவனைப்பசியமுகமாயன்றே. (௧௭)

கச்சியாதரவாலந்தநரசிங்கமூர்த்திதன்னை
நிச்சமுமனத்திலெண்ணுநெறியுடையாளரெல்லா
மச்சமொன்றுமின்றியளவிலாவாற்றலெய்தி
முச்சகத்தவரும்போற்றமுறையுள்வாழ்வர்மாதோ. (௧௮)

துன்னியவிடபமாதச்சுக்கிலபக்கந்தன்னின்
மன்னியபன்னென்கென்னவருத்திடுந்திதியின்மாந்து
மன்னமழெதாழிந்திராவினமலனையாழிமாலை
நன்னயங்கொடுசேவித்தோர்நற்கதிசேர்வரன்றே. (௧௯)

உரைத்தவிச்சரிதந்தன்னையுள்ளுருகத்தினிதுகேட்போர்
வரித்துவோர்படிக்குநல்லோர்வாகைவேளரசராகித்
தரைத்தலமுழுதுங்காத்துத்தம்மனத்தச்சந்தீர்ந்து
மருப்பொலிகோதைபாகன்மலரடிநீழல்சேர்வர். (௨0)

மாயவனருச்சனைச்சருக்கம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-௧௧0.

* 'திறலிரணியனை' என்றும் 'திரவிரணியனை' என்றும் பிரதிபேதம்.

# இருபத்திரண்டாவது
# தேவர்களருச்சனைச் சருக்கம்.

வேறு.

மைந்துடையவுணர்கொடுஞ்சமர்க்கிசைந்துமாலவனைவலால்வந்த
விந்திரன்முதலவானவரெல்லாமிறைவனையமுதத்திருநட்டிச்
சிந்தனைமகிழ்ந்துபூசனைபுரிதற்செயலினைவிரித்துரையென்ன
வந்தமிழுவகைபூத்தருட்சூதனப்பெருந்தகையதுசொல்லுவானால். (௧)

கொந்தவிழ்ந்தலர்மந்தாரநாண்மலர்கள்கொய்தனரொருவழித்தொகுத்து
மந்தரப்பொருப்புப்பாற்கடலெனவெண்மதத்தினைநிறுவிவாசுகியைச் [ணைந்த
சந்திரனைநெடுந்தாணதனெடுங்கொழுவிற்றடங்கைபார்கடைந்தனர்கொ
வந்தமிழமுதகடம்பலவேந்தியணிபொன்னிக்கரையினூற்றார். (௨)

உற்றவர்பொன்னிமாநதியாடியுகந்தசக்கரதீர்த்தத்தி
பெற்றியின்மூழ்கித்தென்கயிலாயப்பிறங்கலைக்காசிமாநகரை
மற்றவர்நோக்கிஉளமெலாங்கண்டெனத்திடையதிசயமல்கிப்
புற்றரவணிந்தநம்பனைப்போற்றிப்பூசனைபுரிவதற்கமைந்தார். (௩)

சதுமறைதொகுத்தவிதியினுலமரர்தற்பரன்றனைப்போற்றி
விதுவினிற்பொழிபுநிலவெனக்கடத்தின்மேயவுத்தமுதினுலாட்டி
மதுமலர்சிதறிவந்தனைபுரிந்தேவரன்முறைவழாதருச்சித்துப்
பதுமவாண்முகத்தினுமையையுமிறைஞ்சிப்பாங்கினினந்துமுன்னெய்தி.()

நாரணன்பகர்ந்தவாறெழுத்தைந்துநவின்றனராயிரம்பருவந்
தாரணிமவுலியிமையவருறைந்தார்தாணுவுமாங்கதற்குவந்தே
யாரணப்பழிச்சவிடையின்மேற்றோன்றியன்னவர்காண்வரநின்றான்
கூரணிசுடர்வாட்†குலிசனேமுதலோர்குறுகினர்வணங்கியேத்தெடுத்தார்

மங்கைபங்குடையவள்ளலேவாழிவண்ணமைந்துடையனேவாழி
கங்கையஞ்சடைத்தனனேவாழிகண்ணுதற்கடவுளேவாழி
பங்கையனெல்விக்கனியிடையமுதாபடியவர்க்கெளிவந்தாய்வாழி
துங்கவெள்விடையின்பாகனேவாழிசுந்தரநாதனேவாழி. (௬)

காலனைக்காய்ந்தகாலனேவாழிகடம்பனையீன்றவாவாழி
யாலமுண்டிருண்டகண்டனேவாழியாலமர்செல்வனேவாழி
பாலனுக்கொருபாலாழிதந்தருளும்பரமனேவாழிமுத்தலைய
சூலவேலேந்துமமலனேவாழிசுந்தரநாதனேவாழி. (௭)

---

'தாளிணைப்போற்றி' என்று பிரதிபேதம்.
† 'குலிசனைமுதலோர்' என்று பிரதிபேதம்.

இன்னனதுதிகளெடுத்தெடுத்தேத்தி* யிமையவரிறைஞ்சினர்நிற்பப் [ளி
பொன்னெடுஞ்சிகரங்குழைத்தகைத்தலத்துப்புனிதனுங்கருணைபூத்தரு
யுன்னியவரங்கள்வேண்டுவகேண்மினும்பர்காளெனவுரைசெயலு
மன்னவர்நின்பாற்பத்திமையன்றியளியம்யாங்குறிப்பதொன்றுளதோ. (அ)

வேண்டுவததுவேபாயினுமையவெய்யகாரவுணரைவீட்ட
மூண்டெழுந்திண்டோண்மதவலிவேண்டுமுன்னம்பாயாட்டுமின்னமுத
மீண்டலிற்பிரமதீர்த்தமிப்புவிமேலின்னமுதக்தடமென்றே
யாண்டகைவிளங்கவேண்டுநின்பெயருமமுதலிங்கம்மெனவேண்டும். (கூ)

இத்தகைவரங்கள்வேண்டுமென்றமரரிணையடிவணங்கினரிசைப்ப
முத்தலைச்சூலமேந்துமெய்யகோனுமுறைமையாலிங்கவர்க்குதவி
வித்தகவிலிங்கத்தூடுசென்றுறைந்தான்விடைகொண்டுவிண்ணவர்புணர்
கொத்தெலாமறுத்துநூழிலாட்டயர்ந்துகுறைவிலாவின்பமுற்றிருந்தார்.

விண்ணவர்தமக்குவிசயநல்குதலால்விசயநாயகனெனப்புவிமே
லண்ணல்பேர்பெற்றானுரைத்தவிக்காதையயன்பினுமோதுவோர்கேட்போ
நண்ணலார்சாயஞாட்பிடைப்பொருதுநனந்தலையுலகெலாம்பரவ [ர்
வெண்ணரும்விசயமெய்தியீற்றிருந்தேயிமையவர்க்கதிபராகுவரே. (கக)

தேவர்களருச்சனைச்சருக்கம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-கூ௪௬.

# இருபத்துமூன்றாவது
# பிரமதேவர் நாரதர்க்குத் தீர்த்தமான்மியமுரைத்த சருக்கம்.

வேறு.

வளர்சடைவரிஞுப்பாடுகதியாழ்முனிவன்கேட்ப
தளிர்நாண்மலரின்வைகுநான்முகன்பெருவனசொற்ற
தெளிபுனற்றீர்த்தமேன்மைசெப்புகென்றரவோர்கூற†
வளர்பெருகுதனவவாமருந்தவர்க்கியம்புகின்றான். (க)

எண்டிசைவளாகத்துளவீர்ம்புனற்றீர்த்தமாதி
துண்டவெண்மதியந்தோயுஞ்சுந்தரகிரியின்வைகி
விண்டிடலரிதாயன்பின்மீண்டநாரதற்குப்பின்னு
முண்டகன்றீர்த்தமேன்மைமுகமலர்ந்துரைசெய்வானால். (உ)

* 'அடுத்தடுத்தோதி' என்று பிரதிபேதம்.
† 'அரவோர்கூற' என்று பிரதிபேதம்.

துவை . . சையலகிலாகதண்புனற்றீர்த்தய்யாவு
பொருமையின்மூழ்கித்தம்பாலுற்றயாசொழிப்பாமெனண்ணி
யிபாடீர்த்தத்தினைத்திப்பிறங்குமொவவொருகூறென்ற
பாயினையதைத்தீர்த்தப்பான்மைபாருரைக்கவல்லார். (௩)

குணதிசையதிற்பிராசைசோதிறென்றிசையினங்கண்
பணைமலிகவைவடக்கின்வார்புனற்கங்கைமேல்பாற்
றணைவுசலிகத்தேன்மை . . . தமணிகன்னிகைப்பே
ரிணையின்மெய்ப்பசுத்தத்தகமென்கிட்டவயிற்றேவதீர்த்தம். (௪)

தருமிமிறைசுத்தகவ்வொருவான்றிக்கிற்
பொருவிலாஞானதீர்த்தமபோதறுத்தானகிக்கின்
மருவயானதற்றீர்த்தம்வாசவனதிகநாப்பண்
கருதியவிருக்குவேதக்கவின்பெறுதீர்த்தமாமால். (௫)

அத்தகவிருந்தநாப்பணணிபகர்வேதத்தீர்த்த
நதுதலில்வருணவ்வாயுநாப்பணோச்சாமதீர்த்தந்
சதுர்மெனலிருண்பன்சார்ற்றுயீசானதேப்பண்
சிதலுதம்சயதர்வணமேபாசிதமெய்த்தீர்த்தமாயால். (௬)

உமையேசான . . . கவிர்ப்புனலாதிகட்டாநி
பூணைதீர்த்த . . . பமெருவிபுனறாபிரமதீர்த்த
மாணசக்கரதற்றீர்த்தமகஞ்சவயிறுபவிசுத்திசை
மானமொருசெப்பதீர்த்தமற்றவைக்களவையின்றே (௭)

சொல்லுமித்தீர்த்தகோடிதோய்ந்துளோர்கொடர்ந்துதீங்காப்
பல்பெருமபிறகளையாற்றுய்பாவமோகழ்ந்துபோக்கி
மல்லலபுவனத்தின்கண்மன்னவராகிவைகி
யெல்லைதீர்க்கேர்வாரேவருமபாவமாதே. (௮)

திக்கண்முற்றாள்குக்தாபதியவியபிரமதீர்த்தத்
தாகசமுற்றுடனன்றவணிமணிகன்னிகைக்கட்
பாகடுதுறைசெலினபடிதனன்றிரண்டாய்வோசப்
பொருந்துதீர்த்தத்தாளிப்பொருந்துகேட்டையின்கணன்றல்

ஆடிப்பூராடந்தன்னிலரும்பெறன்றானதீர்த்த
மாடிச்செனறுடிலுண்மைஞானமுண்டாங்கங்கைக்கட்
டேடிச்சென்றரிமாதசதிற்றிளைத்துக்கந்தரக்கின்காறு
வீடற்றுப்புனலுளாழ்கின்றையன்றனைநினைக்கே. (௧௦)

எழுத்தைந்து முரைத்திட்டே யோதியெண்ணூறு புமா நாத்தத் திர்
றெழுந்த குமரபாவெந்திர் சுந்தரேசனைக் கண்ணுற்றார்
குழைப்புறத் துருவும் வேற்கட் கொம்பொடுங் குழகன் கூறுந்
தழைதருளாந்தருவே வேண்டு நகைபனைந் குடன்மேற. (கக)

கன்னிமாதத்திற்றாய கங்கையின் மூழ்கிடன்பான்
மன்னிய சோமன் வெய்யோன் மருவுகு சேர் திதியினங்கட்
டுன்னுதென் புலத்துளோர்க்குச் சொற்றவா பிண்டநல்கி
னன்னவர் புரிந்தோராண்டகமகிழ் தருவரன்றே. (கஉ)

தங்குலத்துள்ளோர் வருதி தந்தண்புனற்றீர்த்தத் தன்னு
ளங்க நீர்தோய வெஞ்ஞான்று வரென்ன நோக்கிப்
பொங்கு நீர்க்கூவ நன்னிற் பொருநதித் தென்புலத்தோர்ற
லங்கணுய கனையல்லால் யாரதன் பெருமை சொல்வார் (கங)

ஐப்பசித் திங்கடன்னில் வரும்பெறற்றேய தீர்த்தத்
தொப்பில் காவிரி நற்றீர்த்தத் துண்மையி னுடினன்றே
ரெப்பெருமபவங்க ளெல்லாமீறு கண்டறிவாத
செப்புவாமுப்பாவபாகன் சேவடி நிழல் வாழ்வார். (கச)

மிக்க கார்த்திகை மாதத்து மேவு கார்த்திகை நன்னாளிற்
றக்கவைகரையின் முன்னர்ச் சாற்ற தர்வண தீர்த்தத் தி
னக்கனை நினைந்து மூழ்கின லியா நோய்கழுது நன்று
தொக்க பாவங்களருந்து நக்கமுமெய்ப்ப்ரலாபாள். (கரு)

மார்கழி மதியினங்கண் மன்னுயா திரைநன்னாள்
வேலொகெழு சாம தீர்த்தத் திரும்புனல் படிந்து கொன்றைத்
தாரணி சுந்தரேசர் தாள்பணிந்தை தகதெழுந்துஞ்
சீர்கெழு நந்தி முன்னர்ச் செபித்துளோர் பயந்துச் செல்லார். ()

மாசிநற்றிங்கடன்னில் வரும்புனர்ப் பிராசையாடிற்
பாசவேரரிந்து வெய்ய பஞ்சபாதகத்திற் றீர்வர்
தேசுலா முனிவர் தேவர் தென்புலத்தவரு மூழ்கி
யீசனைப் போற்றி வேண்டுமின்பமுற்றினிது வாழ்வார். (கஎ)

மக்களில்லாதமாந்தர் மக்களைப் பெற்று வாழ்வார்
மிக்கதோர் கல்வியில்லார் விஞ்சைபெற்றுண்மை தேர்வார்
தொக்கதீப்பிணிகளுற்றோர் சூழ்ந்த நோயினைத் துந்தீர்வார்
கைக்கிருந்திதியில்லாதார் கலின் பெறுகுபேரனுவார் (கஅ)

மாசிநன்மகத்திற்கீழ்பான்மன்னியபிராசையாடி
யோசைகூர்சிந்துதீர்த்தத்துவக்தனர்மூழ்கியன்பா
லீசனையேத்திப்பின்னரிந்திரதீர்த்தமாடி
யாசில்வானவனைப்போற்றினிம்பொருடாள்வரன்றே. (௧௯)

அங்கியந்தீர்த்தமாடியத்திசையமலைப்போற்றின்
வெங்கலிமுதலாயுள்ளவிலக்குதீயுண்டியெல்லா
நுங்கியபாவந்தீர்வர்நோன்மைசேர்மதிக்கின்கட்
டங்கியவவமிருத்துத்தவிர்க்குநெந்தீர்த்தந்தன்னில். (௨௦)

ஆடியத்திசையினூற்றலைவமிருந்துகரப்போற்றின்
வீடுதலரியவாயவெவ்வவமிருந்துநீங்கு
நீடியநிருதிதீர்த்தநேசித்துமூழ்கியந்தப்
பீடுயர்சிவனைப்போற்றிற்பிஞ்ஞகனருளினாலே. (௨௧)

பிறர்மனைநயந்ததீங்குபெயர்ந்திடும்வருணதீர்த்தத்
தறவினையாளர்மூழ்கியத்திசையரனைப்போற்றி
னுறுபிணிமகோதரந்தானெல்லையினீங்கும்வாயுத்
திறனுறுதீர்த்தந்தோய்ந்தத்திசையுறுசிவனைப்போற்றின். (௨௨)

எத்துணைப்பிணியுநீங்குமின்பமுமெய்திடச்சேர்வார்
பத்தியாற்குபேரதீர்த்தப்படிந்தத்திசையெங்கோனைச்
சித்தநின்புறச்சேவித்தோர்செல்வமுற்றின்பமேவி
யொத்தியவினையுநீங்கி *முறைமைப்பேறடைவரன்றே (௨௩)

ஈசானதீர்த்தமாடியீசானத்திசையைப்போற்றின்
மாசானவவிச்சைநீங்கிவரகதிபெற்றுவாழ்வார்
தேசானமீனத்திங்கட்சேர்ந்தவுத்தரநன்னாளி
லேசாதவிருக்குவேதநீர்ப்புனற்றீர்த்தமூழ்கின். (௨௪)

குட்டரோகத்திற்றீர்வர்கோதில்வைகாசித்திங்க
ளொட்டியவிசாகந்தன்னிலுரகதீர்த்தத்தின்மூழ்கி
னெட்டுடற்சர்ப்பதீதிநீங்குமற்றதனுண்மாய்ந்தோர்க்
கிட்டமாய்ச்சிராத்தஞ்செய்யினின்பவீடடைவரன்றே. (௨௫)

உரைத்திடுமித்தீர்த்தங்கட்குள்ளமான்மியங்களெல்லாந்
தரைத்தலையூழிகாலஞ்சாற்றினுமுடிவுறாதாற்
குரைத்தலைத்திரைக்குங்கங்கைசூழவிவெண்மதியொடேந்தும்
வரைத்தனுவல்லானல்லால்வகுத்தெவருரைக்கவல்லார். (௨௬)

---

* 'முறையுளி' என்று பிரதிபேதம்,

திசைமுகனினையவண்ணந்தீர்த்தமான்மியங்களெல்லாம்
வசைதவிர்மகதிநல்யாழ்மாமுனிக்கோதவன்றே
னசைவிலாவுள்ளத்தோடுமயன்கழல்சென்னிசூடி
யிசைவினன்மகிழ்ந்துபெம்மானின்னருள்வியக்கின்புற்றான். (உஎ)

செப்புமித்தீர்த்தமேன்மைதெரித்தவிச்சரிதஞ்சொல்வோர்
தப்பிலாதெழுதுந்தூயோர்தகுமியார்கேட்குநல்லோ
ரிப்பெரும்புவியிற்றீர்த்தம்யாவையுமாட்டியாடு
மப்பெரும்பலன்களெய்தியப்புறம்வீடடைவரன்றே. (உஅ)

பிரமதேவர் நாரதர்க்குத்தீர்த்தமான்மியமுரைத்த சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - [illegible]

## இருபத்துநான்காவது
## கழுகுமோசனச் சருக்கம்.

வேறு.

பங்கயத்தவிசினிருக்குநான்முகத்தோன்பண்ணமையாழ்முனிகேட்பக்
கங்கமாய்வடிவநீங்கியகாதைதகருணையாலுரைத்தவாறெமக்குப்
பொங்குகழலனையபுனிதமாதவத்தோய்புகலெனமுனிவரர்வினவ
வங்கணன்பாதந்தொழுதருட்சூதனக்கதைகூறுதலுற்றான். (க)

மாளவதேசமதன்கணுற்றிருப்போன்மறையொருதெரிந்தயாட்சியினு
ளாளுமேவேசநிதியெனப்புவியோர்நவிலுநாமத்தினையுடையோன்
கேளொடுமகிழ்ச்சிபூப்பவெண்வகையசேடில்செல்வத்தினனவன்பால்
வேளெனவனப்புப்பொருந்தியசத்யவிரதனென்றொருவன்வந்துதித்தான்.

அன்னகாதலனுமரும்பெறற்றுணையாயுள்ளனல்லலகண்டதற்பின்
முன்னவரீட்டுநிதியெலாமுகந்துமுறைபிறழ்விடார்மருளிட்ட
சென்னியர்கூத்தர்க்களித்தவரோடுஞ்சேர்ந்தநெறியினைநோக்கான்
பின்னலங்கோதைமாதரார்மோகப்பெருக்கினில்வீழ்ந்தழுந்தினனால். (௩)

பிறர்மனைவிழைந்துங்குலமின்மாணிழையார்பெண்மையைநயந்துமாழாந்
மற்வினைதுறந்துங்குலநெறிபிறழ்ந்துமந்தணர்தம்மொடுபகைத்துந் [து
திறனில்*லவகையபாதகமிழைத்துந்திரிந்தனன்றிரிடமந்நாளின்
மறைவொருவன்மாலிடத்தன்புவைத்துளானவனொடும்பகைத்தான்.

* "ஐவகையமாபாதகமிழைத்தும்" என்றும் பிரதிபேதம்.

பகைத்தனன் றருக்கியிகல்புரிந் திவன்மேற்பற்றியோருழைத்தனிசு
ளீச, மிகைத்தவறில்லான் றாய்மையிறசையைவீழ்த்தலாற் கழுகுருவாகி,
யுகைத்திடுங்குணபஞ்சவைந்துநீதிரியென் றுருத்தவன்சபித்தலுமன்னோ
ன், றகைத்திடநேற்றுன் றேட்டியங்கூர்வாய்த்தடஞ்சிறைக்கழுகுருவ
டைந்தான். (ரு)

கழுகுருவடைந்து திசைதொறும்படர்ந்துகளேபரநுகர்ந்துசெல்காலைப் [கி
பழுதினல்வினையின்பான்மையான்விண்ணம்பறந்துதென்றிசைமுகநோக்
மழுவலானல்லூரெல்லைவந்தடுத்துமறைவலான்றீர்த்தவாவியிறே
ரிழுதுடைமீனிறான்கவர்ந்துணபானீர்ம்புனற்குதித்தன்றே. (சு).

குத்தலும்பிரமதீர்த்தநீர்த்திவலைகொடியவெஞ்சிறைநீக்கழுகதனைப்
பொத்துதல்செய்யக்கணத்தினவ்வுருவம்போயதுதேவனுப்பின்ன
ரத்திசையவருநகாணநீள்சோதியிலங்குகாரிவிமானத்தினேறி
முத்தகமுரிஞ்சுமாமடமகளிர்முகிண்முலைத்தடத்தின்மூழ்கினனுள். (எ)

புல்லியகழுகுத்தேவனுப்வானோர்போற்றவீற்றிருந்ததுவென்று
னல்லிசைவல்லாயுளங்களித்தகந்தீர்நாடியேயாடுதல்புரிந்தோ
ரெல்லையில்வினையின்சிமிழ்ப்பெலாமொருவியீறிலாவின்பவீட்டதனை
யொல்லையினடைதலதிசயமோவென்றேமதிமவூர்தியாங்குரைத்தான். (அ)

உரைத்தனுயகிழ்ச்சிபூத்தாரநூலுமொண்சுலுமையொருபாக
னருத்திகூர்கருணைக்களவையற்றளதோவையபனல்லூரிலைப்போலத்
தனைத்தலமதன்கட்டவம்புரிதுண்டோசக்கசாகரத்தடம்போலத் [ளுள்.
திரைப்புனற்றடமேவேறுளதுகொலென்னுத்திசைமுகற்பணிந்துசென்றன

மொழிந்தவிக்காதையெழுதுநர்கேட்போர்முறைவிரித்தியம்புமேதகவோ
ரழுந்துபாதகங்களனைத்தையுமொருவியகலிடத்தரசுவீற்றிருந்து
தொழுந்தகையமரர்தொழுதனர்போற்றத்துறக்கமாடெய்திவெண்டிங்கட்
கொழுந்தணியவிப்பரயபரன்பதுமக்குரைகழனீழல்வாழ்ந்திருப்பார். (௧0)

கழுகுமோசனச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—கூருக.

## இருபத்தைந்தாவது
## வீதிவிடங்கச்சருக்கம்.

வேறு.

வானினின்றுவருமருமைத்திரு
மேனியாரருள்வீதிவிடங்கனூர்
கானிலத்துநல்லூர்வைகுமான்மியந்
தானிபப்பெனச்சூதனுஞ்சாற்றுவான். (௧)

அருந்தவத்தினிராதியுகத்தினிற்
றிருந்துகோலெண்டிசையுஞ்செலுத்தியே
பொருந்தலாரைப்புறங்கண்டரசுசெய்
திருந்துளான்முசுகுந்தனிணையிலான். (௨)

அன்னவேந்தன்வலிபுரக்குநா
ளின்னல்செய்யுமசுரரிடுக்கணாற்
பொன்னினாட்டிற்புரந்தரனாதியோர்
துன்னியன்னவற்கின்னனஞ்சொல்லுவார். (௩)

சீற்றமுற்றெழுதீயவவுணரா
லாற்றல்போய்மிகவல்லலுற்றேமெமைப்
போற்றல்செய்துபுரத்தற்குநீயவர்
கூற்றமாகக்குமைத்திடல்வேண்டுமால். (௪)

என்னவிண்ணோரிரத்தலும்வாட்படை
மன்னர்மன்னவன்மற்றிதுவேலது
சொன்னவாறுதொலைத்தசுரேசரைச்
சின்னபின்னஞ்செய்வேனென்றுசென்றனன். (௫)

சென்றுவேந்தனத்தேவர்குழாத்தொடு
நின்றுதானவர்நீள்குலம்யாவையுங்
கொன்றுவிண்ணங்குடியேற்றிவாசவன்
வென்றிசூடவிறல்புரிந்தானரோ. (௬)

மற்புயத்திகல்வாட்படைமன்னனைக்
கற்பகத்திருநாட்டுறைகாவலன்
பொற்புறத்தழுவிப்புகழ்ந்தேத்திநீ
யெற்பதத்தரசின்றுதந்தாயென்றான். (௭)

இன்றுநீசெயுதவிக்கியான்பிறி
தொன்றுகைம்மாறுதவுதலென்கொலாம்
வென்றிவேலவவாயினும்வேண்டுவ
நன்றுகேளதுநல்குவனீங்கென்றான் (௮)

உம்பர்நாயகனிவ்வணமோதலு
மெம்பிரானருளாலிகல்வேந்தனு
மம்பைவேலவனோடு*மமர்ந்தவின்
னம்பனார்தமைநல்கென்றியம்பினான். (௯)

* 'அமர்ந்தவிநம்பனார்தமை' என்று பிரதிபேதம்.

மன்னன்சொற்றலும்வாசவன் மாலவன்
முன்னநல்கியமூர்த்தியிவரெனப்
பின்னையொன்றுரையான்பெரிதேங்குபு
தன்னையும்மறந்தான்றடுமாறினன். (க0)

கொள்ளுகென்னுமக்கூற்றிடனுருயிர்
விள்ளுமாலெனவிம்மிதமுற்றவன்
றள்ளுமாலுரையென்னுமத்தன்மையால்
வள்ளன்மன்னவன்கொள்ளவழங்கினன். (கக)

வழங்கலோடுமகிதலமன்னவ
னழுந்துமன்பினொடாகம்புளகித்தே
விழுந்துபோற்றிவிமலனைக்கைக்கொண்டு
தொழுந்தகைமகவானைத்துதித்தரோ. (கஉ)

புற்றிடங்கொண்டபூரணனாண
னற்றந்தீர்த்தன்றரும்பெறன்மாமண
முற்றுறுமுலைமுண்டகப்பூமகட்
குற்றவாறுசெயூரில்வந்தெய்துவான். (க௩)

விண்ணணீங்கிவிரைமலர்ச்சோலைவாய்ந்
நண்ணந்தாதுதவழ்பொன்னிநாடெய்திக்
கண்ணகன்றகடிமதில்சூழ்வரு
மண்ணநல்லூரடைந்தனனென்பவே. (க௪)

பூவலர்ந்தபுதுமணச்சோலைவான்
காவெனுந்தகைகாட்டவிண்ணாட்டகந்
தேவலிந்திரனெய்தமராபதித்
தேவநன்னகர்போன்றதச்சீர்நகர். (க௫)

அன்னவண்ணமணிவளமல்குபு
துன்னுமந்தநல்லூரெல்லைதோன்றலு
முன்னவன்றினமூன்றிவண்வைகவே
மன்னசெய்கென்றோர்வாணியெழுந்ததால். (க௬)

வாணிவானத்திவ்வண்ணமெழுதலு
மாணிச்செம்பொனவிர்மணிமோலியான்
றாணுவின்னருடானிதுவேலது
பேணிச்செய்குவன்பெற்றியின்யானென்றான். (க௭)

இந்திரன்செய்சிறப்பினெழுமடங்
கந்தமின்றியவன்புடன்மன்னவன்
சுந்தராசலத்தொன்னாகரந்தனி
வெந்தைவீதிவிடங்கர்க்கியற்றினன் (௧௮)

திறல்கொண்மன்னவன்செய்தசிறப்புவாந்
திறைவன்பீடத்திருந்தசைந்தாடின
னறைகொள்பூமலர்நாற்றிக்கும்போர்ப்பவா
னுறையுந்தேவருமுற்றுநின்றாடினார். (௧௯)

அந்தணாளருமறையோசையுந்
தொந்தமாமன்பர்தோத்திரவோசையு
முந்துபல்லியமூண்டெழுமோசையுந்
சிந்துவேழுமுன்சேர்ந்தெனவார்த்தவே. (௨0)

ஊறிலாவளமுற்றநல்லூரிலோர்
கூறுநம்பன்குவலயம்போற்றவே
வீறுசித்திரவீதிவிடங்கனென்
றேறில்பேர்பெற்றிருந்தனனென்பவே. (௨௧)

வானநாட்டின்மணிமுடியிந்திரன்
றானமாமமராபதிதன்னினு
ஞானமூர்த்திநல்லூர்கண்டுறைவனே
மேலைவான்பதியாகிதற்கொப்பதே. (௨௨)

மூன்றுநாளவண்முற்றலுங்கோமக
னூன்றுகாதலினோடுநல்லூர்வயிற்
றோன்றுசோதிச்சுயம்புலிங்கம்பணிந்
தேன்றுவான்பணியாதுமியற்றியே. (௨௩)

கரும்புஞ்செந்நெலுங்காய்க்கமுகும்பிடைக்
தரும்புந்தண்ணடையாதியுமாதிக்கு
விரும்புபூசைக்குவேண்டியவையாவையுஞ்
சுரும்புலாந்தொடையானல்கிச்சூழ்வந்தே. (௨௪)

எந்தைவீதிவிடங்கரைப்பண்டிசை
வந்துவந்துவழியிடைவந்திப்பக்
கொந்துலாமலரோடுகொழும்பொனுஞ்
சிந்தியாரூர்த்திருநகர்ப்புந்தனன். (௨௫)

செம்பொற்கோயிலுட்டேவசிங்காதனத்
தும்பர்கோனையுவப்புடன்றாபித்து
நம்பனுக்குநயந்தனையாவையு
மிம்பர்காடெய்யவேநதல்செய்தானரோ. (உசு)

அந்தணூரதற்கெய்துங்காலையி
னெந்தைநல்லூரிடத்தமர்ந்தானென்றுற்
சுந்தராசலத்தொல்பதியாவைக்கு
மூந்துமாறுமொழியவும்வேண்டுமோ. (உஎ)

சாற்றுமிக்கதைதன்னைப்படித்துளோ
ரேற்றமாகவினிதுடன்கேட்டுளோர்
நாற்றிசைப்புவியாண்டுநயப்புடன்
வீற்றிருப்பர்பொன்மேதினிமீதரோ. (உஅ)

வீதிவிடங்கச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஅஎ.

---

## இருபத்தாறாவது

## அமர்நீதிநாயனார்சருக்கம்.

---

வேறு.

பாந்தளாபரணம்பூண்டபரம்பரன்கருணைதன்னாற்
சார்ந்தமார்புலிக்கான்மேலோன்றனயன்முன்சாற்றுகின்ற
வேந்தலாரமர்நீதிப்பேரிசைந்துளார்சரிதமிப்பா
ராய்ந்துரையென்னச்சூதனருந்தவர்க்குரைக்கலுற்றான். (க

பொங்குநீர்ப்பொன்னிநாட்டிற்போதவிழ்த்தளிபண்பாடும்
பங்கயப்பழனவேலிப்பழையாறைப்பதியில்வாழ்வார்
மங்கலமிகுந்தசெல்வவணிகர்தங்குலத்தில்வந்தா
ரங்கணர்க்கன்புமிக்காரமர்நீதியென்னும்பேரார். (உ

எந்தையாரடியார்க்கென்றுமீறில்பேரன்புதன்னாற்
பந்திபந்திகளாய்வைத்துப்பாங்குடனன்னமிட்டுக்
கந்தைகோவணங்களீவார்காலினுங்கலத்தினுலும்
வந்திடுநிதிகளுய்த்துவான்கதிப்பயனைக்கொள்வார். (ந

அண்ணலாரடியாருண்ணவறுசுவையடிசிலீவா
னண்ணுமாதவர்நல்லூரினகரினேர்மடமுண்டாக்கி
யெண்ணிலாச்சுற்றத்தோடுமெந்தைநல்விழவுகாணத்
தண்ணந்தார்வணிகர்கோமான்சார்ந்தவனுறையுங்காலை. * (௪)

அங்கண்மாஞாலமெல்லாமவர்புகழ்விளக்கச்செய்வான்
சங்கரன்பிரமசாரிதன்னுடைக்கோலங்கொண்டு
சிங்கவேறனையார்முன்னஞ்சேர்தலும்வணங்கியெந்தா
யிங்குவேதியராலட்டவின்னமுதருந்திப்பின்னர். (௫)

அடியனேனுய்யவாட்கொண்டங்கணர்திருநாண்முற்று
மொடிவிலாநேயத்தோடுமுறைந்துபின்னகல்வீரென்ன
நெடியமாலறியாவெங்கோனேர்ந்தனனுவகைபூத்துப்
படிமிசையெவர்நின்போலப்பத்திமைபுரிவரென்றே. (௬)

கரதலத்திருக்குந்தண்டிற்கட்டுகோவணமிரண்டி
லொருதனிக்கோவணத்தையொப்பிலான்கையில்வாங்கி
யிருநிலத்திதனுக்கொப்பதில்லையாலரிதிற்காத்துத்
தருகெனவுரைத்துமூழ்குந்தன்மையன்போலச்சென்றான். (௭)

சென்றவன்புனலிலாடித்திரும்பிவந்தவனைப்போல
நின்றுகோவணத்தைக்கேட்பநிகரிலாவன்பரோடி
யன்றுகோவணங்கொடுத்தவறைபுக்குக்காணாராகி
யின்றிதற்கென்செய்கோவென்றில்லொடுமிரங்கிச்சோர்ந்தார். (௮)

கோவணமொளித்தகள்வர்குரைகழற்சரணம்போற்றிக்
காவல்கொண்டெய்த்தியென்னக்கருணையாலென்கைதந்த
தாவில்கோவணத்தைக்காணேன்றமியனேன்றவறெண்ணாது
பூவணப்பட்டுநூலாற்புனைந்தகோவணங்கொள்கென்றார். (௯)

என்றலுஞ்சினந்துபெம்மானெரியெழவிழித்துநோக்கி
நின்றவர்தம்மைச்சீறிநிகரில்கோவணங்கள்கொள்வா
னொன்றியவன்பன்போலவுலகினைமருட்டுகின்றாய்
சென்றதுகொணர்தியுன்பொய்ச்சிமிழ்ப்பினிற்படேனியானென்றான்.

அளவிலாமாயைவல்லவண்ணலிவ்வாறுகூற
வுளநடுக்குற்றுக்கண்ணீரொழுகநெட்டுயிர்த்துப்பின்னுந்
தளவவாணகையாளோடுஞ்சரக்கறைபுகுந்துதேடி
விளையுமாறென்னோவென்னுமீண்டடிவீழ்ந்துசொல்வார். (௧௧)

* 'சார்ந்தனருறையுங்காலை' என்று பிரதிபேதம்.

தந்தகோவணத்தைக்காணேன் றூயனேன்பொய்த்ததில்லை
யெந்தைநீபொறுத்தியெவ்வேறெண்ணில்கோவணங்களீவே(ன்)
சிந்தனைசெய்யேலென்னத்தீயெழநகைத்துநீகொண்
டுந்துகோவணத்துக்கொப்பதோன்றெமக்களையுமென்றான். (௧௨)

ஒப்பதிங்குளதேலையவுறுதுலையிடுதிநேராய்
வைப்பன்வேறுள்ளதெல்லாமற்றிதுடன்பாடென்னக்
கைப்பதுமத்திற்கொண்டகவின்கொள்கோவணத்தையன்றான்
செப்பியவாறேயுய்த்தான்றெருமரலொழிந்துசெல்வா. (௧௩)

திவ்வியவடிவங்கொண்டோன்சேர்த்தகோவணத்துக்கொப்ப
வெவ்வொருகோவணங்கொண்டெய்த்தலுநிறைநில்லாம
லெவ்வமுற்றுயரநாய்கரிஃதிறும்பூதென்றெண்ணி
யவ்வியந்தீர்ப்பார்வல்லேயறையிடைப்புகுந்துவாரி. (௧௪)

தூயகோவணந்தின்சும்மைதூசுடைப்பொதிகளிந்த
மாயிருஞாலம்விற்குமணிவிளிம்பெறிந்தவாடை
மேயபூம்பட்டுமிட்டுமேவரக்காணார்பின்னும்
பாயொளிப்பணியும்பொன்னும்பலபண்டத்தொ[illegible]மிட்டார். ( )

இடுதலுஞ்சமனில்லாமலெக்கையார்தட்டுத்தாழ
வுடையதோர்பொருண்மற்றின்றியுற்றதம்மனைவியோடு
மடநடைமகாருந்தாமுமகிழ்ந்தனரேறுங்காலை
விடையவர்தட்டினோடுமேவாநின்றதன்றே. (௧௬)

நிற்றலுமேறுநட்டேநீடொளிவிமானமாக
வெற்றிமால்விடைமேலேறிவிளங்கிழையொருபால்வைகக்
கற்றையஞ்சடையாரன்னோர்கண்களிகூரத்தோன்றி
முற்றுபேரின்பவீடுமுறைமையாலடையச்செய்தார். (௧௭)

ஆதலானல்லூர்மேயவண்ணலாருளின்றன்மை
யோதுமாறெளிதோயார்க்குமூழிதோறுரைசெய்தாலு
மாதவர்கேண்மினிந்தவண்ணநற்பதியின்மேவிப்
பூதலம்புகழவின்பம்பொருந்தினரனேகர்மாதோ. (௧௮)

கற்றவர்கேட்போரிந்தக்காதையைக்காதல்கூர
முற்றவும்வரைதல்செய்வோர்முதலகாண்டுபின்னர்ப்
பெற்றமீதுயர்த்தபெம்மான்பேரருளதனுலென்று
முற்றபேரின்பவீட்டினுகந்துவீற்றிருப்பரன்றே. (௧௯)

இப்பரிசுகந்துசூதனெம்பிரானருளினாலே
தப்பிலாவிரதம்பூண்டசவுனகன்முதலியோர்க்குச்
செப்பினனவருநல்லூர்த்திருமலைச்சொக்கிபாக
னொப்பருங்கருணைவாழ்த்தியுளங்களித்துவகைபூத்தார். (உ0)

சூதமாதவனைநோக்கித்தொழத்தகுமுனிவரெல்லா
மோதுணர்வியாதன்சொற்றமுறைமையானல்லூர்மேன்மை
யாதரம்பெருகத்தேனுமமிர்தமும்போலச்சொற்றாய்
நீதியாலுணர்ந்தேமெல்லாநின்னையார்நிகர்ப்பரென்றார் (உக)

வள்ளலாருகந்தநல்லூர்மான்மியமிருந்தவாறுந்
தெள்ளருநீர்த்தீர்த்தம்யாவுஞ்செழித்தவண்சிறந்தவாறு
முள்ளினோர்க்கெங்கோனின்பமுதவியவாறுநோக்கித்
தள்ளருந்தவத்தோரெல்லாந்தமதுடல்பூரித்தாரால். (உஉ)

நறுமலர்ச்சோலைசூழுநல்லூரிலாண்டார்செய்யுந்
திறல்செழுகருணைவாழ்த்தித்திருமலைச்சொக்கியென்னும்
பிறைநுதலிமயவல்லிபேரருள்வாழ்த்திநாளு
முறுதலுவகைபூத்தாரோங்கியதுலகமெல்லாம். (உங)

திருமலைச்சொக்கிவாழிதேகளிவிநாயகன்றன்
மருமலர்த்தாள்கள்வாழிமணவாளக்கோலம்வாழி
வெருவுதறவிர்க்குங்காசிவிநாயகன்முதலோர்வாழி
முருகவேள்வாழிதிவ்யமூர்த்திகளெவரும்வாழி. (உச)

அந்தணர்வாழிநல்லூரணிவளம்வாழியோங்குஞ்
சுந்தரசைலம்வாழிசுயம்புநல்லிலிங்கம்வாழி
சந்ததந்தலத்தோர்வாழிதானிகர்முதலோர்வாழி
செந்தமிழ்ப்புராணம்வாழிசெப்பினோர்வாழிவாழி. (உரு)

திருப்பணிசெய்வோர்வாழிதிருமலைச்சொக்கிபாகர்
மருப்பொலிபாதத்தன்புவைத்துளோர்வாழியென்றும்
விருப்பமீதூரப்பூசைவிழாவொடுபுரிவோர்வாழி
தரைத்தலம்புரக்கும்வேந்தர்சந்ததம்வாழிவாழி. (உகூ)

அமர்நீதிநாயனார்சருக்கம் முற்றிற்று.
ஆ திருவிருத்தம்—க0கா.

# நல்லூர்ப் புராணம்
## முற்றுப்பெற்றது.